பக்கங்கள் 24
யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 361 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 6, சனி 22.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

காலநிலை
அதிக மழைவீழ்ச்சி காணப்படும்



# வெறும் 100 நாள்களில் ஜனாதிபதி ஆட்சி ஒழிப்பு

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவிப்பு.
பிரதமராவார் ரணில். 18ஆம் திருத்தம் முற்றாக நீக்கப்படும்.



யாழ்ப்பாணம், நவ. 22
தான் வெற்றி பெற்று ஜனாதிபதி யானால் 100 நாள்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிடுவார் என்று பொது எதிரணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் தானே என்ற உத்தியோக பூர்வ அறிவிப்பை நேற்று மாலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் வெளியிட்ட மைத்திரிபால, தனது அரசில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவார் என்றும் அறிவித்தார். அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை இல்லாதொழித்து நாட்டை புதுயுகத்துக்குக் கொண்டு செல்வேன் என்றும் அவர் சூளுரைத்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட நிலையில் மைத்திரிபால சிறிசேனவே பொது வேட்பாளராக நியமிக்கப்படுவார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. எனினும் மைத்திரிபால அரசில் இருந்து வெளியேறிச் செல்லாமல் இருப்பதற்கான தீவிர முயற்சிகள் ஜனாதிபதி தரப்பால் மேற்கொள்ளப்பட்டன. இந்த

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தல்

யாழ்ப்பாணம், நவ. 22
ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளரால் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டுள் ளது. அத்துடன் வேட்புமனுத் தாக்கல் டிசெம்பர் 8 ஆம் திகதி இடம்பெறும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ வேண்டுகோள், நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகளைக் கடந்த 19 ஆம் திகதி பூர்த்தி செய்திருந்தார். அதற்கு மறுநாளே ஜனாதிபதித் தேர்தலுக்கான அழைப்பை விடுத்தார்.

அதையடுத்து தேர்தல்கள் ஆணையாளரால் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் வேட்பு மனுத் தாக்கல் என்பவற்றுக் கான திகதி நேற்று வெளியிடப்படும் என்று நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் நேற்று மாலை விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் டிசெம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் என்றும், ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 8 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் என்றும்அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-5)

## ஆரம்பமானது போர்

யாழ்ப்பாணம், நவ. 22
நிறைவேற்று அதிகார முறைக்கு எதிரான போர் ஆரம்பித்துள்ளது என்று தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தமை தொடர்பில் மன்னிப்புக் கோரினார்.

"நான் நாட்டுக்காகச் செயலாற்றவே அரசியலுக்கு வந்தேன். அதனைக் கருத்தில் கொண்டு எனது பதவிகளைத் துறந்து, மஹிந்தவின் இராஜாங்கத்தை ஒழிக்க நாம் தற்போது முன்வந்துள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.



❖22 ஆம் பக்கம் பார்க்க

## உயிரைத் தியாகம் செய்வதற்கு தயார்

### மைத்திரிபால உருக்கம்

யாழ்ப்பாணம், நவ. 22
"நான் வீட்டிற்கு போகும் போது எனது பிள்ளைகள் மற்றும் மனைவி ஆகியோர் என்னிடம் கூறுவார்கள், 'மனசாட்சிப்படி செயற்படுங்கள். தாங்கள் உயிர் துறக்கவும் தயார். நீங்கள் அனுபவிக்கும் வேதனையை நாங்கள் அறிவோம்.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## கொலை செய்வார் மஹிந்த

### அஞ்சினர் பிள்ளைகள். மனம் திறந்தார் சந்திரிகா.



யாழ்ப்பாணம், நவ. 22
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக்குப் பல கொடுமைகளைச் செய்துள்ளார். மீண்டும் அரசியலுக்குச் செல்ல வேண்டாம். மஹிந்த கொலை செய்து விடுவார் என்று எனது பிள்ளைகள் எச்சரித்தனர்.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஆராய்ந்தே முடிவெடுக்கும் தமிழ்த் தேசிய-கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஆராய்ந்தே முடிவெடுக்கும் என்று தெரிவித்துள்ளது.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவுக்கு நேர்ந்ததே தற்போதைய வேட்பாளருக்கும்

### எச்சரிக்கின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ



யாழ்ப்பாணம், நவ. 22
2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஏற்பட்ட நிலைமை, தற்போதைய தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக களமி

❖22 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரிக்கு மக்கள் உற்சாக வரவேற்பு

யாழ்ப்பாணம், நவ. 22
பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் மைத்திரிபால சிறி சேனவுக்கு நேற்று வெடி கொளுத்தி உற்சாக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வந்து கோஷம் எழுப்பினர்.

கொழும்பு பத்திரமுல்லவில், சுகாதார அமைச்சின் நிகழ்வில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை பங்கெடுத்தார். இதன் போது அவர், 'நான் கலந்து கொள்ளும் இறுதி அரச வைபவமாகவும் இது இருக்கலாம்' என்று நாசூக்காகத் தெரிவித்திருந்தார்.

❖22 ஆம் பக்கம் பார்க்க

## ஆளும் கட்சிக்கு இன்னும் காத்திருக்கிறது அதிர்ச்சி

### நழுவியோடத் தயாராக பலர் வரிசையில்

யாழ்ப்பாணம், நவ. 22
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் பலர் கட்சி தாவவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே முக்கிய அமைச்சர்களும்,

❖22 ஆம் பக்கம் பார்க்க

## சூடு பிடிக்கின்றது தேர்தல் களம் கட்சித் தாவல்கள் இப்போதே தாராளம்

யாழ்ப்பாணம், நவ. 22
ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், கட்சித் தாவல்களும் இருபக்கமும் அரங்கேறத் தொடங்கியுள்ளன.

ஆளுங்கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவுவதற்கு ஒரு டசின் தொகையினர் காத்திருக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது. பலர் நேற்றைய தினம் இணைந்துள்ளனர். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் தாவல் கள் இடம்பெற்றுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாதம் நடைபெறவுள்

❖22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"

-மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)



பொதுவேட்பாளர் அறிவிப்பு தொடர்பாக நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன

# அமைச்சு பதவிகளை பறித்தார் ஜனாதிபதி!

யாழ்ப்பாணம், நவ. 22

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, துமிந்த திஸாநாயக்க, எம்.கே.டி .எஸ்.குணவர்த்தன ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிரணியின் பொது வேட்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் சுகாதார அமைச்சராக கடமையாற்றிய மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பதுடன் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட அமைச்சர்கள் இதற்கு ஆதரவளித்திருந்தனர். இதனையடுத்தே அவர்கள் அனைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று இரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கூட்டப்பட்டது. அலரி மாளிகையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எட்டப்படலாம் என்று நம்பப்படுகின்றது. (ற-5)

# 28 தேர்தல்களில் வென்ற நாம் இந்த தேர்தலிலும் வெல்வோம்

## ஜனாதிபதி மஹிந்த இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, நவ.22

28 தேர்தல்களில் வெற்றி பெற்ற இன்றைய அரசாங்கம் 29 வது தேர்தலிலும் வெற்றி பெறும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொரளை கம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற திவிநெகும திட்டத்தின் முதலாவது தேசிய மாநாட்டில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நான் நாட்டு மக்களை நம்புகிறேன். நாட்டை நேசிக்கும் மக்கள் இருக்கும் வரை தற்போதைய அரசை, நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை மறுபுறம் திருப்ப எவருக்கும் முடியாது.

ஏழைகள் ஏழைகளாக இருக்க வேண்டும் என்பது எமது தேவையல்ல. மக்களின் தேவைகளுக்கு அமைய இவை கட்டியெழுப்படுகின்றன. மக்களின் விருப்பு வெறுப்புகளை புறந்தள்ளி விட்டு கிராமத்தை கட்டியெழுப்ப முடியாது. மக்களை கட்டியெழுப்ப முடியாது.

மக்கள் கோரிய அனைத்தையும் இன்றைய அரசு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தது. மக்களின் உரிமைகளை இல்லாமல் செய்யாது அரசின் பொறுப்பு நிறைவேற்றப்பட்டு வருகிறது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பங்குச் சந்தை வீழ்ச்சி

கொழும்பு, நவ.22

இலங்கையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று கொழும்பு பங்கு சந்தை வீழ்ச்சியடைந்துள் ளது.

இதனடிப்படையில் நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது இன்றைய மொத்த விலை சுட்டெண் 128.7 புள்ளிகளாக வீழ்ச்சியடைந்துள்ளது. எஸ் என்ட் பி எஸ்.எல் 20யின் விலை சுட்டெண் 63 புள்ளிகளாக குறைந்துள்ளது.

நேற்று ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைமைகள் இதற்கு காரணமாக இருக்கலாம் எனவும் இது தற்காலிகமான நிலையமையாக இருக்கலாம் எனவும் கொழும்பு பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதும் இவ்வாறான ஒரு நிலைமை காணப்பட்டது. அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களைக் கோரியிருந்தனர். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டமை பங்குச் சந்தையில் மாற்றத்தை ஏற்படுத்தியமை நேற்றே ஆகும். (ற)

# மன வேதனையில் ஜனக

கொழும்பு, நவ.22

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் லக்கலையில் 'காணிகளைபகிர்ந்துவருவதுஉண்மை. இது குறித்து ஜனாதிபதியிடம் முறையிட்ட போதிலும் இது வரை தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், நான் மிகுந்த மன வேதனையில் இருக்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

"லக்கலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் காணிகளை பகிர்ந்தளித்து வருவது உண்மை. இது குறித்து நான் ஜனாதிபதியிடம் கூறினேன், தீர்மானம் ஒன்றை எடுப்பதாக ஜனாதிபதி கூறினார். இது வரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இது குறித்து நான் மனவேதனையில் இருக்கின்றேன்"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன், "ஜனக பண்டார தென்னக்கோன் காணி அமைச்சராக இருந்தாலும், மாத்தளையில் பிரதியமைச்சர் லக்ஸ்மன் பெரேராவே காணிகளை பகிர்ந்தளித்து வருகிறார். "- என்று தெரிவித்தார். (ற)

## அவசரமாக. கூடுகிறது ஸ்ரீ.சு.க. மத்திய குழு

கொழும்பு, நவ.22

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அவசர மத்திய குழுக் கூட்டம் நேற்றிரவு அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அது தொடர்பான தகவல்களைப் பெற முடியவில்லை.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்த அவசரக் கூட்டத்தில் பிரதமர் பதவிக்குப் பொருத்தமான நபர் குறித்த கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற)

# பொம்மைத் துப்பாக்கியுடன் அரசதரப்பு ஆதரவாளர்கள்

கொழும்பு, நவ.22

கொழும்பு, புதிய நகரசபை மண்டபத்தில் நேற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவா ளர்கள் எனத் தெரிவிக்கப்படும் சிலர் கையில் பொம்மைத் துப்பாக்கியுடன் சுற்றித்திரிந்ததாக அறியக் கிடைத்துள் ளது.

பொது வேட்பாளரை அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று பிற்பகல் நடை பெற்றது.

இதன்போது, பொது வேட்பாளராக சுகாதார அமைச்சரான மைத்திரிபால சிறிசேன உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டார்.

நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் வருகை தந்து பட்டாசுகளைக் கொளுத்தியும் கோஷமிட்டும் தமது ஆதரவினை மைத்திரிபாலவுக்குத் தெரிவித்தமையால், அப்பகுதியில் பாதுகாப்பு கடுமையாக இருந்ததுடன் வாகன நெரிசலும் அதிகமாக காணப்பட்டது.

மேலும், அங்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படும் சிலர் கையில் பொம்மைத் துப்பாக்கிகளை வைத்து கொண்டு அவ்விடத்தில் நடமாடியதாகவும்அறியக் கிடைத்துள்ளது.

இதன்காரணமாக, அப்பகுதியில் சற்றுப் பதற்ற நிலை காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ற-சி)





எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்டதைக் கொண்டாடும் வகையில் களுத்துறையில் பெரும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. களுத்துறை போதி மர சந்தி தொடக்கம் நகரம் வரை நிறைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தியும், ஜயவேவா கோஷம் எழுப்பியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அங்கு வழமையாக ஆதிக்கம் செலுத்தும் ஆளும்தரப்பு ஆதரவாளர்கள் அவற்றை இம்முறை மௌனமாக வேடிக்கை பார்த்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 06 சனி (22.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 361


# பிரதமர் ஜயரத்னவை பதவி விலக அழுத்தம்



## தொலைபேசி மூலம் விடுத்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், நவம்பர் 22

பிரதமர் தி.மு.ஜயரத்னவைத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உடனடியாகப் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(19ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.தே.கவுடன் இணையுமாறு மு.காவுக்கு அழைப்பு

கொழும்பு, நவ.22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தம்முடன் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அழைப்பு விடுத்தது.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே ஐ.தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல இந்த அழைப்பை விடுத்தார்.

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸ், இன்று சுயாதீனம் பற்றி பேசுகின்றது. அளுத்கம சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழுவொன்று நியமிக்கப் படும் எனக் கூறப்பட்டது. அது தற்போது எங்கே?

எனவே, செய்த தவறுகளைத் திருத்திக்கொள்வதற்காக எம்முடன் வந்து சேருமாறு நான் நீதியமைச்சர் ஹக்கீம் தலைமையிலான மு.காவுக்கு

(19ஆம் பக்கம் பார்க்க)

## கட்டி வைத்து தாக்கினார்கள் இலங்கைக் கடற்படையினர்

### விடுதலையான இந்திய மீனவர் பேட்டி

இராமநாதபுரம், நவ.22

இலங்கைக் கடற்படை தம்மைக் கட்டி வைத்து அடித்ததாகவும், சிறையில் துன்பப்பட்டதாகவும் சொந்த ஊர் திரும்பிய மீனவர்கள் கண்ணீர் மல்க ஊடகங்களுக்கு பேட்டியளித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுப் பின்னர் பொது மன்னிப்பின் அடிப்படையில் கடந்த 19 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட 5 மீனவர்களும் நேற்றுத் தங்கச்சிமடம் சென்றடைந்தனர். மீனவர் சென்ற வழிதோறும் மேளதாளங்களுடன் பட்டாசுகள் வெடித்தும் இனிப்புகள் வழங்கியும், மலர்கள் தூவியும் பொதுமக்கள் வரவேற்றனர்.

இதனையடுத்து விழா மேடைக்கு வந்த 5 மீனவர்களையும் அவர்களது உறவினர்கள் கண்டியணைத்துக் கொண்டு தங்களின் அன்பைப் பரிமாறினார்கள்.

இதனையடுத்து தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சுந்தரராஜ், மீன்வளத்துறை செயலர், ஆணையர் ஆகியோர் பொன்னாடை (19ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸில் பெண்ணுடன் சேஷ்டை ராணுவச் சிப்பாய்க்கு எச்சரிக்கை

வலி.வடக்கு, நவ 22

மதுபோதையில் மினி பஸ்ஸில் பயணம் செய்த இராணுவச் சிப்பாய் பெண்களுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டவேளை மக்களால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் மானிப்பாயில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகா நோக்கிப் புறப்பட்ட மினி பஸ்ஸில் குறிப்பிட்ட இராணுவச் சிப்பாயும் ஏறியுள்ளார். இவர் பஸ்ஸில் இருந்த பெண்ணுடன் அங்க சேஷ்டை புரிந்துள்ளார். குறித்த பெண் இது தொடர்பில் தனது சகோதரர்களுக்குக் கைத்தொலைபேசியில் கூறியுள்ளார்.

பெண்ணின் சகோதரர்கள் மானிப்பாய் சந்தைக்கு அண்மையாகக் குறித்த மினி பஸ்ஸை மறித்து இராணுவச் சிப்பாயை பஸ்ஸில் இருந்து இறக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பொது

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவருக்கான தண்டனை மாற்றமில்லை

### நீதியமைச்சு கூறுகிறது

யாழ்ப்பாணம், நவ 22

கஞ்சா போதைப் பொருள் கடத்திய குற்றத்துக்காக சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 3 பேருக்குமான தண்டனையில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 5 பேர், இலங்கை மீனவர்கள் 3 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் 8 பேருக்கும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் இந்திய மீனவர்கள் 5 பேரும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டு இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர்.

ஆனால் இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரி 3 மீனவர்களினதும் உறவுகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வழக்கு ஒன்று நீதிஇரண்டா? என்று கேள்வியெழுப்பி அவர்கள் நேற்றுமுன்தினமும் ஆர்ப்பாட்டம் செய்து மூவரையும் விடுதலை செய்யுமாறு கோரியிருந்தனர்.

இந்த நிலையில், இலங்கை - இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 5 பேரும் விடுவிக்கப்பட்டனர். ஆனால் உள்ளூர் சட்டப்படி 3 இலங்கை மீனவர்களுக்கும் சாவுத் தண்டனை தீர்ப்பு நடைமுறையிலேயே உள்ளது என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-4)

## சபையில் நேற்று பரபரப்பு

கொழும்பு, நவ.22

எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன களமிறங்கவுள்ளார் என்ற செய்தியால் கொழும்பு அரசியலில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்ட நிலையில், நாடாளுமன்றத் திலும் அதன் தாக்கம் வெளிப்பட்டது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை காலை சபைக்குள் பிரவேசித்ததையடுத்து அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழமைக்கு மாறாக அவருடன் உரையாடிக்கொண்டிருந்தனர்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர்களான நிர்மல கொத்தலாவல, எம்.டி.கே.எஸ்.லால் குணவர்தன ஆகியோர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆசனத்துக்கு அருகில் வந்திருந்து அவருடன் உரையா

(19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவனை தேடிவந்த இனந்தெரியாதோர்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவரது வீட்டுக்கு நேற்றிரவு சென்ற இனந்தெரியாத நால்வர் குறித்த மாணவன் தொடர்பில் விசாரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்வேலியில் உள்ள மாணவனின் வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் அவரது தந்தையார் உதயனுக்குத் தெரிவித்துள்ளதாவது:-

நேற்று இரவு 8 மணியளவில் எமது வீட்டுக்கு இரண்டு மோட்டார் சைக்கிளில் நான்கு பேர் வந்தனர். அவர்கள் கறுப்பு நிற கோட் அணிந்திருந்தனர். எனது மகனை வரச் சொல்லுமாறு கூறினர். அவர்களை யார் என்று கேட்டபோது, தாம் அவரது வகுப்பு மாணவர்கள் என்ற

(19ஆம் பக்கம் பார்க்க)

## போதனா வைத்தியசாலை கன்ரீனுக்கு சாப்பாடு தயாரிக்கும் இடத்தில் சீர்கேடு

### யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கு உணவு தயாரிக்கும் இடம் சுகாதார வசதி இன்றிக் காணப்பட்டதால் அதை உடனடியாகச் சீல் வைத்து மூடுமாறு கோரி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் உள்ள மிகவும் வசதி குறைந்த இடம் ஒன்றில் வைத்தே இவ்வாறு உணவு தயாரிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. குறித்த உணவு தயாரிக்கும் இடம் சுகாதார வசதிகள் இன்றியே காணப்படுகின்றது.

வைத்தியசாலை சிற்றுண்

(19ஆம் பக்கம் பார்க்க)

## மைத்திரிபாலவுக்கு ஐ.தே.க முழு ஆதரவு

கொழும்பு, நவ. 22

பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஆதரவு தெரிவித்துள்ளது. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேசியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கும் கட்சியின் ஜி-20 கூட்டமும் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் பொது வேட்பாளராக ரணில் போட்டியிடுவதில்லை என்றும், பொது வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் அவரே முடிவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து நாடாளுமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில், எதிர்க்கட்சித் தலைவரும், அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னரே, மைத்திரிபால தன்னை எதிரணியின் ஜனாதிபதி பொது வேட்பாளர் என்று அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மரண அறிவித்தல்



## திருமதி நாகம்மா ஆறுமுகம்

அளவெட்டி மேற்கு, தம்பளையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா ஆறுமுகம் நேற்று (21.11.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், மங்கையர்க்கரசி, இராமச்சந்திரன் (ஆசை), சந்திராதேவி, பராசக்தி (பவளம்), பாலச்சந்திரன் (பாலா), சிவசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசு, சரஸ்வதி, குமாரசாமி, பவோற்பவன், நிர்மலா, தவராசா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டடி, உடுவில் கல்வயல், 021 224 1453 (54450) (4.6.3) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை நாகராஜா



இருபாலை கிழக்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகராஜா 18.11.2014 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை, பி.ப.2.00 மணிக்கு நியூ லிபிங் பிஃளேம் சேர்ச்சில் நடை பெற்று, நியூ லிவிங் பிஃளேம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை கிழக்கு,
இருபாலை. (54423)(5.3.6)

தகவல்:
அன்பு மனைவி-இராசம்மா, அருமைப்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தசாமிப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊழியர், வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை)



ஏழ்கடல் தாண்டிச்சென்று ஏழாண்டுதான் கடந்ததுவோ
ஐயா... ஏங்கித் தவிக்கின்றோம் உங்கள் நினைவில்
நாம் வாழ்வதற்கான வழியைத் தேடி நமை சிற்பம்
போல் உருவாக்கி சீரும் சிறப்புடனும் வளர்த்தெடுத்து
பாசமழையில் நனையவிட்டு பாதிதனில் சென்றதேனோ?
துன்பங்கள் அனைத்தையும் அனுபவித்துக் கொண்டு
அன்பை மட்டும் எமக்களித்துச் சென்ற எங்கள் அன்பின்
உறைவிடமே... பிள்ளைகளின் எழுச்சி கண்டு
பெருமிதத்துடன் உற்றார் போற்ற தரணிதனில்
உயரவைத்து விண்ணுக்கு விரைந்தோடிப் போனதேனோ?

மலர்வு 03.08.1932

உதிர்வு 09.12.2007

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்
மனைவி (கனகம்மா), பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
சோளங்கன் கரணவாய் மேற்கு,
கரவெட்டி. 077 666 0490 (52013)(4.3.6)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பூதத்தம்பி சந்திரமௌலீசன்

(முன்னாள் ஊழியர், நீதிமன்றம்-சாவகச்சேரி)



தோற்றம் 21★11★1944

மறைவு 11★12★2004

திதி:அமாவாசை (22.11.2014)

அன்புத் தெய்வமே அப்பா!
பத்து ஆண்டுகள் சென்றாலும்-அப்பா
உங்கள் அன்பும் பாசமும் நெஞ்சைவிட்டு அகலவில்லை
பண்புக்கும் பாசத்துக்கும் கல்விக்கும் அயராது
உழைத்த தெய்வமே- அப்பா!
குடும்ப ஒளிவிளக்காய் வாழ்ந்த தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள்
உயிர் அப்பாவின் நினைவுகளை மறப்போமா?

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
(54433)(6.4.3) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சாயி பாபாவின் அவதார தினவிழா

யாழ்ப்பாணம், நவ.22

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 89 ஆவது அவதார தினவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சத்யசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

காலை நிகழ்வுகள் காலை 8.15 மணியளவில் பிரசாந்தி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். இதில் பஜனை,இசை நிகழ்வு நிலைய இளைஞர்களின் 'தனிமனித மாற்றமே உலக மாற்றம்' என்னும் தலைப்பிலான நாடகம், ஹற்றன் நஷனல் வங்கியின் மெற்றோ கிளை முகாமையாளர் ஆர். சுந்தரேஸ்வரனின் 'சாயி அவதாரம்' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன. (க)

# ஓராண்டு நினைவலைகள்

## அமரர் கந்தசாமி சேதுராஜா

(சேது அங்கிள்)



அன்னை மடியில் 22.11.1948

ஆண்டவன் அடியில் 02.12.2013

அகவைத்தினம் இன்றென்று அக
மகிழ்ந்து அனைவரும் வாழ்த்துத்
தெரிவிக்கும் இந் நாளில் உங்கள்
ஆண்டொன்றுத் திதியை அகவையாகக்
கொண்டாடும் இந்நிலையை எண்ணி
ஏங்குகிறேன் பார்க்கின்றேன்,
பரிதவிக்கின்றேன் உம்மைப் பறித்திட்ட
பாதகன் எங்கே என்று!

அன்னாரின் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (22.11.2014) சனிக்கிழமை மதியம் வவுனியா குருமன்காடு காளியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

271/1, C ஒழுங்கை, மன்னார் வீதி,
பட்டாணிச்சூர், வவுனியா.
T.P:077 717 9877, 077 979 6065
(47932)(4.3.6)

அன்னாரின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி (திருமதி T.சேதுராஜா-ஆசிரியை)
சைவப்பிரகாச மகளிர் கல்லூரி-வவுனியா
மற்றும் குடும்பத்தினர்.

# வரணியில் இலவச மருத்துவ முகாம்

வரணி, நவ.22

வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இன்று சனிக் கிழமை காலை இலவச மருத்துவ முகாம் ஒன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி வட்டம் சர்வதேச லயன்ஸ் கழகம் மூலம் நடத்தப்படும் இந்த இலவச மருத்துவ முகாமில் மருத்துவ பரிசோதனை, மருந்து வழங்கல், மூக்குக் கண்ணாடி வழங்கல், பயன்தரு மரக் கன்றுகள் விநியோகம் குறித்த பாடசாலை மாணவர்களுக்கு பாடக் கொப்பிகள், எழுதுகருவிகள் விநியோகம் என்பன இடம்பெற உள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அனைத்துப் பொது மக்களையும் கலந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-122)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பொன்னையா பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் M.P.C.S)



தோற்றம் 14.02.1944

மறைவு 05.12.2010

திதி: அமாவாசை

நான்கு ஆண்டுகள் மறைந்தாலும் எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!!
உங்கள் அன்பும் பாசமும் எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை.
கண்களில் கண்ணீர் மல்க மனமோ தவிக்கின்றது
ஒளி விளக்காய் வாழ்ந்த தெய்வமே மறப்போமா
உங்கள் நினைவுகளை அப்பா !
சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

யூனியன் வளவு,
பத்தமேனி,அச்சுவேலி. (54427)(3.3.6) குடும்பத்தினர்.

# சேதமானது மின்பிறப்பாக்கி

சங்கானை, நவ.22

சங்கானை, நிற்சாமப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி திங்கட்கிழமை மழைபெய்த போது, ஏற்பட்ட இடிமின்னல் தாக்கத்தால் சேதமடைந்துள்ளது.

இதனால் அந்தப்பகுதி முழுவதும் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டதால் பொது மக்கள் பலர் அசௌகரியங்களை எதிர் நோக்கினர்.

இதேவேளை அந்தப் பகுதியில் வசிக்கின்ற சின்னட்டிபழனி என்பவரின் வீட்டில் தென்னை மரம் ஒன்றும் மின்சார உபகரணங்களும் குறித்த இடி மின்னல் தாக்கத்தால் சேதமடைந்துள்ளன. (வ-29)

# மரண அறிவித்தல்

## திருமதி தவனேஸ்வரி (ராணி)கோபாலசிங்கம்



யாழ்.வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும், ஜேர்மனி Sassenbergயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவனேஸ்வரி கோபாலசிங்கம் 18.11.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசரத்தினம் - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ரஞ்சினி (இலங்கை), ராகினி (வசந்தி - ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), சிறீ (நோர்வே), மாலினி (சுவீடன்), திலீபன் (சுவீடன்), ரமேஷ் (சின்னக்கிளி - ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயும், காலஞ்சென்றவர்களான துரைராஜா (பேவி), ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவானந்தன் (இலங்கை), இராஜேந்திரம் (பவா - ஜேர்மனி), யோகரட்ணம், ராணி (கனடா), காலஞ்சென்ற ஜீவதாஸ் (சுவீடன்), புஸ்பா (சுவீடன்), சசி (ஜேர்மனி), சுமதி (சுவீடன்), ஜெயந்தி (ஜேர்மனி), குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிந்துஜா சசிதரன், அனுசாந், யாகுலன், பிரியந்தன், தளிர்னா, ஷைலா ரூபன், சுதா செண்டி, கஜிபன் பிரியா, சியாமி கண்ணன், பிரகவி, சிதர்ஷனா, சயானா, கோகில், சஜந், நூரி, மதுஷா, மேனுஷா, சனந், பிரவீனா, பிரனிதா, பிரதீப், ஜஸ்மி, ஜெஸ்டினா, ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கெவின், ஜெரினா, திலோ, வருண், சகானா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2014 திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/1, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம். (54446) (12.3.6)

தகவல்: சிவானந்தன் ரஞ்சினி
குடும்பத்தினர்.

# பெண் தலைமைத்துவ வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்வது நாட்டின் கடமை

## இந்திய துணைத் தூதரக யாழ்.பிராந்திய பிரதித் தூதர் கருத்து

யாழ்ப்பாணம், நவ. 22
வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போரால் குடும்பத் தலைவரை இழந்த பல குடும்பங்கள் பெண்களின் தலைமைத்துவத்திலேயே இயங்கி வருகின்றன. இவ்வாறான பெண்களை ஊக்கப்படுத்துவதும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தையும், பொருளாதாரத்தையும் வளர்ச்சியடையச் செய்வதும் இந்நாட்டினதும் சர்வதேசத்தினதும் கடமையாகும். இவ்வாறு தெரிவித்தார் இந்திய துணைத்தூதரக யாழ். பிராந்திய பிரதித் தூதர் எஸ்.ரி.மூர்த்தி.
சுயதொழிலில் ஈடுபடும் பெண்களை ஊக்குவிக்கும் முகமாக திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகம், ஆசிய நிதி நிறுவனத்தின் 55000 அமெரிக்க டொலர்கள் நிதி உதவியுடன் சிறப்புத் திட்டம் ஒன்றை தற்போது பரவலாக முன்னெடுத்து வருகிறது. இந்தத்திட்டத்தின் ஒரு கட்ட நிகழ்வான செயலமர்வொன்று நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதித் தூதர் மூர்த்தி இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
வாழ்வாதாரத்திலும் பொருளாதாரத்திலும் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு நிதியுதவி செய்வதும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் நிதி அனைத்தும் முடிந்ததும் மீண்டும் அவர்கள் வறுமையுடன் போராடுவதும் சாதாரணமாகிவிட்டது. எனவே இவ்வாறான குடும்பங்களுக்கு நாம் நிதியுதவி செய்வதோடு மட்டும் நின்றுவிடாது பணத்தையும் பொருளையும் உழைக்கக்கூடிய வழிமுறைகளையும் நுட்பங்களையும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இதன்மூலம் அவர்களின் வாழ்வில் வறுமையை இல்லாமல் செய்யலாம்"- என்றார்.
குறித்த செயலமர்வில் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன், மன்னார் மாவட்ட அரச அதிபர் எஸ்.தேசப்பிரிய, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் ஆகியோரும்- கௌரவ விருந்தினராக ஆசிய நிதி நிறுவனத்தின் இணைப்பாளர் செல்வி நீச்சாவும் கலந்து கொண்டனர். (வ-ரி)

# சங்கானை அஞ்சலகத்தின் புதிய கட்டடம் அமைப்பதில் இழுபறி

சங்கானை, நவ.22 ,
கடந்த பல வருடங்களுக்கு மேலாக பல இடங்களுக்கு இடம்மாறி, தனியார் கட்டடங்களில் வாடகை செலுத்தி சங்கானை அஞ்சலகம் இயங்கி வருகின்றது.
இந்தநிலையில் யாழ்-சங்கானை பிரதான வீதியில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 4 பரப்புக் காணி அஞ்சலகக் கட்டடத்துக்காக கொள்வனவு செய்யப்பட்டு அஞ்சலகத்துக்கென ஒதுக்கப்பட்ட காணி என்று பெயர்ப்பலகையும் நடப்பட்டது.
ஆனால் இதுவரை கட்டடம் அமைப்பதற்கான எதுவித முயற்சியும் தபால் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை.
அஞ்சலகக் கட்டடம் அமைக்கப் பொருத்தமான இடமாக அந்தக் காணி இருக்கும் நிலையிலும் திணைக்களம் இதுவரை அது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
நான்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொதுமக்கள் உட்பட பலரும் இந்த அலுவலகத்தில் தமது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-29)

# கிருஷ்ணரின் ரத யாத்திரை

யாழ்ப்பாணம், நவ. 22
அகில இலங்கை கிருஷ்ண பக்திக்கழகம் வருடாவருடம் யாழ் மண்ணில் கிருஷ்ணரின் ரத யாத்திரை விழாவை முன்னெடுத்து வருகின்றது.
இந்தநிலையில் இந்த வருடத்துக்கான குறித்த ரத யாத்திரை இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீவெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயத்திலிருந்து மாலை 3 மணியளவில் ஆரம்பமாகி நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே. எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, நல்லூர் பரித்தித்துறை வீதி ஊடாக நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தை வந்தடையும். ரத யாத்திரையைத் தொடர்ந்து குறித்த மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(வ-ரி)

# 'குரும்பை' குறும்படம் வெளியீடு

திருமறைக்கலாமன்றம் வெளியிட்டு வைக்கும் மி.சே.கலீஸின் இயக்கத்தில் உருவான 'குரும்பை' குறும்பட வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திரு மறைக் கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் வாழ்வக நிறுவனத்தின் பிரதி திட்ட மேலாளர் சைவப்புலவர் கந்தையா பத்மநாதன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமூகத் தொடர்புகள் ஆணையாளர் இயக்குநர் அருட்தந்தை ஜே.சி. போல் றொகான் அடிகள் கலந்து கொள்வார். மதிப்பீட்டுரையை எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசா நிகழ்த்துவார். (வ-135)

# செயலமர்வு

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம்-10 மாணவர்களுக்கு புதிதாக கற்பிக்கப்படவுள்ள முயற்சியாண்மைக் கல்வி புதிய பாடத்திட்டத்துக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலுள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.
கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் தரம்-10 இல் முயற்சியாண்மைக் கல்விப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை மேற்படி செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். (வ-426)

# பொதுக்கூட்டம்

வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் புதிய ஆசிரிய ஆலோசக சேவைகள் தொடர்பான முக்கிய பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கப்படவுள்ளமையால் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களின் கீழ் சேவையாற்றும் அனைத்து ஆசிரிய ஆலோசகர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (வ-426)

# செட்டிகுளம் வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்

வவுனியா, நவ 22
வவுனியா, செட்டிகுளம் தள வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர் காவலாளியை தாக்கியதைக் கண்டித்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
செட்டிகுளம்தள வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கடமையில் இருந்த காவலாளியை அழைத்து நோயாளர் காவு வண்டியை தள்ளுமாறு பணித்திருந்தார். அத்துடன் மற்றுமொரு காவலாளியையும் அழைத்துவருமாறும் வைத்தியர் கூறியுள்ளார். அதற்குஅந்தக் காவலாளி மற்றையவர் வாயில் கடமையில் உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.
இதன் காரணமாக கோபமுற்ற வைத்தியர் காவலாளி வைத்திருந்தடோச்லைட்டைப் பறித்து காவலாளியின் தலையில் தாக்கினார் எனவும் இதன் காரணமாக காவலாளிக்கு காயமேற்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# புதிய சாரதிகள் காப்பாளர்களுக்கு நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.22
இலங்கைப்போக்குவரத்து சபையின் வடபிராந்தியத்துக்கான புதிய சாரதிகள் , காப்பாளர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இலங்கைப் போக்குவரத்து சபையின் யாழ் சாலையில் நடைபெறவுள்ளது. (கு-14)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations
சமாதான நீதிவான்
சி.கணபதிப்பிள்ளை
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தபால் உத்தியோகத் தராக 1982ஆம் ஆண்டு முதல் பணியாற்றி ஓய்வுபெற்றுக் கொண்ட சி.கணபதிப்பிள்ளை கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், ஒட்டு சுட்டான் எனும் முகவரியைக் கொண்டவர். இவர் பொது அமைப்புக்களில் அளவற்றவாறு பங்கு கொண்டு சமூகத்திற்கு காலத்திற்கேற்றவாறு சேவையாற்றியவர். மக்களின் மனங்களில் மங்காது இடம்பிடித்து மாவட்ட சி.க.கூ. சமாசத்தில் தலைவராகச் சேவையாற்றும் இவரது பணி சமாதான நீதிவான் பதவியூடாக மக்களுக்கு மிகவும் இலகுவாக சேவையாற்றக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைச் சிறப்பாக ஆற்றவேண்டும் என வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: முல்லை மாவட்டத்திலுள்ள சி.க.கூ சங்கங்களின் உறுப்பினர்கள், சமாசப் பணிப்பாளர் சபை, பணியாளர்கள், முல்லைமாவட்ட சி.க.கூ சமாசம், வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
(C17663) (12.3.6)

மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
சதானந்தன் யாதவானந்தன்
(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி)



இன்று 22.11.2014 தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் யா/ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான தர்மகர்த்தாவும் ஆகிய சதானந்தன் யாதவானந்தன் அவர்கள் தன் ஆசிரிய சேவையின் பின் சகல சிறப்புக்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
தேவதாசன் குடும்பம்,
சு.தவவானதி, ரமணன் குடும்பம்,
ஞானமுரளி குடும்பம், பிரியங்கா,
நீகேஸ், நிதுன்.
கற்கோவளம், பருத்தித்துறை.
Best Wishes
(52015)(5.6.3)

வேலை வாய்ப்புக்கள்

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் அதியுயர் சம்பளத்துடன் கீழ் காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

| Work | Qty | Salary (QR) |
|---|---|---|
| Senior Technical Officer (Civil) | 03 | 5000+OT |
| Senior Technical Officer (Mechanic) | 03 | 5000+OT |
| Senior Technical (Electrical) | 10 | 5000+OT |
| Store Keeper | 05 | 3600+OT |
| Land Survivor | 05 | 3500+OT |
| Civil Forman | 03 | 3000+OT |
| Cleaning Supervisor | 05 | 2600+OT |
| Heavy Vehicle Driver (GCC Valid License) | 10 | 2407+OT |
| HV AC Mechanic | 10 | 1750+OT |
| Mechanical (Pump & Motor) | 10 | 1700+OT |
| Technichian | 10 | 1600+OT |
| Plumber (ITI Maintenance) | 10 | 1500+OT |
| Light Vehicle Drivers (GCC Valid License) | 05 | 1500+OT |
| Light Vehicle Drivers (First Time) | 05 | 1200+OT |
| Carpenter | 05 | 1500+OT |
| Meson | 10 | 1400+OT |
| Cleaning | 20 | 900+OT |

* உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
* கைவசம் வீசா உள்ளதால் 2 வாரத்தில் பயணம்.
* உங்கள் விண்ணப்பங்களை E-mail மூலமாக அனுப்பி வையுங்கள்.

E-mail Add: lankavoicenafees@gmail.com
எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.
நேரடியாகவும், உங்கள் விண்ணப்பங்களை கையளிக்க
Lankavoice, இல.26/2, Station Road, Vavuniya.
வங்கிக்கடன் வசதி செய்துதரப்படும்
Capital Recruitment International (Pvt) Ltd.
No.130 3/1, Grandpass, Colombo 14. LL No: 2248
(சி17762) (12.3.6) Tel No: 077 792 9475

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm
Silver 10.15am, 2.15pm, 6.15pm
Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

காணி விற்பனைக்கு
AVறோட், செம்மணி லேன்
பேச்சியம்மன் கோயிலுக்கு அருகில்
6 பரப்பு 7 குழி விஸ்தீரணம் கொண்ட
காணி விற்பனைக்குண்டு. (54430) (45.6.3)
தொடர்பு: 077 978 9375, 077 517 3798

வீடு வாடகைக்கு
புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட 4 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. கொக்குவில் ரயில் நிலையத்திற்கு அருகில். (Brown Road)
(சி17766) (12.3.6) தொடர்பு: 071 409 5429

வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விற்பனை வாகனத்தில் வேலை செய்வதற்கு திறமையும், நேர்மையும் உள்ள காசாளர், பொருள்கள் வழங்குபவர் தேவை.
* தங்குமிடவசதி இலவசம்
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
விளம்பர இல-5030
மே/பா உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(54383) (4.6.3)

## நூலகச் சங்கத்தின் வகுப்பு நடைபெறாது

யாழ்ப்பாணம்,நவ.22
இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கான வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்றும் நாளையும் நடைபெறமாட்டாது என்பதை சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (ஓ)


### உதவி முகாமையாளர்கள் தேவை

யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
நவீன உணவகங்களுக்கு
இரு உதவி முகாமையாளர்கள் தேவைப்படுகின்றனர்

பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்கள் தொடர்புகொள்ளவும்

- ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்
- ஆங்கிலம், சிங்களம் ஆகியமொழிகளிலும் உரையாடக்கூடிய வராக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே 2 வருடங்களுக்குக் குறையாத ஹோட்டல் முகாமைத்துவ அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயது எல்லை 25 - 50 வரை.

(41402) (45.6.3) தொடர்பு: 071 447 1136

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 30 ஆவது பட்டமளிப்பு விழாவில் (11.11.2014) பட்டம் பெற்ற
செல்வி கிஜாந்தி விஜேந்திரன்
BA (Hons) History அவர்களையும்
16.10.2014 அன்று
கொழும்பு பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் (BMICH)
பட்டம் பெற்றவர்களான



செல்வன் சிவலிங்கம்
அருட்சுதன் Dip in Teach



செல்வி நிஷாந்தினி
விஜேந்திரன் Dip in Teach
ஆகியோரையும்
வாழ்த்துகின்றோம்.

எமது கல்வி நிலையத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவ் மூவரும் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்

Congratulation
கல்வி நிலைய சமூகத்தினர்,
கலைவாணி கல்வி நிலையம், வேலணை.
(41405)(4.3.6)


# கையெழுத்துப் பிரதி தயாரிக்கும் போட்டி

*தேசிய ரீதியில் நடத்தத் திட்டம்*

யாழ்ப்பாணம், நவ.22
2014 ஆம் ஆண்டின் தரமான கையெழுத்துப் பிரதிகளுக்கான போட்டியொன்றை நடத்தக் கலாசார அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தமிழ் நாவல், சிறுகதை, கவிதை மற்றும் இலக்கியம், வரலாறு, கலாசாரம், கலை, தொல்பொருளியல், நுண்கலை, நாட்டார் கலை ஆகிய துறைகளில் ஈடுபட்டிருக்கும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் விஜித் கனுகல, நிர்வாக அதிகாரி எஸ்.செனிவிரத்ன ஆகியோர் மாவட்ட, பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டிக்காக பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து சமர்ப்பிக்கப்படும் பிரதிகள் இதற்கு முன்னர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அச்சிடப்பட்டதாக இருத்தல் கூடாது.

விண்ணப்பதாரர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம். ஒரு பிரிவில் ஒரு ஆக்கத்தினை மாத்திரம் சமர்ப்பித்தல்வேண்டும். ஆக்கங்கள் யாவும் ஏ-4 அளவுதாளில் 50 பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

போட்டியின்போது தங்கள் கைப்பிரதி தெரிவு செய்யப்பட்டால் அதன் வெளியீட்டு உரிமையை ஐந்து வருடங்களுக்குக் கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு ஒப்படைத்தல் வேண்டும். அதன்படி அச்சுப் பிரதி ஒன்றை அச்சிடுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் அதேவேளை குறிப்பிட்ட பிரதிகளின் விற்பனை விலையில் இருந்து பத்து வீதம் அதன் நூலாசிரியருக்கு வழங்கப்படும்.

கைப் பிரதியில் ஆக்கத்தின் பெயர் மாத்திரம் குறிப்பிடவேண்டும் உங்களது பெயர் பிரதியின் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிட்டிருத்தல் கூடாது. விண்ணப்பதாரியின் பெயர் ஆக்கத்தின் தலைப்பு என்பன விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆக்கம் இரண்டு கைப்பிரதிகளைக் கொண்டதாகத் தயார்படுத்தல் வேண்டும் ஒன்றை மாத்திரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்புதல்வேண்டும். அவசியம் ஏற்படும்போது அடுத்த பிரதியையும் எமக்கு அனுப்பக் கூடியதாக கையிருப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் போட்டியில் பங்குபற்ற முடியாது.

போட்டி தொடர்பாக அதன் ஏற்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவு இறுதி முடிவாகக் கருதப்படும் என்பதையும் போட்டியாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை ஏ-4 தாளில் தயாரித்து கணினியில் அல்லது தட்டச்சில் அடித்து அல்லது தெளிவாகக் கைப்பட எழுதி முறையாகக் கோர்த்து பதிவுத் தபாலில் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி 2014 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பதாரியின் பெயர், முகவரி/ மாவட்டம், தொலைபேசி எண், தேசிய அடையாள அட்டை இலக்கம், சமர்ப்பிக்கும் போட்டியின் பிரிவு (நாவல், சிறுகதை, கட்டுரை), கைப் பிரதியின் தலைப்பு என்பன எழுதப்பட்டிருக்க வேண்டும். (க-7)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.22
விநாயகர் சனசமூக நிலை யத்தின் ஏற்பாட்டில் லண் டனில் வசிக்கும் க.தயாக ரனின் அனுசரணையுடன் கைதடி, நாவற்குழி, மட்டுவில் ஆகிய பிரதேசங்களில் இவ் வருடம் ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்கு கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்குநடைபெறும். (வ)


### மணமக்கள் தேவை

- 87 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 26 ¼ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகளுக்கு BSc இற்கு மேல் மணமகன் தேவை.
- 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19¾ பாவமுடைய டென்மார்க் MBBS முடித்து பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை.
- 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 41 பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்ட தாரி மணமகள் தேவை.
- 83இல் பிறந்த 7இல் செவ்வாய் 39¾ பாவ முடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் அல்லது BSc இற்கு மேல் மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 30 ½ பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 79இல் பிறந்த 12இல் செவ்வாய் 43 பாவ முடைய ஆஸ்திரேலிய பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.
- 82 இல் பிறந்த 2இல் செவ்வாய் 15¼ பாவ முடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற எக்கவுண் டன் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: [illegible] திருமணசேவை
இல.62, இராமலிங்கர் வீதி,
[illegible]
T.P. 077 607 0862
(41401) (45.6.3)

### குப்பைகள், கட்டட இடிபாடுகளை அகற்றுதல்

யாழ். மாநகரசபையின் எல்லைக்குள் சுகாதாரத்தைப் பேணும் நோக்குடன் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. எனவே எமது சபையின் வரியிறுப்பாளர்கள் அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

01. டெங்கு பரவுதலைத் தடுக்கும் முகமாக வீட்டு வளவுகளில் காணப்படும் கட்டட இடிபாடுகள் எமது சபையினால் இலவசமாக அகற்றித்தரப்படும். இச்சலுகை மூன்று வாரங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 222 2019
02. வீடுகளில் அகற்றப்படும் குசினிக் கழிவுகள், உக்காத கழிவுகள் மற்றும் அருவருக்கத்தக்க கழிவுகள் என கழிவுகளை வகைப் படுத்தி தனித்தனியாகப் பைகளில் இடப்பட்டு வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு வகைப்படுத்தப்படாத கழிவுகள் மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளபட மாட்டா.
03. இக்கழிவுகள் தவிர்ந்த ஏனைய கழிவுகள் எமது சபையின் கட்டண கழிவகற்றல் பகுதியுடன் ,தொடர்புகொண்டு கட்டணம் செலுத்தி அகற்றிக்கொள்ளலாம். தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 021 320 7625/ 071 862 8535

ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
(சி.17783) (45.6.3)

### PROVINCIAL DIRECTORATE OF HEALTH SERVICES, NORTHERN PROVINCE
### PROCUREMENT OF MEDICAL EQUIPMENTS & FURNITURE ITEMS

The Chairman, Department Procurement Committee (DPC) on behalf of the Provincial Directorate of Health Services now invites bidders for supply of Medical Equipments & Furniture Items.

**Bid No- NP/H/MEDI-LI/14**

| S.No | Item | Qty |
|---|---|---|
| 1. | Cardiac bed (ETU Bed) | 07 |
| 2 | Pulse Oxy meter | 04 |
| 3 | Sucker | 03 |
| 4 | ECG Recorder | 06 |
| 5 | Cricothyroidotomy insertion sets | 09 |
| 6 | Examination Bed | 18 |
| 7 | Spot Lamp | 12 |
| 8 | BP Apparatus | 33 |
| 9 | Diagnostic Set | 09 |
| 10 | Multi Para Monitor | 01 |

**Bid No- NP/H/FUR-VA/14**

| S.No | Item | Qty |
|---|---|---|
| 1 | Office Table | 45 |
| 2 | Office Chair | 90 |
| 3 | Pharmacist Chair | 06 |
| 4 | Cupboard | 45 |
| 5 | Glass Cup board | 15 |
| 6 | Refrigerator | 06 |

**Bid No- NP/H/PWC-VA/14**

| S.No | Item | Qty |
|---|---|---|
| 1 | Patient Waiting Chair (4Seat hang chair) | 110 |

1. Interested eligible bidders may obtain further information from the Provincial Directorate of Health Services, Northern Province (021 222 0812) and inspect the bidding documents at the address given below during office hours.
2. Bid documents will be issued from 24.11.2014 till 08.12.2014 during 09.00 hours to 15.00 hours on working days, upon payment of non refundable fee of Rs.1000/= for each document, submission of approved copy of Business Registration, request made on their letter head and "Application to get Bid Documents" available in this Department. The mode of payment will be cash.
3. Bid should be handed over to the below address or deposited in the tender box available at chief Accountant's Room on or before the closing time of bids 10.00 hours of 09th December 2014. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

**Dr(Mrs.) S.R.Jude Chairman -DPC**
**Provincial Directorate of Health Services Health Village, Pannai.**
(C17781)(12.3.6)

## 'ஹெட் லைட்' இல்லாது இரவில் சைக்கிளில் பயணித்தால் கைது



வடமராட்சி, நவ. 22
வடமராட்சிப் பகுதிகளில் இரவு நேரங்களில் சைக்கிளின் முகப்பு விளக்கு (ஹெட் லைட்) இல்லாமல் பயணிப்பவர்கள் கைது செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வடமராட்சியில் உள்ள மூன்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்ட சிவில் பாதுகாப்பு மற்றும் வீதியொழுங்கு சம்பந்தமான கூட்டத்திலேயே பொலிஸார் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் உதவி பொலிஸ் நிலைய அத்தியட்சகர்களான ஜப்வர் ,ரணவீர, நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.மீடின், பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி யுவான் நந்தன நாராயண உட்பட பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

பொது அமைப்புகள் சார்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர், நகர சபை, பிரதேச சபையின் தவிசாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

வடமராட்சியின் முக்கிய வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தல் குறித்து இந்தக் கலந்துரையாடல் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அந்தத் தீர்மானங்களின் படி, பாடசாலைச் சேவைகளில் ஈடுபடும் பஸ்களின் தரம் தொடர்பில் ஆராயப்பட்டு மாணவர்களின் நன்மை கருதி பல பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தல், இரவு நேரங்களில் ஒளி விளக்கின்றிப் பயணம் செய்யும் சைக்கிளோட்டிகளைக் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல், பஸ் சேவை இடம்பெறும் நேரத்துக்கு முன் தேவையின்றி பஸ்கள் நகரப் பகுதி பஸ் தரிப்பிடத்தில் தரித்து வைத்திருப்பதைத் தடுத்தல் போன்ற பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.

அத்துடன் இந்த கலந்துரயாடலில் கலந்துகொண்டிருந்த சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பரீட்சகர்கள், சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சாரதிகள் தமது சாரதி அனுமதிப்பத்திரங்களின் முடிவுத் திகதி முடிந்தால் உடனடியாக அவற்றைப் புதுப்பிப்பதற்குரிய ஏற்பாடு களை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரினர். (த-109)

# 80 பொதுக் கிணறுகள் புதிதாக அமைக்க முடிவு

## யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கிய வறட்சி விசேட நிதியிலிருந்து

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ்.மாவட்டத்தில் புதிதாக 80 பொதுக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. வறட்சி விசேட நிதியைப் பயன்படுத்தியே இவை அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டு கடுமையான வறட்சி காரணமாக பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இதனால் கால்நடைகளும் பெருமளவில் உயிரிழந்திருந்தன. அத்துடன் பொதுமக்களுக்குக் குடி தண்ணீர் விநியோகம் பல்வேறு தரப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து யாழ்.மாவட்டத்துக்கு வறட்சி விசேட நிதியாக 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியைப் பயன்படுத்தியே கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணறுகளைத் துப்புரவு செய்தல், புனரமைப்புச் செய்தல், மீள் நிர்மாணம் செய்தல், புதிதாக அமைத்தல் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்குரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)




*இலங்கைக்கான சுவிஸ் தூதுவராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள கீன்ஸ் வோக்கர் நிடர்கோன் உள்ளிட்ட குழுவினர் நேற்று உதயன் அலுவலகத்துக்குப் பயணம் மேற்கொண்டனர். இதன் போது அவர்கள் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (த)*

## யாழ்ப்பாணத்தில் 10 பாடசாலைகளில் நாவலர் சிலைகளை அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், நவ 22.
நாட்டிலுள்ள முன்னணித் தமிழ்ப் பாடசாலைகள் தோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் திருவுரு வச் சிலைகளை நிறுவதன் மூலம் நாவலர் பெருமானின் சிறப்பை மாணவர்கள் உணரச் செய்ய நடவடிக்கை எடுத்து வரும் நாவலர் நற்பணி மன்றம், அடுத்து வரும் வாரங்களில் யாழ்ப்பாணத் திலும் பத்துப் பாடசாலைகளில் நாவலர் சிலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் யாழ். சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, காரைநகர் தியாகராஜா இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவை உட்பட பத்துப் பாடசாலைகளிலேயே அடுத்த கட்டமாக நாவலர் சிலைகள் ஸ்தாபிக்கப்படவிருக்கின்றன.

கொழும்பிலும், மலையகத்திலும் மாத்தளை, நாவலப்பிட்டி, கொட்டகலை போன்ற இடங்களிலும் அண்மையில் பல நாவலர் சிலைகள் இந்த அமைப்பினரால் நிறுவப்பட்டன என்பது தெரிந்ததே.

நாவலர் நற்பணி மன்றம் அதன் ஸ்தாபகத் தலைவர் கருணை ஆனந்தனின் வழிகாட்டலில் தமிழ்ப் பாடசாலைகள் தோறும் நாவலர் சிலையை நிறுவும் பணியை முன்னெடுத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சிறுவர்கள், முதியோரின் சுபீட்சத்தில் அக்கறை கொள்வது மிக அவசியம்

யாழ்ப்பாணம், நவ. 22
ஒழுக்கமும் பண்பாடும் நிறைந்த எதிர்காலத்தை உருவாக்கச் சிறுவர், முதியோர்களின் சுபீட்சத்தில் நாம் அக்கறை கொள்வது அவசியம் என வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலக சிறுவர், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைமையுரை நிகழ்த்திய அவர், நாளைய தலைவர்களாகக் கருதப்படும் சிறுவர்கள் சமுதாயத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றலைப் பெற முதியவர்களின் அனுபவங்கள் வழிகாட்டக் கூடியன. அத்தகைய அனுபவங்களைப் பெறுவதில் பல்வேறு நன்மைகள் கிடைக்கும். தவறின் சில பின்விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். முதியவர்கள் தமக்குத் தேவையில்லை என்ற நிலையில் சிலர் அவர்களைத் தள்ளி வைக்கின்றனர். அவர்கள் படும் துன்பத்தை நாங்கள் நேரடியாகக் காணும் போதும் கூட ஒதுங்கி விடுகின்றோம். மாற்றுத் திறனாளிகளிடம் உள்ள திறமைகளை நாம் நாம் மதிப்பதில்லை. மாற்றுத் திறனாளிகள் பலர் சாதனையாளர்களாக இருப்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்க ளில் பலர் இன்று பல்வேறு துறைகளில் மேல் நிலை பெற் றவர்களாக உள்ளனர். சிறுவர்கள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் எல்லோருமே ஒன்றுபட்டு வாழ்வதன் மூலம் மகிழ்ச்சிகரமான நாட்டை உருவாக்க முடியும் - என்றார். (த-7)



## பெரிய வெங்காயச் செய்கையை மன்னாரில் ஊக்குவிக்க முயற்சி

மன்னார், நவ 22
மன்னாரில் பெரிய வெங்காயச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அருகங்குன்று கிராமத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிரதி விவசாய அமைச்சர் வை.ஜி.பத்மசிறி தலைமையில் விவசாயிகளுக்குப் பெரிய வெங்காயத்துக்கான் விதைகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. யு.எஸ். எயிட் நிறுவனம்மற்றும் அரசு இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்தத் திட்டத்தினுடாக 100 ஏக்கரில் மேற்கொள்ளப்படவிருக்கும் பெரிய வெங்காயச் செய்கையில் 1000 தொன் உற் பத்தியைப் பெறுவது நோக்கமாகும்.

இந்த நிகழ்வில் யு.எஸ் எயிட் உதவி பணிப்பாளர் தோமஸ் பேயர், திவிநெகும பணிப்பாளர் அனுர வீரரட்ண, வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதினீனின் இணைப்பாளர்



எம்.என்.முனபர், மன்னார் மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் மற்றும் அரச உயர் அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது 376 விவசாயிகளுக்குப் பெரிய வெங்காயத்துக்கான விதைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பெரிய வெங்காயத்துக்கான நாற்றுமேடையில் வைபவ ரீதியாக அதிதிகள் விதைகளை நடுகை செய்தனர். (த)

# தடைசெய்த மீன்பிடி முறைகளை யாழில் உடனடியாக கைவிடுங்கள்

## மீனவரிடம் கடற்றொழில் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.நவ.22
குடாநாட்டில் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை மேற்கொள்வதை நிறுத்தி கடல் வளத்தைப் பாதுகாக்குமாறு யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

குடாநாட்டில் மண்டைதீவு, காக்கைதீவுக் கடற்பகுதிகளில் மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்களைப் பயன் படுத்தித் தொழில்களை மேற் கொள்வதாக பல்வேறு முறைப்பாடுகள் திணைக்களத்துக்கு மீனவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளன.

எனினும் ஒரு சில மீனவர்கள் வருமானத்துக்காகத் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை மேற்கொள்வதை நிறுத்தவில்லை. களவாகத் தொடர்ந்தும் மீன் பிடித்து வருகின்றனர். தடை செய்யப்பட்ட தொழில் முறைகளால் குடாநாட்டின் மீன்பிடி வளம் பெரிதும் பாதிப்படையும்.

ஏதிர்காலத்தில் மீன்வளம் குன்றி மீனவர்கள் வருமானம் இன்றிப் பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்பை எதிர் கொள்ள நேரிடும். கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து மீனவர்களுமே ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

திணைக்களத்தால் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் இனங்காணப்படும் போது உடனடியாகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் ஒரு சில இடங்களில் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குத் திணைக்களம் தள்ளப்பட்டுள்ளது.

எனவே மீனவர்கள் திணைக்களத்தால் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் முறைகளுக்கமைய மீன்பிடியை மேற்கொண்டு கடல் வளத்தைப் பாதுகாக்குமாறும் திணைக்களம் கேட்டுள்ளது. (த-14)

## யாழ். நீதிவான் முன்பாகக் கஞ்சா பரிமாறியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 22

வழக்குக்குச் சென்றிருந்த சந்தேகநபர் ஒருவர் நீதிவான் முன்னிலையில் எதிரிக் கூண்டில் வைத்து கஞ்சாப் பொதியைச் சகாக்கு வழங்கியபோது சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் மாட்டிக்கொண்டார். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஐந்து சந்தியைச் சேர்ந்த வசந்தகுமார் என்பவரே விளக்கமறியலில் வ்வக்கப்பட்டுள்ளார். கஞ்சா சுருள் பொதியை ஏற்கனவே விளக்கமறியலில் உள்ள யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த கஜேந்திரன் என்பவருக்குக் கொடுத்த போதே அங்கு நின்ற சிறைச்சாலை உத்தியோகத்தரான எ.அறீசன் என்பவர் கண்டு நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

இதனையடுத்து அவன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று பொலிஸாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

அதனையடுத்து நேற்றைய தினம் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் அவன் முற்படுத்தப்பட்டபோதே அவனை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

(கு-4)

# மாணவர் தாமாகக் கற்கும் ஈ-கற்றல் இறுவட்டுகள் 50 பாடசாலைகளுக்கு

## ஜனவரியில் தரம் 11 இற்கும்

யாழ்ப்பாணம், நவ 22

கணித விஞ்ஞான பாடங்களுக்கான இறுவட்டு சாதனங்கள் அதாவது கணினியூடாக மாணவர்கள் தாமாகவே கற்கக்கூடிய சாதனங்கள் வடக்கில் இதுவரை சுமார் 50 பாடசாலைகளுக்கு மேல் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றில் 34 பாடசாலைகளுக்கு ஈ-கற்றல் சாதனங்களை மாகாணக் கல்வித் திணைக்களம் வழங்கியிருந்த நிலையில் ஏனைய பாடசாலைகள் அவற்றை திணைக்களத்திடம் பெற்று மாணவர்களுக்கு கல்வியூட்டி வருகின்றன என்று மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

21 ஆம் நூற்றாண்டை நோக்கிய கல்வி முறைமையினை நவீனப்படுத்தும் தூர நோக்குடன் வடமாகாணக் கல்வி முறை மீளாய்வு மாநாட்டில் எடுக்கப்பட்ட சிபார்சுக்கமைய சேர்வ் (serve) எனும் இணையக் கற்கை நெறி நிறுவகத்தின் அனுசரணையுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் வி லேர்ன் (we learn) பிரிவும் இணைந்து ஈ-கற்றல் சாதனங்களை வழங்கியுள்ளன.

10 ஆம் தரத்துக்கான விஞ்ஞான, கணித பாடங்கள் அவற்றில் பதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக விஞ்ஞான பாடத்தில் வரும் குருதிச் சுற்றோட்டம் பாடப்பகுதியை வகுப்பில் ஆசிரியர் கற்பித்து படங்கள் மூலம்விளக்கப்படுவதுஉண்டு. அவற்றை - குருதிச் சுற்றோட்டம் பாயும் அனைத்து அம்சங்கள், பகுதிகள் என அனைத்துப் பிரிவுகளும் அந்த ஈ-கற்றல் இறுவட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த இறுவட்டை மல்ரிமீடியாவில் ஒளிபரப்புவதன் மூலமாக வகுப்பில் உள்ள அனைவரும் இலகுவாகக் குறித்த பாடத்தைப் புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு கணித, விஞ்ஞான பாடங்களின் ஒவ்வொரு பாடப்பரப்பும் இறுவட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட இறுவட்டுகள் பெறுபேறுகள் குறைவாகப் பதிவாகும், வசதிகள் குறைந்த பாடசாலைகள் என 34 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அந்தப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனைக் கையளிக்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த மாதம் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது.

வசதி குறைந்த பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக அவை வழங்கப்பட்ட நிலையில் அடுத்த கட்டமாக மஹிந்தோதய ஆய்வுகூடம் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மல்ரிமீடியா வசதியுடைய பாடசாலைகள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அந்த இறுவட்டுகளைப் பெற்று மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வருகின்றன. இறுவட்டுகளில் சுமார் 20 நிமிட வீடியோ கொண்ட பகுதியைத் தயாரிப்பதற்கு பல மணி நேரங்கள் செலவிடப்பட்டுச் சரி பார்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. தரம் 10 இற்கான இறுவட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜனவரியில் தரம் 11 இற்குரிய கணித, விஞ்ஞான பாடங்களுக்கான இறுவட்டு வெளியிடப்படும்.

இந்த இறுவட்டு மூலமாக மாணவர்கள் தாமாகவே கணினியூடாகக் கற்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். அதன் மூலமாக மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்று வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடப்பரப்புகள் கொண்ட இறுவட்டுக்கள் சேர்வ் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஆசிரியர்களின் வேலைப்பழு கணிசமான அளவு குறைவடையும் என்று சேர்வ் நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் இராசதுரை தெரிவித்துள்ளார். இத்தகைய இறுவட்டுகள் பாடசாலைகளில் கணனிகளில் பதிவு செய்யப்பட்ட பின்னர் மாணவர்கள் தமது வசதிக்கேற்ப இச் சாதனங்களின் துணையுடன் தேவையான பாடங்களைத் தாமாகவே கற்று விளங்கிக் கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-4)

# இரண்டு ஆசிரியர்களுக்கு சம்பளம் நிறுத்தி வைப்பு

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தனது வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்காது நிறுத்தி வைத்துள்ளார். அவ்வாறு நிறுத்துவதற்கு அவருக்கு அதிகாரமில்லை என்றும் அதற்கு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:-


குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் சில வாரங்களுக்கு முன்னர் தங்குமிட வசதிகள் அற்ற பாடசாலையில் வதிவிடச் செயலமர்வை நடத்தியுள்ளார். இதன் போது அங்கு தங்கி நிற்காது சென்றிருந்த இரண்டு ஆசிரியர்களின் சம்பளத்தையே வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளார். அவ்வாறு நிறுத்துவதற்கு அவருக்கு அதிகாரமில்லை. அது குற்றச் செயல்.

அது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியவர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரே. அனுமதி இன்றிச் சம்பளத்தை நிறுத்த முடியாது. அவர் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த வாரம் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டி வரும்- என்றார். இது தொடர்பில் அறிய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருடன் பல முறை தொடர்பு கொண்ட போதும் பதில் கிடைக்கவில்லை. (கு-4)

# மரண அறிவித்தல்

## செல்வன் இராஜலிங்கம் வருண்ராஜ் (வருண்)

(நாறம்மல, சியம்பளகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலை, பழைய மாணவன்)



யாழ்.மண்கும்பான் மேற்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் நாறம்மலவை வதிவிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய செல்வன் இராஜலிங்கம் வருண்ராஜ்(வருண்) 12.11.2014 புதன்கிழமையன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார், இராஜலிங்கம் (துரை ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் நாறம்மல), பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை(செல்லையா) இரத்தினம் மற்றும் சோமசுந்தரம் காலஞ்சென்ற பூங்காவனம் ஆகியோரின் அருமைப் பேரனும், அமுதினி, காயத்தினி, கஜராஜ்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிரபா, இரதீசனன் (கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்-கொழும்பு-11) ஆகியோரின் அருமை மைத்துனரும், காலஞ்சென்ற நடராஜா(மைதிலி நகைமாடம், யாழ்ப்பாணம்) மற்றும் தங்கமலர், சுந்தரலிங்கம், யோகேஸ்வரி, காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் திருமகள், ஞானேஸ்வரன்(கனடா), தவமலர், காலஞ்சென்ற கனகலிங்கம்-குணேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், சிவலிங்கம்-யோகேஸ்வரி, வர்ணகுல சிங்கம்(ஐங்கரன் மோட்டோர்ஸ்-யாழ்ப்பாணம்)- ஜெயலட்சுமி, சிவலிங்கம் (சுவிஸ்), இந்திரா காந்தி ஆகியோரின் மருமகனும் அக்ஷயன், அபிஷன், அனுக்ஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம்(24.11.2014) திங்கட்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பொறளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றைய தினம் நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தந்தை: 077 612 9295, பிரபா : 0777 270 866

ரதீஸ் : 0777 259 612

நாறம்மல.



பெலாரஸ் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கும் நாட்டின் பிரதமர் தி.மு. ஜயரத்னவுக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அவர்கள் பிரதமர் தி.மு.ஜயரத்னவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து இரு நாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிலும் ஈடுபட்டனர். அதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் தற்போது நாட்டில் முதலீடுகள் தொடர்பான வர்த்தகம் சிறப்பான முறையில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்ததுடன் அந்நாட்டு முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான அழைப்பையும் விடுத்துள்ளார்.

# இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை

*ரில்வின் சில்வா தெரிவிப்பு*



கொழும்பு, நவ.22

ஜனாதிபதி தேர்தல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று ஜே.வி.பி கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் நாள்களில் மிகவும் தீர்மானமிக்க பல்வேறு சம்பவங்கள் இடம்பெறவுள்ளன. ஜனாதிபதி தேர்தல் சட்ட விரோதமான முறையில் நடத்தப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிளவடைந்து துண்டுகளாக சிதைவடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் இது குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதா பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா அல்லது தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா என்ற தீர்மானத்தை ஜே.வி.பி கட்சி இதுவரையில் எடுக்கவில்லை. எதிர்வரும் நாள்களில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஊழலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை அவசியம்

*சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு கடிதம்*

கொழும்பு, நவ.22

இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் இடம்பெறவிருக்கும் சார்க் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டின் போது பொறுப்புக் கூறுதல், அதிகாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், ஊழலைக் கட்டுப்படுத்துதல் ஆகியன தொடர்பான உறுதிப்பாட்டை எட்டுவதற்கு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாற்றுக்கொள்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் தெற்காசியப் பிரிவுகளுக்கான தலைவர்கள் சார்க் நாடுகளின் தலைவர்களிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் இது தொடர்பாகக் கூட்டாக எழுதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சார்க் நாடுகளில் ஊழலை சாமர்த்தியமாக இல்லாதொழிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் ஊழலைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கும் மக்களின் தகவல் அறியும் உரிமையை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கலாநிதி ஸ்ரிறாக் பிலிப்பாட், தெற்காசியப் பிராந்தியத்துக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர்களான எஸ்.ரணுக்கா (இலங்கை), இப்திகார் ஸமான் (வங்காளதேசம்), சதோஸ் மிஸ்ரா (இந்தியா), மரியம்சியுனா (மாலைதீவு), ஆஸிப் தாப்பா (நேபாளம்), சாட் ரஸிட் (பாகிஸ்தான்) ஆகியோர் அந்தக் கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (க)

# காட்டிக் கொடுப்பு எமக்குப் புதிதல்ல

*அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுகின்றார்*



கொழும்பு, நவ.22

காட்டிக் கொடுப்புக்கள் எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல என்று கூறியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"காட்டிக் கொடுப்பு என்பது இந்த நாட்டில் எல்லாக் காலங்களிலும் இடம்பெற்றதொன்றாகும். அது வரலாற்று ரீதியாக மறைந்து போகும் காரணியல்ல.

ராஜசிங்க மன்னரின் ஆட்சிக் காலத்தில் எஹலபொல நிலமே துரோகம் இழைத்திருந்தார். பின்னர் அந்த எஹலபொல சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக்கொள்ள பலிக்கடா ஒன்றை தேடுகின்றார். கடந்த 2010ஆம் ஆண்டிலும் இவ்வாறான ஒரு பலிக்கடாவாக சரத் பொன்சேகா மாற்றப்பட்டார். சரத்பொன்சேகாவுக்குத் தற்போது புத்தி ஏற்பட்டுள்ளது. அவரது அண்மைக்கால அறிக்கைகளின் மூலம் அந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

தற்போது பலிக்கடாவாக துடிக்கும் நபர் எதிர்வரும் ஏப்ரல் மே மாதமளவில் தெளிவு பெற்றுக் கொள்வார்."- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆளும் கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதையே விமல் வீரவன்ஸவின் கூற்று உணர்த்தியதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (ற)

# பாலித ரங்கே எம்.பி. ஆளும் கட்சிக்கு தாவினார்



கொழும்பு, நவ.22

ஐக்கிய தேசியக்கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார ஆளுங்கட்சியில் இணைந்து கொள்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அமைச்சுப் பதவியொன்றுக்கும் நியமிக்கப்படவுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை பாலித ரங்கே பண்டாரவுக்கும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது 25 கோடி ரூபா கைமாறியதை அடுத்தே பாலித ரங்கே பண்டார ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ள தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கிடையே களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமவுக்கு ஐம்பது கோடி விலை பேசப்பட்ட போதிலும் அவர் ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ள மறுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மேற்குலகின் அதிகாரத்தை தீர்மானிப்போராக புலிகள்

*தூதுவர் ராஜா எதிரிசூரிய கூறுகின்றார்*



கொழும்பு, நவ.22

மேற்குலக நாடுகளின் அதிகாரத்தை தீர்மானிக்கும் ஒரு சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மாறியுள்ளனர் என்று தென் அமெரிக்க நாடான சூரிநேமின் இலங்கைத் தூதுவர் ராஜா எதிரிசூரிய தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் வாக்குப் பலத்தை தீர்மானிக்கும் சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மாறியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சில தரப்பினரின் போலியான குற்றச்சாட்டுக்கள் காரணமாக இலங்கையின் அபிவிருத்தியை உலக நாடுகள் அங்கீகரிப்பதில்லை. இலங்கையில் போரின் பின்னரான நிலைமைகள் குறித்து சூரிநேம் ஜனாதிபதி டெலானோ புட்டர்சீக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

இலங்கைக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெறும் பரப்புரை மட்டுமே. மேற்குலக நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வாக்குப் பலம் காணப்படுகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கேடு ஏற்படுத்தியவர் எரிக் சொல்ஹெய்ம்

*ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு*

கொழும்பு, நவ.22

இந்த நாட்டுக்கு கேடு விளைவித்தவர்களில் ஒருவர் தான் சமாதானத் தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் என்று தெரிவித்துள்ளார் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

சமாதான உடன்படிக்கை காலத்தில் புலிகளுக்கு எவ்வகையான உதவிகளை வழங்கினார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்திய இராணுவத்தினரால் 360 பேராக மட்டுப்படுத்தப்பட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈயினர் ஐ.தே.கவினரால் 5 ஆயிரம் ஆயுதங்கள் மற்றும் நிதி வழங்கப்பட்டதால் ஒரே மாதத்தில் 6 ஆயிரம் பேராக அதிகரித்தனர். இதே போன்றுதான் சமாதான உடன்படிக்கையின் போது புலிகளுக்கு தேவையான அனைத்தும் நோர்வே சமாதானத் தூதுவரால் அனுப்பிவைக்கப்பட்டன.

புலிகளின் விமான தயாரிப்புக்கான உதிரிப்பாகங்கள் அனுப்பப்பட்டன. இதே போன்று கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக அதிசக்திவாய்ந்த புலிகளுக்கான ஒலிபரப்பு சாதனங்கள் அனுப்பப்பட்டன. அது மட்டுமல்ல, இன்னும் பல. இவை எல்லாவற்றுக்குமான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. எரிக் சொல்ஹெய்ம் தான் இந்த நாட்டுக்கு கேடு விளைவித்தவர்.

அவர் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொய்யான தகவல்களை கூறுவதாக கூறி வருகின்றார்"- என்று தெரிவித்துள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# நீதிமன்றத்தின் மீதான மக்களது நம்பிக்கை குறைந்துள்ளது

*ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு*

கொழும்பு, நவ.22

நீதிமன்றம் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"பொலிஸார் மற்றும் நீதிமன்றம் குறித்த மக்களின் நம்பிக்கை பழுதடைந்துள்ளது. நீதியின் ஆளுமை வலுவிழந்துள்ளது. நல்லாட்சிக்கான பண்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. அரசால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் ஆளும் கட்சி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் மோட்டார் சைக்கிள் வழங்குவதை நல்லாட்சியாக கருத முடியாது.

சிரேஷ்ட அமைச்சர்கள் மக்களுக்கு சேவையாற்ற பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சிரேஷ்ட அமைச்சர்களுக்கு கடமைகளும் வழங்கப்படவில்லை. நாட்டில் நல்லாட்சி நிலவுகின்றதா? என்பது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## ரிலாக்ஸா வாசியுங்க



நகைச்சுவை நடிகர் வடிவேலு திரைப்படங்களில் பேசிய வசனங்கள் சில மிகப் பிரபல்யமானவை. அவை நடைமுறை வாழ்க்கையில் ஒவ்வொரு சம்பவங்களுடன் எவ்வாறு ஒத்துப் போகின்றன என்ற, சின்னக் கற்பனை

மின்சாரம் - வரும் ஆனா வராது...
விலைவாசி - ரணகொடூரமா இருக்கே...
பெண்கள் - வாம்மா மின்னலு.....
இந்திய பாகிஸ்தான் எல்லை - இந்தக் கோட்டைத் தாண்டி நீயும் வரக் கூடாது.... நானும் வரமாட்டேன்...
பெற்றோல் விலை - நா அப்டியே ஷாக் ஆயிட்டேன்...
பங்குச் சந்தை - எதையும் பிளான் பண்ணி பண்ணனும்... பிளான் பண்ணாம பண்ணா இப்படித்தான்...
சினிமா - சப்பா ....கண்ணைக் கட்டுதே.........
அர்சியல் - கிளம்பிட்டாங்கையா ........கிளம்பிட்டாங்க....

## அரசியலுக்கு வரவே மாட்டேன் ரஜினி



இந்திய சினிமாவின் சிறந்த பிரமுகர் - 2014 என்ற உயர்ந்த விருது சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது. கோவாவில் நடைபெறும் 45 ஆவது சர்வதேச திரைப்பட விழாவில், தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லி மற்றும் சாதனை நடிகர் அமிதாப்பச்சன் இருவரும் இந்த விருதை ரஜினிக்கு வழங்கினர்.

விருது வழங்கும் முன் ரஜினி நடித்த படங்களின் தொகுப்பாக ஒரு காணொலி திரையிடப்பட்டது. அதில் ரஜினி தன் திரை வாழ்க்கையை ஆரம்பித்ததிலிருந்து, இப்போது நடிக்கும் லிங்கா வரையிலான படங்களின் காட்சிகள், ரஜினி பேசும் அதிரடி பஞ்ச் வசனங்கள் என்பன ஒலிபரப்பப்பட்டன.

இந்த நிகழ்வின் பின்னர் அவர் வழங்கிய நேர்காணலில், அரசியலில் ஒரு போதும் ஈடுபடமாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

## அஜித் தங்கை சின்னத்திரையில்



சன் தொலைக் காட்சியில் ஒளி பரப்பாகி வரும் சந்திரலேகா தொடரில், பரபரப்பான ஊடகவியலாளராக கலக்கி வரும் ஸ்வேதா அஜித்தின் தங்கையாம்.

உண்மையில் அல்ல. ஆழ்வார் படத்தில் அறிமுகமானதால் 'தல சிஸ்டர்' என்கிறார். வள்ளுவன் வாசுகி, இதயம் திரையரங்கம், கூட்டாஞ்சோறு படங்களில் நாயகியாக நடித்திருந்தாலும், சன் தொலைக் காட்சியின் சந்திரலேகா தொடர்தான் மக்களிடம் பிரபலப்படுத்தியிருக்கிறது.

விவேக் ஜோடியாக நான்தான் பாலா படத்தில் நடித்த ஸ்வேதா திடீரென்று சின்னத்திரை கதாநாயகியாகி விட்டார். சினிமாவை விட்டு ஏன் சின்னத்திரைக்கு என்றால் இங்குதான் 'டூ பீஸ்' (கவர்ச்சி உடை) போடச் சொல்ல மாட்டாங்களே என்கின்றார்.



## 80 வயது கைதியை திருமணம் செய்யும் 26 வயது இளம்பெண்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை சேர்ந்த சார்ள்ஸ் மேன்சன் என்ற 80 வயது நபர் கடந்த 1969 ஆம் ஆண்டு 8 மாத கர்ப்பிணி உட்பட 7 பேரை கொடூரமாக கொலை செய்த குற்றத்திற்காக ஆயுள் முழுவதும் சிறையில் கழிக்கும்படி தண்டனை வழங்கப்பட்டது.


கடந்த 45 வருடங்களாக சிறையில் இருக்கும் மேன்சனை பார்க்க சூ்படன் எலைன்ஸ்பர்டான் என்ற 26 வயது இளம் பெண் அடிக்கடி சிறைக்கு வந்தார். இதனிடையே இவர்கள் இருவருக்கும் காதல் மலர்ந்தது.

தற்போது இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து சிறை அதிகாரிகளிடம் தங்கள் திருமணத்திற்கு அனுமதி கேட்டனர். சிறை அதிகாரிகள் இவர்களுடைய திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததை அடுத்து விரைவில் இவர்களது திருமணம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இப்படியெல்லாம் கேட்பாங்களா ?

அமெரிக்காவில் மாணவர்களுக்கான தேர்வின்போது பிருஷ்டம் தொடர்பான கேள்வி கேட்கப்பட்டிருந்தமை தொடர்பான செய்திகள் வெளியாகியுள்ளன.


அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் உள்ள சார்லட்டி எனும் நகரில் அமைந்துள்ள அட்ரே கெல் எனும் கல்லூரியொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. லாஷ் மாண்டா எனும் பெண்ணின் பிருஷ்டம் பெரிது. போன்டா விஸ் எனும் ஆணின் பிருஷ்டம் சிறியது. இவர்கள் இருவரும் திருமணம்செய்துகொண்டார்கள். இதன்பின்னர் இவர்களுக்கு அழகிய குழந்தை யொன்று பிறந்துள்ளது. அதன் பெயர் லாபிரின்சஸ். எனவே, இந்தக் குழந்தையின் பிருஷ்டம் சிறியதாக இருக்குமா அல்லது பெரியதாக இருக்குமா என்பதற்கான சாத்தியக்கூறுகளை கூறுக என்றும் மற்றுமொரு குழந்தை பிறந்தால், அதனுடைய பிருஷ்டம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு சாத்தியக் கூறுகள் கூறுக என்று கேட்கப்பட்டுள்ளது. உங்களுக்கு கேட்ப தற்கு வேறு கேள்விகளே இல்லையா என்று பெற்றோர் கல்லூரி நிர்வாகத்துடன் முரண்பட்டுள்ளனர்.







## காந்தச் சிறுவன்



ரஷ்யாவில் சிறுவன் ஒருவனுக்கு இரும்புகளை இழுத்துக் கொள்ளும் காந்த சக்தி கிடைத்துள்ளது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

நிக்கோலை (வயது-12) என்ற சிறுவன் வீதியில் உள்ள வீதி விளக்கில் சாய்ந்த போது, அவனை மின்சாரம் தாக்கியுள்ளது. இதனையடுத்து மயக்கமடைந்த அந்தச் சிறுவனை பார்த்த அக்கம் பக்கத்தினர், அவனது வீட்டில் அவனை பத்திரமாக சேர்த்துள்ளனர்.

இதன்பின் தூங்கி விழித்து காலையில் எழுந்தவுடன் படுக்கையில் உள்ள சில நாணயங்கள் அவன் மீது ஒட்டிக் கொண்டுள்ளது. மேலும் சாப்பிடும் போது கரண்டியைக் கீழே போட்ட போது, அது அவனது நெஞ்சில் ஒட்டிக் கொண்டுள்ளது. இதனால் பள்ளிக்கூடத்தில் பிரபலமடைந்த நிக்கோலை, தற்போது மாணவர்கள் மத்தியில் சாகசங்கள் செய்து அசத்தி வருகிறான்.

# நீங்கள்

## காலை உணவைத் தவிர்ப்பவரா?



பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கும் சூழலில் வாழ்ந்து வரும் நாம், காலை உணவை அறவே தவிர்த்துக் கொண்டிருக்கிறோம். பணிபுரிபவர்கள் மட்டுமின்றி வீட்டில் உள்ள பெண்களும், முதியவர்களும் விரதம், பூஜை செய்ய வேண்டும் என சில காரணங்களைக் காட்டி காலை உணவைத் தவிர்க்கின்றனர். ஆனால் இதனால் நம் உடலில் ஏற்படும் பின் விளைவுகள் எத்தனை தெரியுமா? காலை வேளையில் பட்டினி கிடந்தால், வயிற்றில் சுரக்கும் 'ஹைட்ரோகுளோரிக்' அமிலம் வயிறு, குடல் பகுதிகளில் உள்ள திசுக்களை பாதிக்கத் தொடங்கி, வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு வழி வகுக்கிறது. உணவுக்கு பதிலாக நொறுக்குத் தீனிகளை சாப்பிட்டால், உணவுக் குழாயில் எரிச்சல் ஏற்படுவதுடன், நோய் தாக்குதலுக்கான ஆரம்ப நிலையை உருவாக்குகிறது. தினந்தோறும் காலை உணவைத் தவிர்ப்பதால், அஜீரணக் கோளாறு ஏற்படும். வயிற்றில் உள்ள இரைப்பைக்கு தேவையான உணவை குறிப்பிட்ட நேரங்களில் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் இரைப்பை சுருங்கிவிடும். வழக்க மாக செய்யும் பொங்கல் போன்ற சிற்றுண்டிகளை விட இட்லி, தோசை, உப்புமா போன்ற தானியங்களை கொண்டு தயாரிக்கப்படும் பல்வேறு வகையான உணவுகளைத் தயார் செய்து சாப்பிடலாம். இதனால் ஊட்டச்சத்து கிடைப்பதுடன், வயிற்றுக்கு எந்த ஒரு கோளாறும் ஏற்படாமல் நாம் தவிர்க்க முடியும். பழங்களில் ஏதாவது ஒன்றை உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம். இந்த வகை உணவுகளைச் சாப்பிடுவதால் சரியான உடலமைப்பும், உடலுக்குத் தேவையான நார்ச் சத்து, கல்சியம், விற்றமின்கள் ஏ, சி, ஈ போன்ற ஊட்டச் சத்துடன், அன்றைய தினத்துக்குத் தேவையான புத்து ணர்வும் கிடைக்கும்.



# தொப்பை

## குறைய சிறப்பான பயிற்சி

இன்றைய காலகட்டத்தில் தொப்பை பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் அதிகம். இதில் ஆண்கள், பெண்கள் என எந்தவித வேற்றுமையும் இல்லை. உடலில் தேவையற்ற கொழுப்புகள் ஒன்று சேர்ந்து தொப்பையாக மாறுகிறது. இதனால் தேவையற்ற அந்த கொழுப்பை குறைக்க உடற்பயிற்சி அவசியம். அதிலும் எளிய உடற்பயிற்சியான ஸ்கிப்பிங் பயிற்சியை தினமும் செய்து வந்தால் தொப்பைப் பிரச்சினை படிப்படியாக குறையும். ஸ்கிப்பிங் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பற்றிப் பார்க்கலாம்.

முதலில் உடலில் உள்ள தேவையற்ற எடை குறைகிறது. சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஆரோக்கியத்தையும், வளர்ச்சியையும், உடலுக்குப் புத்துணர்வையும் தரக் கூடியது. உடலின் ரத்த ஓட்டத்தை சீராக்குவதுடன், இதயத்துக்கும், நுரையீரலுக்கும் வலுவூட்டம் கொடுக்கிறது. உடலின் உள்ளுறுப்புகளும், நரம்புகளும் தக்க பயிற்சி கிடைப்பதால் அவற்றின் செயல்பாடுகள் சீராகின்றன. மனக் கவலை, மன அழுத்தம், எதிலும் நாட்டமின்மை போன்ற கோளாறுகள் நீங்குகின்றன. நல்ல மன ஒருமைப்பாட்டையும், தன்னம்பிக்கையையும் தருகிறது. ஆரோக்கியம் மற்றும் அழகைப் பராமரிக்க ஸ்கிப்பிங் உதவுகிறது. மிக முக்கியமாக ஆழ்ந்த உறக்கத்துக்கு ஸ்கிப்பிங் அருமருந்தாகும். கை, கால், தொடைப் பகுதி தசைகள் அதிக சக்தி பெறுகின்றன. மூட்டு வலி, கணுக்கால் வலி நீங்குகிறது. தொடர்ச்சியான இடுப்பு வலி உள்ளவர்களுக்கு அது குறைவதுடன், முதுகெலும்பின் எலும்பு முடிச்சுகள் பலம் பெறுகின்றன. இரத்த ஓட்டம் சீராகிறது.



# குண்டானவரா நீங்கள்?

உடல் எடையை குறைக்க பல்வேறு வழிகள் உள்ளன, அவற்றில் ஒன்று தான் ஜூஸ்கள் மூலம் எடையை குறைப்பது. உண்மையிலேயே ஜூஸ் குடித்தால் அடிக்கடி பசி ஏற்படுவதை குறைத்து நீண்ட நேரம் வயிற்றை நிறைத்து வைத்திருக்கும். இதனால் கண்ட கண்ட உணவு வகைகளைச் சாப்பிடமாட்டோம்.



**எலுமிச்சை ஜூஸ்**

பொதுவாக எலுமிச்சைக்கு உடல் எடைக்குறைப்பில் முக்கிய பங்கு. அதிலும் ஏழே நாள்களில் எடையில் மாற்றம் தெரிய, எலுமிச்சை ஜூஸில் 1 சிட்டிகை உப்பு, மற்றும் தேன் சேர்த்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்தால், உடலில் தங்கியுள்ள தேவையற்ற கொழுப்புகள் கரையும்.



**தக்காளி ஜூஸ்**

ஏழே நாள்களில் எடையில் நல்ல மாற்றம் வேண்டுமெனில், 3 தக்காளியை வேக வைத்து அதனை அரைத்து, அதில் வெல்லம் சேர்த்து தினமும் மூன்று வேளை குடித்து வரவேண்டும்.

**திராட்சை ஜூஸ்**

இதில் விற்றமின்கள் மற்றும் நல்ல கொழுப்புகள் இருப்பதால், இதனைக் கொண்டு ஜூஸ் போட்டு குடித்து வந்தால், உடல் எடை குறைவதோடு, சருமமும் நன்கு பொலிவோடு இருக்கும்.



**கொய்யா ஜூஸ்**

கொய்யாவில் விற்றமின் சி அதிகம் உள்ளதால், இதனை ஜூஸ் போட்டு வாரத்துக்கு இரண்டு நாள்கள் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், அது உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைத்துவிடும்

**ஒரேஞ் ஜூஸ்**

ஒரேஞ்சு பழ ஜூஸை குடித்தாலும், எடையில் மாற்றம் தெரியும். அதிலும் ஒரேஞ் பழ ஜூஸில் சிறிது தேன் சேர்த்து குடிக்க வேண்டும். குறிப்பாக வெதுவெதுப்பான தண்ணீரில் ஜூஸ் போட்டுக் குடிக்க வேண்டும்.



**அன்னாசி ஜூஸ்**

அன்னாசியை மட்டும் அரைத்தால், அது கெட்டியாக ஜூஸ் போன்று இருக்கும். ஆகவே அதில் சிறிது தண்ணீர் சேர்த்து கலந்து பசியாக இருக்கும் நேரத்தில் குடித்தால் பசியானது உடனே அடங்கும்.

# தோலில்

## உள்ள முடிகளை அகற்ற

சருமத்தில் வளரும் தேவையற்ற முடிகள்ள அகற்ற அழ்கு நிலையம் சென்று வேக்ஸிங் செய்து கொள்வதை பல பெண்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் அவ்வாறு சென்று பணத்தை வீணடிக்காமல் சில இயற்கை முறைகளைப் பின்பற்றினாலே இதிலிருந்து விடுபட முடியும். மேலும் இயற்கைப் பொருள்களை கையாள்வதன் மூலம், சருமத்திற்கும் எந்த ஒரு பாதிப்பும் வராது.

**எலுமிச்சை**

வெதுவெதுப்பான எலுமிச்சைச் சாற்றில் தேன் மற்றும் சிறிது சீனி சேர்த்து நன்கு கிளறி, தேவையற்ற இடத்தில் வளரும் முடியின் மீது தடவி பின் ஸ்கரப் செய்து எடுக்க வேண்டும். இதன் மூலம் மென்மையான மற்றும் பட்டுப் போன்ற சருமத்தைப் பெறலாம்.





**மஞ்சள்**

மஞ்சளை பப்பாளி அல்லது கடலை மாவுடன் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, சருமத்தில் தடவி உலர வைத்து, பின் 15 நிமிடங்கள் மசாஜ் செய்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படித் தினமும் செய்து வந்தால், நல்ல பயனைக் காணலாம்.

**கடலைமாவு**

கடலை மாவில் புரோட்டீன் அதிகம் உள்ளது. அத்துடன் மஞ்சள் தூள் மற்றும் தயிர் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து சருமத்தில் தடவி மசாஜ் செய்து, ஊற வைத்துக் கழுவினால், சருமத்தில் வளரும் முடியின் வளர்ச்சி தடைபடுவதோடு, சருமமும் மென்மையாக இருக்கும்.





**சீனி**

வாரத்துக்கு இரண்டு முறை சீனியை தேனில் சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி ஸ்கரப் செய்து வந்தால், முடியின் வளர்ச்சி தடைப்படும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்கள் ஓர் அடி தள்ளியே இருக்க வேண்டியிருக்கிறது

திகிலூட்டும்துப்பறியும்திரைப்படக்காட்சிகள் போன்று நகர்ந்துகொண்டிருக்கின்றன இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் காட்சிகள். புதிய திருப்பமாக அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான மைத்திரிபால சிறிசேன பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். தற்போதைய கொழும்பு அரசின் போக்கிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் போக்கிலும் அவர் அதிருப்தியுற்றிருந்தார் என்பதும் அதனால் அவர் பொது எதிரணி பக்கம் செல்லக்கூடும் என்பதும் ஏற்கனவே அரசியல் களத்தில் எதிர்பார்க்கப்பட்டதுதான். அவரைச் சமாளிப்பதற்காக அவருக்கு பிரதமர் பதவி தருவதற்கு கூட மஹிந்த இணங்கியிருந்தார்.

ஆனால், அவற்றையெல்லாம் உறுதியாக உதறிவிட்டு பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக திடீரென அவர் குதித்துள்ளார். தன்னோடு போட்டியிடப் போபவர் குறித்து அறிய ஆர்வமாக இருந்த மஹிந்தவுக்கு இது அதிர்ச்சி கலந்த ஆச்சரியமாக இருந்திருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மைத்திரிபாலவை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறிந்ததன் மூலம் உடனடியாகவே அதனை அவர் வெளிப்படுத்தியும் இருந்தார்.

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுப் பட்டியலில் பல பெயர்கள் இருந்தன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க, மாதுளுவாவே சோபித தேரர், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் சபைத் தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோரின் பெயர்கள் அந்தத் தெரிவில் அலசப்பட்டு வந்தன. இறுதி முடிவு எடுக்கப்படும் வரையில் மைத்திரிபால சிறிசேனவின் பெயர் அடிபடவில்லை. அவரைப் பொது எதிரணியின் வேட்பாளராக இழுத்து வந்ததில் சந்திரிகாவின் பங்கு அளப்பரியது என்பது சந்தேகத்திற்கிடமில்லாதது.

கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தல்களிலும், வடக்குத் தவிர்ந்த ஏனைய மாகாண சபைத் தேர்தல்களிலும் அசைக்க முடியாத வெற்றியைப் பெற்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன ஒரு மிகச் சிறந்த தெரிவுதான். இதுவரையில் இல்லாத ஒரு புதிய முகம் அவர். மைத்திரி சொல்லப் போகும் எல்லாவற்றையும் மக்கள் கூர்ந்து கேட்பதற்கு இது வாய்ப்பளிக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவர் அவர். மஹிந்தவின் வாக்கு வங்கியில் பலத்த அடியை இது ஏற்படுத்தும். இப்படிப் பல சாதகமான அம்சங்கள் மைத்திரிபாலவிடம் உள்ளன. அதனால் மஹிந்தவுக்கு எதிரான மிகச் சிறந்த போட்டிதான்.

ஆனால், தான்தான் எதிரணியின் பொது வேட்பாளர் என்று நேற்று மாலை அவர் அறிவித்த செய்தியாளர் மாநாட்டில் நாட்டின் தேசியப் பிரச்சினை குறித்து - தமிழர்களின் அரசியல் சிக்கல் குறித்து - அவர் எதுவும் குறிப்பிடவில்லை. தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற 100 நாள்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்றும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவேன் என்றும் அந்த மாநாட்டில் அறிவித்த மைத்திரிபால, தமிழர்களின் பிரச்சினை குறித்தோ, இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ வாய் திறக்கவில்லை என்பது கவலையளிக்கிறது.

சிங்கள பௌத்த வாக்குகளே மைத்திரி தலைமையிலான பொது எதிரணியின் கவனத்தில் குவிந்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது. தேசியப் பிரச்சினை இரண்டாம் பட்சமாக அல்லது அதற்கும் பிற்பட்டதாகவே மைத்திரிக்குத் தெரிகிறது போல் இருக்கிறது. எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலைத் தமிழர்கள் ஒரு அடி தள்ளி நின்றே அவதானிக்க வேண்டியுள்ளது.

மைத்திரிபாலவும் பொது எதிரணியும் தமிழர்கள் பிரச்சினையில், இனப் பிரச்சினைக்கான தீர்வில் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகிறார்கள் என்ற முக்கிய கேள்விக்கான விடை இன்னும் அவிழ்க்கப்படவில்லை. அதில் அவர்கள் அதீத அக்கறை காட்டுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை என்பதால் காத்திருப்பதும், தள்ளி இருப்பதுமே இப்போதைக்கு தமிழர்கள் முன்னுள்ள தெரிவு.

# பல்கலையில் சிற்றூழியராவதற்குக்கூட அரச ஆதரவாளராக இருக்கவேண்டும்

### அவலம் குறித்து நாடாளுமன்றில் சரவணபவன் எடுத்துரைப்பு



பல்கலைக்கழகத்தில் சிற்றூழியர் நியமனத்தைப் பெறுவதற்குக்கூட அரசின் ஆதரவாளராக இருக்க வேண்டும் என்கிற அவல நிலைமையே இப்போது இருக்கின்றது என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட உயர் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் அவர் உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:-

தமிழ் அமைச்சர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு நியமிக்கப்பட்டவர்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களும்கூட உள்ளார்கள். பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஒருவர் வீண் விரயம். லண்டனில் நடந்த பல வழக்குகளில் அவர் முன்னிலையாகாமல் தவிர்த்து வந்ததால் அவரது கட்சிக்காரர்கள் பலர் நாடு கடத்தப்பட்டனர். மேலும் தமது தொழில் தர்மத்துக்குப் புறம்பாக அவர் பெருந் தொகைப் பணத்தை அவரது கட்சிக்காரர்களிடம் இருந்து கடன் வாங்கினார். அவை இன்னமும் மீளளிக்கப்படவில்லை. அதன் விளைவாக ஐக்கிய ராச்சியத்தின் சட்டத்தரணிகள் சங்கம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவரது கட்சிக்காரர்களின் கடும் கோபமும் அவர் மீது திரும்பியது. இதனால் அவர் அங்கிருந்து தப்பிவந்து ஈபிடிபியின் பிரதம சட்ட ஆலோசகராகவும், நொத்தாரிஸாகவும் செயற்படுகிறார். யாழ். பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினராகவும் உள்ளார்.

பேரவைக்கான அவரது முதல் பதவிக் காலத்தில் மிதமிஞ்சிய மதுபோதை காரணமாக அவர் அடுத்தடுத்து மூன்று சபைக் கூட்டங்களைத் தவறவிட்டதுடன் சபை உறுப்பினர் பதவியை விட்டுத் தாமாக விலகியவராகவும் கருதப்பட்டார். எனினும், அது அரசுக்கு ஒரு பிரச்சினையாகத் தோன்றவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவரை மீண்டும் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினராக நியமித்துள்ளது. அதன்மூலம் பல்கலைக்கழக சட்ட திட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன.

ஷெரீனா சேவியர் எனும் மற்றுமொரு பெண் சட்டத்தரணி இருக்கிறார். அவரது குடும்பம் கனடாவில் வசித்து வரும் நிலையில், அவர் வட மாகாண ஆளுநரின் இராப்போசன விருந்தில் கலந்துகொள்கிறார். அவர் தமது அரசசார்பற்ற நிறுவனத்தில் அரசுக்கு விசுவாசியாக மாறியுள்ள விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் ஒருவரை வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஷெரீன் சேவியரும் யாழ். பல்கலை நிர்வாக சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும், கடந்த இரண்டு கூட்டங்களுக்கும் சமுகமளிக்காத நிலையில் மூன்றாவது கூட்டத்துக்கும் வராவிட்டால் உறுப்புரிமையை இழக்கும் கட்டத்தில் அவர் இருக்கிறார். தமிழ் அமைச்சர் தனது குழுவில் கைக்கூலிகளைத் தக்க வைத்துக் கொண்டு திறமை வாய்ந்தவர்களை ஓரம் கட்டிவருவதற்கான சமிக்ஞையாகவே இது தெரிகிறது.

**தமிழ் அமைச்சர் ஒருவரால் பரிந்துரைக்கப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு நியமிக்கப் பட்டவர்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களும்கூட உள்ளார்கள். பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ள சட்டத் தரணி ஒருவர் வீண் விரயம். லண்டனில் நடந்த பல வழக்குகளில் அவர் முன்னிலையாகாமல் தவிர்த்து வந்ததால் அவரது கட்சிக்காரர்கள் பலர் நாடு கடத்தப்பட்டனர். மேலும் தமது தொழில் தர்மத்துக்குப் புறம்பாக அவர் பெருந் தொகைப் பணத்தை அவரது கட்சிக்காரர்களிடம் இருந்து கடன் வாங்கினார். அவை இன்னும் மீளளிக் கப்படவில்லை.**

மேலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் கருத்துப்படி பேரவைக் கூட்டங்களுக்கு முன்பதாகவே பல்கலைக்கழகத்துக்கு வெளியே கூட்டங்கள் நடப்பதாகவும் உறுப்பினர்கள் எவ்வாறு செயற்படவேண்டும், வாக்களிக்க வேண்டுமென அங்கு உத்தரவிடப்படுவதாகவும் தெரியவருகிறது. உபவேந்தர் தெரிவில் வாக்களிப்பது எப்படி என்றுகூட அங்கு கூறப்படுகின்றது. யாழ். திருச் சபையின் பேராயர் ஒருவர் அத்தகைய கூட்டங்களுக்கு சமுகமளித்திருக்கிறார். தேவனின் தூதரான அவர், அந்த விடயங்களை மறுக்கப்போவதில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 876ஆம் இலக்க சுற்றறிக்கை, பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் கீழ் மட்டத்துக்கான நியமனங்கள் உயர் கல்வியமைச்சின் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகிறது. அப்படி ஒரு அலுவலக சிற்றூழியர் பதவியைப் பெறுவதற்குக்கூட அவர் அரசின் ஆதரவாளராக இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம். இத்தகைய வேலைகளுக்கு நாட்டின் எல்லாப் பிரஜைகளும் சமமாக விண்ணப்பிக்க முடியாது. அப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட சிற்றூழியர்கள் தரையைக் கூட்டுவதற்குக்கூட மறுப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. கட்சி ஆதரவாளர்களான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய விரும்பாததால் பெரும் செலவில் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய வெளியக பாதுகாப்பு நிறுவனங்கள் சேவையில் அமர்த்தப்படுகின்றன.

பல்கலைக் கழகங்களில் உச்சி முதல் உள்ளங்கால்வரை அரசியல் ஆதிக்கம் தலைவிரித்தாடுகின்றது. அதன் பிரதிபலனாகத் தனியார் பல்கலைக் கழகங்களே இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறுகிறார்கள். பல்கலைக்கழகங்களில் அரசியல் அராஜகம் தலைவிரித்தாடும்போது ஒழுக்கமுறைகளையும் கொள்கைகளையும் பற்றி எப்படி விவாதிக்க முடியும்? (உ) (தொடரும்)

அன்ரன்

# சாவைத் தோளில் தாங்கி வாழ்ந்தோர் நினைவு – 2

நவம்பர் 21ஆம் நாளுக்கு முன்னரே ஊர், தேசம், தாயம் புனிதப்பட்டு நிற்கும் நிலையில் அன்றைய தினம் நிகழ்வுகள் தொடங்கும்.

காலை 9 மணிக்கு கொடி ஏற்றப்படும். கொடி ஏற்றப்படும்போது கீதம் இசைக்கப்படும். வாரம் ஆரம்பமாகிவிட்டதற்கு அதுதான் அறிவிப்பு; அறிகுறி. அலுவலகங்கள், பொது இடங்களில் சிவப்பு மஞ்சள் வர்ணமிடப்பட்ட தனியான கம்பங்களில் அந்தக் கொடி பட்டொளி வீசப் பறந்தபடியிருக்கும். காலையிலும் மாலையிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடக்கும். அவர்கள் தற்கொடையாளிகள், அர்ப்பணிப்பாளர்கள், உறவு கல்வி வாழ்க்கை துறந்தவர்கள். தாம் விழித்திருந்து ஏனையவர்களைக் காத்தவர்கள். வரலாறு படைத்த பின்னர் சரித்திரமானவர்கள். அவர்கள் அபூர்வமானவர்கள். இதையெல்லாம் உணர்ந்து, அவர்களின் உன்னத நிலையை உணர்ந்து ஒவ்வொருவரும் உணர்வுபூர்வமாக அவர்களுக்காக ஒவ்வொன்றையும் செய்தார்கள். நிர்ப்பந்தத்துக்காகச் சிலர் செய்தார்கள் என்பதையும் நான் இங்கு ஒத்துக்கொள்ளாமல் இல்லை. ஆனால் அனேகமானவர்களுக்கு இளகிய மனம் இருந்தது. அவர்கள் தங்கள் மனங்களில் அவர்களை இருத்தி அஞ்சலித்தார்கள்.

மக்களுக்காக, இந்தச் சமூகத்துக்காகத் தம்மை ஆகுதியாக்கியவர்கள் நினைவாக வீதிகளுக்குப் பெயரிடல், அரசியல் கூட்டங்கள் நடத்தல், போட்டிகள் நடத்தல், திறப்பு விழாக்கள் நடத்தல், அவர்களின் பெற்றோரைக் கௌரவித்தல், படிப்பகங்களுக்கு மண்டபங்களுக்கு பெயரிடல் என்று வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டே இருக்கும்.



நாம் வாழ்வதும், வாழ வழி வகுப்பதும் எம் சந்ததி இந்த மண்ணைத் தமதாக்கி வாழையடி வாழையாக வாழ தம்மை ஈந்தவர்களின் நினைவில் ஒரு மக்கள் கூட்டம் நெக்குருகி நிற்கும் அந்தக் காலம் அற்புதமானது. மீண்டும் மீண்டும் போற்றிப் பாடத்தக்கது.

பத்திரிகைகள் அது பற்றிய செய்திகளைப் பிரதானமாகத் தாங்கிவரும். மறுபக்கத்திலோ பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலமாக்கப்பட்டிருக்கும் நிலை.

பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், நாடகங்கள் போன்ற கலை நிகழ்வுகள் எழுச்சி பெறும் காலம் அந்த ஒரு வாரம். சிரமதானங்களுக்கும் குறைவிருக்காது. சமூக சேவைகள் முழு மூச்சாக இருக்கும். புதிய நூல்கள் வெளியிடப்படும். அவற்றில் பல பரணிபாடுவதாக இருக்கும். இந்த ஒரு வாரமும் பாடசாலைகளிலும் ஒவ்வொரு நாளும் நிகழ்வுகள் அரங்கேறும். மாணவர்கள் சமூக சேவையில் ஈடுபடுவதற்குத் தூண்டப்படுவார்கள். பிரமாண்டமான பந்தல்களும் அலங்கார வளைவுகளும் நகரை, வீதிகளை அலங்கரிக்கும். எந்தப் பந்தல் பெரிது, எந்த வளைவு சிறந்தது என்று பார்ப்பதற்காகவே இளசுகள் சைக்கிள்களில் வலம் வருவார்கள். அது ஒரு கொண்டாட்ட மனோ நிலையை ஏற்படுத்தும். அவை இளைஞர்களுக்கு வரலாற்றை மட்டுமல்ல, எழுச்சியையும் ஊட்டும்.

பல இடங்களிலும் மக்கள் தங்கள் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் நெக்குருகி கண்ணீர் மல்கும் காட்சிகளைச் சாதாரணமாகக் காணக்கிடைக்கும். எல்லாவற்றினதும் உச்சமாக துயிலும் இல்லங்கள் எழுச்சி கொப்பளிக்க அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

1992 நவம்பர் 22ஆம் திகதிய பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றில் ஒரு பந்தி இப்படி இருக்கிறது. "யாழ். பல்கலைக் கழகத்திலும் கொடியேற்ற வைபவத்துடன் வார நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. துணைவேந்தர் போராசிரியர் அ.துரைராசா கொடியை ஏற்றி வைத்தார்."

இன்று, இந்த வாரத்தை விடுமுறையாக்கி விடுவதா இல்லையா? என்று ஆலோசிக்கும் நிலைமை வந்துவிட்டது. நினைவுகளைத் தவிர எல்லா இடங்களில் இருந்தும் அவர்களை துடைத்தழிக்கப் பலவந்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

---



## இது மரநடுகை மாதம்

# எதிர்காலச் சந்ததி பற்றிச் சிந்திப்போமா?

செ.செல்வராஜா

மரங்களை நடுங்கள். மரங்களை நடுங்கள் என்று ஒவ்வொரு நாளும், எழுதித் தொலைக்கும் இந்த மர மண்டைகள் எங்கிருந்து எழுதுகிறாங்கள்? என்று சிலர் புறுபுறுக்கத்தான் செய்கின்றனர். ஏனெனில் மரங்கள் வளர நல்ல நீர் அவசியம். உவர் நீர் உள்ள இடங்களில், நீரற்ற இடங்களில், அல்லது குடி நீர் அருந்தலாக உள்ள இடங்களில், வசிப்பவர்கள் மரங்களை நாட்டிப் பேணி வளர்ப்பதுபற்றிக் கற்பனை செய்யவே முடியாதுள்ளது. குடிப்பதற்கும், சமைப்பதற்கும் அன்றாட அத்தியாவசித் தேவைகளுக்கும் நீரற்ற நிலையில், மரங்களை வேறு நட்டுப் பட வைப்பதா? என அங்கலாய்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

பல்வேறு வழிகளிலும், நீரின் இன்றியமையாமை தவிர்க்க முடியாதது. மனித வாழ்வுக்கும், உயிர் பல்வகைத் தன்மைக்கும், நில, நீர் வாழ் உயிரினங்களுக்கும் நீர இன்றியமையாததுதான்.

உடல் ஆரோக்கிய விருத்தியிலும், மனிதரின் இருப்புக்கும் நீர் அவசியம். எனினும் இந்த உயிர் வாழ்வுக்கு உதவும் நீர் என்கின்ற வளம், கிடைப்பது இடத்துக்கு இடம் ஏற்றத்தாழ்வு கொண்டதாகவே உள்ளமை ஒரு கசப்பான உண்மை.

ஈர வலய இடங்களில் வருடத்துக்கு 2500 மில்.மீ மழை கிடைக்கின்றது. மற்றும் சில இடங்களில் மழை அறவே கிடைப்பதில்லை.

நீர் தொடர்பாகப் பல ஊழல்களும் இடம் பெறுகின்றன. சில இடங்களில் மனித பாவனைக்கோ, உயிர்களின் பன்மைத்துவத்துக்கோ, உயிர் சங்கிலித் தொடர் நடவடிக்கைகளுக்கோ பொருத்தமற்றதான நீரே கிடைக்கின்றது. இது அரசியல் நெருக்கடிகளையும் தோற்றுவிக்கின்றது. பூகோள அளவில் இதுபற்றிய ஆய்வுகளும் தொடர்கின்றன.

எது எவ்வாறாயினும், வாய்ப்புக் கிடைக்கும் ஒவ்வொருவரும், மரங்களை நாட்டி, பேணி வளர்க்க வேண்டியது அவசியம். ஏனெனில் மழையுடன் நெருங்கிய தொடர்புடையது மரங்கள். அல்லாமலும் மரங்களை நாட்டுவதனால் வேண்டத்தகாத பக்க விளைவுகள் ஏதும் ஏற்படுவதில்லை. எமது இருப்பு இயற்கை தந்த மரங்களும், எம் மூதாதையர் நடப்பட்ட மரங்களுமேயாகும். எதிர்காலச் சந்ததிக்கு நாம் என்ன செய்து வைத்துவிட்டுப் போகப் போகிறோம் என்பதனை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.



---

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்

*(நேற்றைய தொடர்ச்சி...)*



சச்சினின் முதல் குழந்தை சாரா பிறந்தபோது மனைவியுடன் அதே அறையில் இருக்க வேண்டும் என்று சச்சின் கேட்டார். படுக்கை கிடையாது என்றவுடன் ஒரு விரிப்பை வாங்கிக்கொண்டு தன் மகளைத் தொட்டுச் சிலிர்த்தார் அவர். தன் இரு குழந்தைகள் பிறந்து அவரின் கைக்குக் கொண்டுவரப்பட்ட கணங்களை வீடியோவில் பதிவு செய்து வைத்திருக்கிறார் சச்சின். 1999 இல் சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்கொண்டு நான்காவது இன்னிங்சில் 271 ரன்கள் இலக்கு வைக்கப்பட்டது. 6 ரன்களுக்கு இரண்டு விக்கெட்கள் விழுந்திருந்தன.

**வலியோடு போராடிய சென்னை டெஸ்ட்**

சச்சின் வந்ததும் இரண்டு பவுன்சர்கள் அவரை வரவேற்றன. சச்சின் அவற்றைத் தொடாமல் போனதும், பந்து உன் கண்ணுக்குத் தெரிகிறதா? என்று கேட்டார் வக்கார். சச்சின் கூர்மையாக அவரைப் பார்த்தார். 20 ரன்களோடு அன்றைய பொழுது முடிந்தது. டிராவிட், நயன் மோங்கியா என்று எதிர்முனையில் ஓரளவுக்குக் கிடைத்த ஆதரவோடு சச்சின் 136 ரன்களை அடைந்தார். இதற்கு நடுவே முதுகு வலி அவரைப் பாடாய்ப் படுத்தியது. தேநீர் இடைவெளியில் முதுகு முழுக்கப் பனிக்கட்டிகளை வைத்து வலியைக் குறைத்துக்கொண்டு மீண்டும் ஆடவந்து வலி தாங்காமல் வேகமாக ஆட்டத்தை முடிக்கப்போய்க் கேட்ச் ஆனார். அணி 17 ரன்களை வெற்றிக்குப் பெறவேண்டும் என்கிற புள்ளியில் நான்கு இலக்குகள் இருந்தும் தோற்றது. சச்சின் மனதளவில் மற்றும் உடளவில் சோர்ந்து போயிருந்தார். அவர் தானாக நேரில் போய் வாங்கிக்கொள்ளாத ஒரே ஆட்ட நாயகன் விருது அது என்பதிலேயே எவ்வளவு அவர் காயப்பட்டுப் போனார் என்று உணரலாம்.

பாகிஸ்தான் அணியுடன் ஆசிய டெஸ்ட் சாம்பியன் போட்டியில் விளையாடியபோது மூன்றாவது ஓட்டத்துக்கு ஓடிவரும்போது பாதையில் அக்தர் நிற்க ஓடுவது தாமதமாக அக்ரம் சச்சினை ரன் அவுட் ஆக்கினார். அதற்கு அப்பீல் செய்து அக்ரம் வென்றார். ஈடன் கார்டின் ரசிகர்கள் கொதித்தார்கள். இந்தப் பண்பற்ற செயலால் மனம் புண்பட்டாலும் வன்முறையில் ஈடுபட்ட ரசிகர்களைத் தானே நேரில் தோன்றி சமாதானம் செய்தார். அக்தர் வேண்டும் என்று நிற்கவில்லை என்றே நான் நம்புகிறேன். அதே சமயம் அக்ரம் அப்பீலுக்குப் போயிருக்க வேண்டியதில்லை என்பது அவரின் வாக்குமூலம். (தொடரும்)

## இறந்த மாணவன் தேநீர் அருந்திய விநோதம்

டில்லி, நவ.22

...டியில் இறந்த சிறுவனொ ருவன் தேநீர் அருந்திய சம்ப வம் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது. கடந்த 12ஆம்திகதி குறித்த சிறுவன் நஞ்சருந்திய நிலை யில் ஊட்டி அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான். அவனது உடல்நிலை மோச மானதைத் தொடர்ந்து, மாண வன் வீட்டுக்கு அனுப்பிவைக் கப்பட்டான். அங்கு அவன் இறந்து விட்டதாகக் கருதிய பெற்றோர், தமது மகன் விரும் பிச் சுவைக்கும் தேநீரை அவ னது வாயில் ஊற்றியுள்ளனர். தொடர்ந்து 2 குவளை தேநீர் முடிவடைந்ததால் அதிர்ச்சிய டைந்தபெற்றோர் அவனதுநாடித் துடிப்பைப் பரிசோதித்துள்ளனர். அவனுக்கு நாடித் துடிப்பு இருந் ததை அடுத்து, மீண்டும் ஊட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (ரி)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எமக்கும் வேண்டும் உறுப்புரிமை

## வலியுறுத்துகிறது இந்தியா

நியூயோர்க், நவ.22

ஐ.நா. பாதுகாப்பு அமைப்பு சர்வதேச சமூகத்துக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கா விட்டால், அதன் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகி விடும் என்று இந்தியா தெரி வித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்நாடாளுமன்ற அவைத் தலைவர்களின் 4 ஆவது உலக மாநாட்டுக்கான ஆயத் தக் குழுவின் இரண்டாவது கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் உலக அமைதி, ஜனநாயகம் ஆகிய வற்றுக்கான முக்கிய சவால் கள் என்ற தலைப்பிலான விவாதத்தில் பங்கேற்று, மக் களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் பேசியதாவது:

ஐ.நா. பாதுகாப்பு அமைப்பு முக்கியமான அமைப் புகளில் ஒன்றாகும். அதன் நம் பகத்தன்மை சந்தேகத்துக் குள்ளானால், ஐ.நா. சபை யின் நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாகும். ஐ.நா. பாதுகாப்பு அமைப்பின் கட்ட மைப்பானது 1945இல் அமைக் கப்பட்ட வடிவத்தைக் கொண் டுள்ளது.

சர்வதேச சமூகத்துக்கு இன்று அது உரிய பிர்திநிதித்து வத்தை அளிக்கவில்லை. 1945 இல் ஐ.நா. சபையில் 51 உறுப்பு நாடுகள் மட்டுமே இருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 193ஆக உள் ளது. ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த 3 நாடுகள் மட்டுமே 1945 இல் ஐ.நா. சபை உறுப் புரிமை கொண்டிருந்தன. தற்போது அவற்றின் எண் ணிக்கை 54ஆக உயர்ந்துள் ளது. ஆபிரிக்கக் கண்டத்தில் இருந்து பாதுகாப்பு அமைப் பில் உள்ள நிரந்தர உறுப் பினர்களின் எண்ணிக்கை, அமைப்பு செயற்படும் முறை கள், வீட்டோ எனப்படும் மறுப்புரிமையைப் பயன்படுத் துவது தொடர்பான நடத்தை நெறிகளில் முன்னேற்றம் ஏற்படுவது முக்கியமானது தான்.

எனினும், அவை பாதுகாப்பு அமைப்பின் கட்டமைப்பைச் சீர்திருத்தம் செய்வதற்கு மாற்றாக இருக்க முடியாது. பாதுகாப்பு அமைப்பு செயற் படும் விதத்தை மட்டும் மேம் படுத்தி விட்டு, அதன் கட்ட மைப்பில் சீர்திருத்தம் செய் யாமல் விடுவது என்பது பொருத்தமற்றதாகும். ஐ.நா. சபையின் 65ஆவது ஆண்டு விழா 2010இல் நடைபெற்ற போது, பாதுகாப்பு அமைப்பை விரைவில் சீர்திருத்தம் செய் வது என்று உலக நாடுகளின் தலைவர்கள் உறுதிபூண்ட னர். ஆனால் அது இன்ன மும் நடைமுறைப்படுத்த வில்லை என்றார் சுமித்ரா மகாஜன்.

ஐ.நா. பாதுகாப்பு அமைப்பில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட் டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளன.

இந்த அமைப்பை விரிவு படுத்தித் தங்களுக்கும் அதில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண் டும் என்று இந்தியா, ஜேர் மனி, ஜப்பான், பிரேசில் உள் ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ரி)

## சிறுமியின் வாயிலிருந்து 202 பற்கள் அகற்றல்



டில்லி, நவ 22

இந்தியாவில் சிறுமி ஒருவ ருக்கு வாயில் இருந்து 202 பற்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளன.

குரகோன் பகுதியை சேர்ந்த 7 வயதுச் சிறுமி வாய் வலிப் பதாகக் கூறி மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டார். வாய் வீங்கிய நிலையில் அனு மதிக்கப்பட்ட அந்த சிறுமிக்கு எக்ஸ்-ரே எடுக்கப்பட்டுள் ளது. அவருக்கு பல்லில் கட்டி ஏற்பட்டு பல் திசுக்களில் இயல் பற்ற நிலை ஏற்பட்டுள்ளதை மருத்துவர்கள் கண்டுபிடித் துள்ளனர். பின்னர் 2 மணி நேரம் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையில் 202 பற்கள் நீக்கப்பட்டுள்ளன. அவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர் அஜய்கூறுகையில், இது அதிர்ச்சி தருவதாகவும், சிகிச்சை எளிதா கத் தெரிந்த போதிலும், சிறு தவறு ஏற்பட்டாலும் தசை முறிவு ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (வ)

## மீனவர் நலன் காக்க தமிழக அரசு பாடுபடும்

சென்னை, நவ.22

தமிழக மீனவர்கள் நலன் காக்க தமிழக அரசு தொடர்ந்து பாடு படும் என்று முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



தமிழக மீனவர்கள் 5 பேர் விடுதலை பெற்று தாயகம் திரும்பியிருப்பது மகிழ்ச்சிக்கு உரியது என்று நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் இதனை அரசியலாக்க முற்பட்டிருப்பது வேதனை தருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், கடந்த 3 ஆண்டுகளாக அவர்கள் இதுகுறித்து என்ன நட வடிக்கை எடுத்துள்ளனர் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் மீனவர்கள் நலனுக்காக கடந்த 3 ஆண்டுகளாக தமிழக அரசு மேற்கொண்டுவரும் பணிகளை அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் 5 மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டது முதல் அவர்களுக்கான வழக்குச் செலவை தமிழக அரசு செலவிட்டதும், அவர்கள் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து முன்திகதியிட்டு அவர்களது குடும்பத்தாருக்கு மாதந் தோறும் 7,500 ரூபா வழங்க 2012 ஆம் ஆண்டில், உத்தரவிட்டதையும் முதலமைச்சர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி)



விண்வெளி ஆய்வு குறித்த சர்வதேசக் கண்காட்சி, பெங்களூரில் நேற்று ஆரம்பமாகியது. இதில், பிரான்ஸ் விண்வெளி மையம் சார்பில் அமைக் கப்பட்டிருந்த காட்சிக் கூடத்தை, இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் பார்வை யிட்டார். (ரி)

## பாகிஸ்தானில் இந்திய மீனவர் 56 பேர் கைது

கராச்சி, நவ.22

குஜராத் கடற்பகுதியில் கட லில் மீன்பிடித்துக் கொண் டிருந்த இந்திய மீனவர்கள் 56 பேரை பாகிஸ்தான் கட லோர பாதுகாப்பு படையினர் நேற்றுக் கைதுசெய்தனர். அவர் களது 10 படகுகளையும் பறி முதல் செய்தனர்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இருந்து இதுவரை 3 முறை இதுபோன்ற சம்பவங்கள் நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. மேலும் அவர்கள் மீது மீன்பிடி சட்டம் மற்றும் வெளி நாட்டவர்களுக்கான சட்டத் தின் கீழ் வழக்குப் பதிவு செய் யப்பட்டுள்ளதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. (ரி)

## ஜெயலலிதா வழக்கில் சிக்கும் பா.ஜ.க. புள்ளிகள்





சென்னை, நவ. 22

ஜெயலலிதா வழக்கில் சம்பந் தப்பட்ட பா.ஜ.க தலைவர்கள் பற்றிய விவரம் குறித்த அறிக் கையை உளவுத்துறை தயார் செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அ.தி.மு.க. பொதுச்செயலா ளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத் துக்கு மாற்றப்பட்டபோது, அரசு வழக்கறிஞராக முன் னிலையானவர் பி.வி.ஆச் சாரியா. அவர் ஜெயலலிதா தரப்புக்கு எதிராக தீவிரமாக வாதங்களையும், ஆதாரங் களையும் எடுத்து வைத்து வழக்கின் போக்கையே நேர் கோட்டுக்கு கொண்டு வந்த வர். இந்தநிலையில் கர்நாட காவில் சதானந்தகவுடா தலை மையிலான பா.ஜ.க. அரசு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, ஆச்சாரியாவுக்கு பா.ஜ.க தலைவர்களிடமிருந்து நெருக்கடி வந்ததாகக் கூறப்படு கிறது.

உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய ஆய்வில், ஆச்சாரி யாவை குறிப்பிட்ட காலகட் டத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்கள் அவரை நேரில் சந்தித்துப் பேசியவர்கள் என்பது போன்ற தகவல்களை சேகரித்துள்ள னர். அதில் கர்நாடக பா.ஜ.க தலைவர்கள், டில்லி பா.ஜ.க தலைவர்கள் சிலரது பெயர்கள் சிக்கியுள்ளன. தமிழக பா.ஜ.க வைச் சேர்ந்த சில பிரமுகர் களும் அப்போது ஜெயலலி தாவுக்கு ஆதரவாக ஆச்சாரி யாவுக்கு நெருக்கடிதர முனைந் ததும் உளவுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ரி)

# குடும்ப ஆட்சியை ஒழியுங்கள் சேவைக்கு வாய்ப்பளியுங்கள்

## ஜார்க்கண்ட் மக்களுக்கு மோடி கருத்து

ராஞ்சி, நவ. 22

சட்டசபைத் தேர்தல் எதிர் வரும் 25 ஆம் திகதி நடை பெற உள்ள ஜார்க்கண்ட் மாநிலப் பகுதியில் நடை பெற்ற பேரணி, பொதுக்கூட் டத்தில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றி னார். அப்போது, ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருக்கும் இதே வளம்தான் ஆஸ்திரேலி யாவிலும் உள்ளது.



ஆனால், ஆஸ்திரேலியா பணக்கார நாடாக உள்ளது, ஜார்க்கண்ட் ஏழை மாநில மாகவே உள்ளது. இதற் குக் காரணம் ஜார்க்கண்ட் மாநிலத்தை ஆண்ட அரசு தான். ஜார்க்கண்ட் மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல விரும்பி னால் ஜார்க்கண்ட் மாநிலத் தில் தற்போது நடந்து கொண் டிருக்கும் குடும்ப ஆட்சியை ஒழித்துக் கட்டுங்கள், ஜார்க் கண்ட் மாநிலத்தையே அவர் கள் கொள்ளையடித்துக் கொண் டிருக்கின்றனர்.

ஆனால் அதற்காக அவர்கள் வருத்தமோ வெட்கமோ படவில்லை. ஜார்க்கண்டில் இருக்கும் சூழ்நிலையை மாற்ற எனக்கு உங்களது வாழ்த்துகள் தேவை. நான் நிறைய வாக்குறுதிகளை அளிக்க விரும்பவில்லை. இந்தநாட்டில் உள்ள அனைத்து மகளிருக்காகவும் கழிவறை வசதியை ஏற்படுத்த விரும் புகிறேன் என்று கூறினார். (ரி)

## சார்க் உறுப்பு நாடுகளுடன் இந்தியா புதிய ஒப்பந்தங்கள்

சார்க் உறுப்பு நாடுகளுடன் இந்தியா மேற்கொள்ளவுள்ள புதிய ஒப்பந்தங்களுக்கு மத் திய அமைச்சரவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தது.

நேபாளத் தலைநகர் காத் மண்டுவில் எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் சார்க் மாநாடு நடைபெற உள்ளது. இதில் வீதி, ரயில் போக்கு வரத்து மேம்பாடு, பிராந்திய அளவிலான மின்தொகுப்பு அமைத்தல் உள்ளிட்ட ஒப்பந் தங்கள் கைச்சாத்தாக உள் ளன. இந்தியா - நேபாளம் இடையே சுற்றுலா மேம்பாட் டுக்கான புரிந்துணர்வு ஒப்பந் தமும் மேற்கொள்ளப்பட உள் ளது. இந்த ஒப்பந்தங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. (ரி)

# ஈராக் மீதான அமெ. போர் முற்றிலும் மாறுபட்டது

## அமெரிக்க ராணுவத் தலைமைத் தளபதி டெம்ப்ஸி கூறுகிறார்



வொஷிங்டன், நவ.22
ஈராக்கில் அமெரிக்கா தற்போது தொடுத்துள்ள போர், அந்த நாட்டுடனான முந்தைய போர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என, அமெரிக்க இராணுவத் தலைமைத் தளபதி மார்ட்டின் டெம்ப்ஸி தெரிவித்தார்.
இராணுவ இணையத்தளம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் புதன் கிழமை பேசியதாவது:
முந்தைய ஈராக் போர்களின் போது அமெரிக்கா பின்பற்றிய அணுகுமுறை வேறு, அங்கு தற்போது நடைபெற்று வரும் போரில் அமெரிக்கா பின்பற்றும் அணுகுமுறை வேறு.
எனவே, முந்தைய ஈராக் போர்களிலிருந்து தற்போதைய போர் முற்றிலும் மாறுபட்டது. முன்பு போல, ஈராக் மீது படையெடுத்து, தீயசக்திகளிடமிருந்து நாட்டை மீட்டு, பின்பு சிறிது சிறிதாக அதன் அதிகாரத்தை உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கும் பணியைத் தற்போது அமெரிக்கா கடைப்பிடிக்கவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிடும் அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினருக்கு உதவிகளை மட்டுமே அமெரிக்கா தற்போது அளித்து வருகிறது.
அண்மையில், சிஞ்சார் மலைப் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு வரும் குர்து படையினருக்கு விமானங்கள் மூலம் ஆயுதங்களை வீசுமாறு அமெரிக்காவை ஈராக் கேட்டுக்கொண்டது. (வ)

# அமெ. குடியுரிமை சட்டத்தில் திருத்தம்



வொஷிங்டன், நவ.22
அமெரிக்காவில் சட்ட விரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும், நாட்டில் மந்தமாக இயங்கும் இடம்பெயர்வோருக்கான சட்டத்தை திருத்தி அமைக்கும் வகையிலும் சில முக்கிய முடிவுகளை வெளியிட்டுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.
இதன்மூலம், அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசித்து வரும் பல லட்சத்துக்கும் மேலான மக்களுக்கு விரைவான ஒரு மாற்றம் கிட்டும் என்று தெரிய வந்துள்ளது. மேலும், நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், வெளிநாட்டில் இருந்து வேலைக்காக வருபவர்களின் புலம்பெயர்வு சட்டங்களின் திருத்தங்களையும் வெளியிட்டுள்ளார்.
ஒபாமாவின் இந்த அறிவிப்பால், சட்டவிரோதமாக வசித்து வருகின்றவர்களுக்கு விரைவில் ஒரு விடிவு வரும் என்று தெரியவந்துள்ளது. இந்தப் புதிய நடைமுறையால் அவர்கள் அமெரிக்க குடியுரிமையோ, வீடு வாங்கவோ, அல்லது குடியுரிமை அட்டை எனப்படும் கீறீன் கார்ட் பெறவோ வாய்ப்பில்லை. ஆனால், அவர்கள் அனைவரும் அமெரிக்காவில் எந்தப் பயமுமின்றி தங்களுடைய பணியைத் தொடர முடியும். மேலும், வேலைக்கான உரிமத்தையும், பாதுகாப்புக்கான எண்ணையும் பெற முடியும்.
மேலும், தங்களுடைய சொந்த நாடுகளுக்குச் சென்று வரவும் அனுமதி வழங்கப்படும்.
மேலும், இளம் வயதினருக்கும் இந்த புதிய திட்டம் வழிகாட்டியுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இளம்வயதினருக்கான புலம் பெயர்ந்தோருக்கான உரிமைகளில் தற்போது சில தளர்வுகள் செய்யப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு நடைமுறையின்படி அமெரிக்காவை வந்தடைந்த இளைஞர்கள் 31 வயதுக்கு குறைவானவர்களாகவும், ஜூன் 15, 2007 இற்கு முன்னர் வந்தவர்களாகவும் இருக்கவேண்டும். ஆனால், ஒபாமா அதனைத் தளர்த்தி, ஜனவரி 1, 2010 என்று ஆக்கியுள்ளார். வயது வரம்பினையும் அதிகரித்துள்ளார். இதனால், மேலும் 270,000 பேர் பயனடைவார்கள். ஆனால், இந்த அறிவிப்பு சட்டவிரோத குடியேறிகளின் பெற்றோருக்கோ, அதிக அளவிலான வருடங்கள் வசித்தவர்களுக்கோ பொருந்தாது. (வ)

# நேபாளத்தில் ஆற்றில் பஸ் கவிழ்ந்து 24 பேர் சாவு


காத்மண்டு, நவ.22
நேபாளத்தில் மலைகள் நிறைந்த மேற்குப் பகுதியில் உள்ள ஓர் ஆற்றில் பயணிகள் பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் கவிழ்ந்ததில் 24 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.
45 பயணிகளுடன் பயணித்த பஸ், ஜஜார்கோட் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை குறுகலான வீதியிலிருந்து விலகி பேரி ஆற்றுக்குள் விழுந்து நீரில் மூழ்கியது.
அதுகுறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற நீச்சல் வீரர்களும், பொலிஸாரும் பயணிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 2 குழந்தைகள் உட்பட 5 பேரின் சடலங்கள் கிடைத்துள்ளதாக ஜஜார்கோட் பொலிஸ் துறை உயர் அதிகாரி தினேஷ் ராஜ மைநாலி தெரிவித்தார்.
மேலும் உயிருடன் மீட்கப்பட்ட 10 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
இதுகுறித்து, மற்றொரு பொலிஸ்துறை உயர் அதிகாரி ஷேர் பகதூர் சவுத்ரி கூறும்போது:
இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அதேநேரம், அதிகார பூர்வ பயணிகள் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களை விடக் கூடுதல் பயணிகள் பஸ்ஸில் பயணம் செய்திருக்கலாம் எனக் கருதப்படுவதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார். (வ)

# அசாஞ்சே மீதான பிடியாணை ரத்துச் செய்ய நீதிமன்று மறுப்பு



தன்மீது பிறப்பித்துள்ள கைது உத்தரவை திரும்பப் பெற வேண்டும் என்று விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே தாக்கல் செய்திருந்த மேல் முறையீட்டு மனுவை சுவீடன் நீதிமன்றம் நிராகரித்தது.
பாலியல் முறைப்பாடுகள் தொடர்பாக 2010-ஆம் ஆண்டு ஜூலியன் அசாஞ்சேவுக்கு கைது உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.
பாலியல் முறைப்பாடு தொடர்பாக அசாஞ்சேயை விசாரிக்க சுவீடன் விரும்பியது. ஆனால், ஈக்வடாரில் அவர் தஞ்சமடைந்துள்ளார்.
ஈக்வடாரில் உள்ள லண்டன் தூதரகத்தில் அசாஞ்சே கடந்த ஜூன் 2012 ஆம் ஆண்டு தஞ்சம் புகுந்தார். அவரைப் பிரிட்டன், சுவீடனிடம் ஒப்படைத்தால், அங்கிருந்து அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கின்றனர்.
அமெரிக்காவில் உலகின் மிகப் பெரிய தகவல் கசிவு வழக்கு அவருக்கு எதிராக அங்கு காத்திருக்கிறது. (வ)

# காஷ்மீர் தலைவர்களுடன் பேசிய பின்னரே இந்தியாவுடன் பேச்சு



இஸ்லாமாபாத், நவ.22
காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களுடன் பேசிய பின்னரே, காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்துவோம் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.
காஷ்மீர் ஆக்ரமிப்பு காஷ்மீரின் முசாபராபாத்தில் நடைபெற்ற காஷ்மீர் பேரவைக் கூட்டத்தில் நவாஸ் ஷெரீப் பேசியதாவது:
"காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண முடியும். இதற்கான முயற்சியில் பாகிஸ்தான் தீவிரமாக இருந்தது. ஆனால் இரு நாட்டு வெளியுறவுச் செயலர்கள் இடையே நடைபெற இருந்த பேச்சை இந்தியா ரத்துச் செய்தது. இந்தியாவுடன் பேச்சு நடத்துவதற்கு முன்பு காஷ்மீர் தலைவர்களின் கருத்துக்களை, ஆலோசனைகளைப் பெற முயன்றோம்.
காஷ்மீர் பிரச்சினை குறித்து ஐ.நா. சபை உட்பட பல்வேறு சர்வதேச அரங்கில் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளோம். ஆனால் இந்த விடயத்தில் ஐ.நா. மற்றும் உலக நாடுகள் அமைதியாக உள்ளன" என்று கூறினார். (வ)

# கலைக்கப்பட்டது ஜப்பான் நாடாளுமன்றம்



ஜப்பான் நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பிரதமர் ஷின்ஸோ அபே அறிவித்துள்ளார். நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு டிசெம்பர் மாதம் தேர்தல் நடத்த பிரதமர் ஷின்சோ அபே முடிவு செய்திருந்தார்.
நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிய இன்னமும் 2 ஆண்டுகள் உள்ள நிலையில், நேற்று நாடாளுமன்றத்தைக் கலைத்து பிரதமர் அது குறித்து அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளார்.
ஜப்பான் நாட்டின் பொருளாதாரத்தில் மந்த நிலை ஏற்பட்டமை மற்றும் சர்ச்சைக்குரிய விற்பனை வரி உயர்வு போன்ற பிரச்சினைகளால் ஜப்பான் நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. (வ)

# ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆயுதக் கிடங்கு தகர்ப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர் குண்டுகளை தயாரிக்க பயன்படுத்திய தொழிற்சாலைக் கட்டடம் ஒன்றின் மீது கனேடிய போர் விமானங்கள் குண்டு வீச்சை மேற்கொண்டுள்ளன.
ஈராக்கின் வட பகுதியில் அமைந்துள்ள இந்த தொழிற்சாலை மீது கனேடிய போர் விமானங்களுடன், ஏனைய கூட்டணி நாடுகளின் விமானங்களும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளன. கனடாவின் CF-18 வகை போர் விமானங்கள் நான்கு குறித்த அந்த இலக்கின்மீது எட்டுக் குண்டுகளைத் துல்லியமாக வீசியதாகக் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலில் அந்த ஆயுதத் தொழிற்சாலை தரை மட்டமானதாகவும், நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் இறந்ததாகவும் கூறப்படுகிறது. (வ)

# அணு ஆயுதச் சோதனை நடத்துவோம் மீண்டும் மிரட்டுகிறது வட கொரியா

தங்களுக்கு எதிராக ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள வடகொரியா, மீண்டும் அணு ஆயுதச் சோதனையை நடத்தப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளது.
வட கொரியாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், அந்த விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் ஐ.நா.வில் புதன் கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
அந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த வட கொரியா, அதற்குப் பதிலடியாக அணு ஆயுதப் பரிசோதனையை நடத்துவோம் என்று மிரட்டல் விடுத்தது. இதுகுறித்து வட கொரிய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூறியதாவது:
"அமெரிக்காவின் தூண்டுதலின் பேரிலேயே ஐரோப்பிய யூனியனும், ஜப்பானும் எங்களுக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்தன. இது போன்ற தீர்மானங்கள், பதற்றத்தை மேலும் அதிகரிக்கவே செய்யும். இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாக இருக்கும் அமெரிக்காவுக்கு எதிரான எங்களது படைபலத்தை, மேலும் அதிகரிப்போம் - என்றார். (வ)

# சான்பிரான்சிஸ்கோவில் ஒருநாள் முதல்வராக பதவி வகித்த நாய்



சான்பிரான்சிஸ்கோ, நவ.22
அமெரிக்காவில் நாய் ஒன்று ஒருநாள் மட்டும் முதல்வராக பதவி வகித்துள்ளது.
அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் நேற்று முன்தினம் ஒரு நாளுக்கு மட்டும் முதல்வராக ப்ரீடா என்ற நாய் நியமிக்கப்பட்டது. காலைமுதலே ப்ரீடாவைப் ஒளிப்படம் எடுக்க கூட்டம் கூட்டமாக அங்கு பத்திரிகையாளர்களும் பொது மக்களும் சான்பிரான்சிஸ்கோ முதல்வர் அலுவலகத்துக்கு விரைந்தனர். இதனால் நேற்று முன்தினம் ப்ரீடாவுக்கான தினமாக சான்பிரான்சிஸ்கோவில் கொண்டாடப் பட்டது.
சான்பிரான்சிஸ்கோ நகரில் ஏ.சி.சி. என்ற விலங்குகள் பராமரிப்பு மற்றும் காப்பகம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு நாடு முழுவதும் உள்ள ஆதரவற்ற வீட்டு விலங்குகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. ஏ.சி.சி. அமைப்பு இந்த வருடம் 25 ஆவது ஆண்டு விழாவில் அடியெடுத்து வைத்துள்ளதை அடுத்து, இந்த வருடம் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள நாய்களின் உரிமையாளர்களிடம் நிதி திரட்டப் பட்டது.
இந்தநிலையில், சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த டீன் க்ளார்க் என்ற வீட்டு விலங்குகள் ஆர்வலர் ஏ.சி.சி. அமைப்புக்கு தாராள நிதி வழங்கி உள்ளார். இதனால் அவருக்கு ஏ.சி.சி. அமைப்பால் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. (வ)

# கருவில் இருந்த குழந்தையின் மூளையில் அறுவைச் சிகிச்சை



பிரான்ஸ் நாட்டில் முதன் முறையாக கருவில் உள்ள குழந்தைக்கு மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை அளித்து சாதனை படைத்துள்ளனர்.

பிரான்ஸின் பரிஸ் நகரில் உள்ள நெக்கர் மருத்துவ மனையில் கருவில் உள்ள 5 மாதக் குழந்தை ஒன்றுக்கு 2 மணி நேரம் அறுவைச் சிகிச்சை செய்து ஸ்பினா பிஃபிடியா என்ற பிறப்பு குறைபாட்டுநோயை மருத்துவர்கள் குணப் படுத்தியுள்ளனர்.

குழந்தையின் மூளையில் இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதாகவும், சிகிச்சை செய்த பத்து நாள்களில் குழந்தைக்கு இருந்த மூளை நோய் குணமடைந்ததாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். 4 மாதங்களுக்கு முன்பு நடந்த இந்த சிகிச்சை முறையின் தகவல்களை, குழந்தை பிறந்தபின்பு தான் மருத்துவர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது தாயும் சேயும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## லட்சியத்தை மாற்றாதீர்

இந்த உலகம் இறைவனுக்குச் சொந்தமானது. உலகப்பொருள்களில் எல்லாம் அவரே இருக்கிறார். இந்தக் கோணத்தில் பார்க்கத் தொடங்கி விட்டால், எமது மனம் உயர்வு பெறும். ஒரு லட்சியத்தை ஏற்றுக் கொண்டபின், அதைவிடப் புதுமையான ஒன்றைக் கண்டதும் பழையதைப் புறக்கணிப்பது அல்லது விட்டுவிடுவது உங்கள் ஆற்றலைச் சிதறடித்து விடும். இங்கொன்றும் அங்கொன்றுமாக நுனிப்புல் மேய்பவர்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. கணநேரம் இன்பமாக ஏதோ கிடைக்கலாம். ஆனால், அத்துடன் எல்லாம் முடிந்து விடும். ஆன்மிகத்தைப் புறக்கணித்து விட்டு, மேலைநாட்டு நாகரிகத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினால், மூன்றே தலைமுறைகளில் எமது பண்பாடு அழிந்து விடும். ஒரு லட்சியத்தை எடுத்துக் கொண்டு அதைப் பற்றியே கனவு காணுங்கள். அதைச் சுற்றியே உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வையுங்கள். பிறருக்காகச் செய்கின்ற சேவையால், எம்மைத் தூய்மைப்படுத்திக்கொள்ள முடியும். சுயநலத்தால் சுகம் கிடைக்கும் என்று மனிதன் முட்டாள் தனமாக நினைக்கிறான். உண்மையில், தன்னலத்தை ஒழிப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. எம்மை நாமே பெரிதாக எண்ணிக் கொண்டு அகந்தை கொள்வது கூடாது. சாதாரணமானவர்களாக எம்மைக் கருதும் போது தான், எம்மிடம் கருணையும், பணிவும், நல்ல சிந்தனையும் வெளிப்படத் தொடங்கும்.

விவசாயி மடையைத் திறந்து விட்டால், புவியீர்ப்பு விசையால் நீர் தானாக பள்ளத்தைநோக்கிப் பாய்வதுபோல, எல்லா ஆற்றல்களும் மனிதனுக்கு இயல்பிலேயே இருக்கின்றன. ஆன்மிகத்தின் உதவியால் தடைகளைப் போக்கி நாம் நிறைநிலையை அடைய வேண்டும். ஆன்மிகத்தின் உதவியால் தீயவர்கள் கூட மகானாக முடியும். வாழ்வில் தடைகளைப் போக்கினால் போதும். எமது இயல்பான குணமாகிய நிறைநிலையின் வாசல்கள் தானாகவே திறந்து கொள்ளும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | | 7 | |
| 4 | 8 | | 7 | | | | 2 | |
| | | 1 | 2 | | | | 6 | |
| 5 | 2 | | | | 9 | 8 | | 7 |
| | 6 | 7 | 3 | 4 | 8 | 5 | 9 | |
| 8 | | 9 | 5 | | | | 1 | 3 |
| | 1 | | | | 7 | 9 | | |
| | 9 | | | | 3 | | 5 | 4 |
| | 3 | | | 9 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்கலையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 6 | 3 | 2 | 5 | 7 | 9 |
| 3 | 9 | 2 | 5 | 1 | 7 | 4 | 8 | 6 |
| 6 | 7 | 5 | 8 | 4 | 9 | 2 | 1 | 3 |
| 9 | 6 | 8 | 7 | 5 | 3 | 1 | 2 | 4 |
| 5 | 3 | 7 | 1 | 2 | 4 | 9 | 6 | 8 |
| 1 | 2 | 4 | 9 | 8 | 6 | 3 | 5 | 7 |
| 2 | 8 | 9 | 3 | 7 | 1 | 6 | 4 | 5 |
| 7 | 1 | 3 | 4 | 6 | 5 | 8 | 9 | 2 |
| 4 | 5 | 6 | 2 | 9 | 8 | 7 | 3 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்**: தொழில் வியாபாரத்தில் உயர்வுகள் உண்டாகும். பணியாளர்கள்மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாகப் பணிகளைச் செய்து முடிப்பார்கள். செயற்றிறன் அதிகரிக்கும். பயணங்களின் போது கவனம் தேவை.

**இடபம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குன்ற சொல்லியபடியே இருப்பார்கள். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையைத் தரும். பிள்ளைகள் எதிர்காலம் குறித்து தேவையான பணிகளைக் கவனிப்பீர்கள்.

**மிதுனம்**: எதிலும் ஆதாயம் கிடைக்கும். பேச்சுத் திறமை அதிகரிக்கச் செய்யும். எதிர்ப் பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**கடகம்**: வியாபாரம் தொடர்பாக செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிப் போகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல். வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும்.

**சிங்கம்**: பிள்ளைகள்மூலம் மனம் மகிழும் காரியங்கள் நடக்கும். உறவினர்கள் வருகை இருக்கும். பேச்சுத் திறமையால் காரியங்களைச் சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**கன்னி**: எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும். அறிவுத்திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசிப் பொழுதைக் கழிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**துலாம்**: வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறு வார்கள். சிலருக்கு உத்தியோகம் கிடைக்கலாம். உங்களுக்கு மகிழ்ச்சியான செய்தி வரும்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனம் தேவை. நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும்.

**தனுசு**: மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

**மகரம்**: தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும்.

**கும்பம்**: குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளைக் கேட்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும்.

**மீனம்**: தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகுமுறையால் வெற்றி காணும் நாள். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கக்கூடும்.

## நாளை

**கார்த்திகை-07 ஞாயிற்றுக்கிழமை | 23.11.2014**

திதி: பிரதமை மா.05.46 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப.02.02 வரை
சுபநேரம்:09.11-10.41 வரை
இராகுகாலம்: 04.41-06.11 வரை

# கலைமதி, பாடும்மீன், சென்.மேரிஸ், நவஜீவன்ஸ் மைலோ கிண்ண அரையிறுதிகளில் மோதல்




யாழ்ப்பாணம்,நவ. 22

நவிண்டில் கலைமதி, குருநகர் பாடும்மீன், நாவந்துறை சென். மேரிஸ் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் மைலோ கிண்ண அரையிறுதியில் மோதுவதற்குத் தகுதி பெற்றுள்ளன. மைலோ கிண்ண இரண்டாம் சுற்று நேற்று வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது எனினும் சென். மேரிஸின் மேலாதிக்கமே ஆட்டம் முழுவதும் காணப்பட்டது. 3ஆவதுநிமிடத்தில்சென்.மேரிஸ் வீரன் ஜக்ஸன் முதல் கோலை அடித்தார். மெலிஞ்சிமுனை இருதயராஜா கிடைத்த சந்தர்ப்பங்களை வீணாக்கியது 23ஆவதுநிமிடத்தில்சென். மேரிஸ் தனது இரண்டாவது கோலை அடித்தது. ஜெனட் அந்த கோலை அடித்தார். சென். மேரிஸின் கையோங்கியது.

இடைவேளையின் பின்னரான ஆட்டத்திலும் இருதயராஜாவால்சென். மேரிஸுக்கு சாவல் கொடுக்க முடியவில்லை. அவர்களின் தடுப்பாட்டமும் பலவீனமாக இருந்தது. முன்னேறித் தாக்கவும் தயங்கினர். அவர்களின் தயக்கத்தையும் பலவீனத்தையும் சாதகமாக்கிக் கொண்ட சென். மேரிஸ் 37ஆவது நிமிடத்திலும் 45 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களை அடித்தது. நிரேசன் மற்றும் ஜெனட் அந்த கோல்களை அடித்தார். முடிவில் சென். மேரிஸ் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின. நவஜீவன்ஸ் முதல் பாதியில் அதிரடியாக ஆடியது. கௌதமன் 14ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். 28ஆவது நிமிடத்தில் உசாணந்தன் இரண்டாவது கோல் அடித்தார். இடைவேளையின் பின்னர் நவாலிசென்பீற்றர்ஸ் வீறுகொண்டது. அனஸ்ரின் 35ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். எனினும் 42ஆவது நிமிடத்தில் அதற்குப் பதிலடி கிடைத்தது. நவஜிவன்ஸ் மூன்றாவது கோல் அடித்தது. கௌதமன் தனது இரண்டாவது கோலை அடித்தார். முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வேலணை துறையூர் ஜயனார் விளையாட்டுக்கழக அணிக்கும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டம் முழுவதும் நவிண்டில் கலைமதி ஆதிக்கம் செலுத்தியது. சிந்துசன் 22ஆவது 24 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்தார். இடைவேளையின் பின்னர் சந்துரு 3ஆவது கோலையும் 38ஆவது நிமிடத்தில் ரஜனிக்காந் 4ஆவது கோலினையும் அடித்தனர். பதிலுக்கு வேலணை துறையூர் ஜயனார் விளையாட்டுக்கழக அணி ஒரு கோல் அடித்தது. இரண்டாம் பாதியில் கோகுலன் அந்த கோலின்னை அடித்தார்.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகஅணிக்கும்தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இருந்தது. மைதானத்தினுள்ளும் வெளியிலும் பரபரப்பு அனல் பறந்தது.

10 ஆவது நிமிடத்தில் குருநகர் பாடும்மீன் வீரன் கெடிஸ் முதல் கோல் அடித்தார். இடைவேளை வரை ஆட்டத்தில் சூடு பறந்தபோதும் கோல் எதுவும் மேலதிகமாக அடிக்கப்படவில்லை.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடிக்க இரு அணியினரும் கோல்கள் போடுவதற்கு படாதபாடுபட்டனர். ஆட்டத்தின் 33நிமிடத்தில் பாடும்மீனின் முயற்சி பலித்தது. ஞானபிரதாப் தனக்கு கிடைந்த பந்திலை சரியான முறையில் கோலக்கி தனது அணிக்கான2ஆவது கோலினை பெற்றுக் கொடுத்தார்.

கோல் அடிக்கக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களை தெல்லிப்பழை நாமகள் வீரர்கள் மோசமான தவறுகளால் தவறவிட்டனர். பாடும் மீன் தனது இரண்டாவது கோலை அடித்ததன் பின்னர் நாமகளின் ஆட்டத்தில் சோர்வு தென்பட்டது. இதனைப் பயன்படுத்தி பாடுமீன் வீரர்களான சேயன் 37ஆவது நிமிடத்திலும் ஞானபிரதாப் 43ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித்தனர். (உ-23)

## வங்கப் புயல்களிடம் நேற்று சின்னபின்னமான சிம்பாப்வே

பங்களாதேஷ் மற்றும் சிம்பாவே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி நேற்றையதினம் பங்களாதேஷ் சிட்டகொங் மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவேஅணி பங்களாதேஷ் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரமீம் 5(15) ஓட்டங்களுடனும் கக்கியு 12(29) ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் கொடுக்க ஒரு கட்டத்தில் பங்களாதேஸ் 11.4 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தடுமாறியது. ஆனால் தொடர்ந்து வந்த மத்திய வரிசை வீரர்களான சகிப் அல் ஹசைன் மற்றும் றஹிம் ஆகியோர் தமக்குள் இணைப்பாட்டமாக 148 ஓட்டங்களை பகிர அவ் அணி வலுவான நிலைக்குச்சென்றது தொடர்ந்து வந்த வீரர்களாலும் அதிரடி தொடரப்பட பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில்7 இலக்கு இழப்பிற்கு 281 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக சகிப் அல் ஹசைன் 101(99), றஹிம் 65(72) ஒட்டங்களையும் றஹ்மான் ஆட்டமிழக்காது 44(25) ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாவே சார்பாக பன்ஜங்கரா 3 இலக்கையும் சரறா 2 இலக்கையும் நைம்பு மற்றும் கமுன் கோசி ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

282 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் கடின இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணியின் முன்னிலை வீரர்களான றசா 15(22). சிமன்டா 0(2), சகபவா 9(17), சிக்கும்புறா 15(28) என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தனர். தொடர்ந்து வந்த மத்தியவரிசை வீரர்களும் நிலைக்கத்தவறி அதே பாணியில் மிறி 11(18), பன்யன்கரா 7(9), நையும்பு 4(9) என வெளியேற சிம்பாவே அணி 42.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 194 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 87 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ரெய்லர் 54(72); மசகட்சா 42(48) றசா 15(22) ஓட்டற்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாஷ் சார்பாக சகிப் அல் ஹசைன் 4 இலக்குகளையும் மோர்ரசா, முகமதுல்லா, மற்றும் சனி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சகல துறைகளிலும் அசத்திய சகிப் அல் ஹசைன் தெரிவானார். 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்களாதேஷ் அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளையதினம் சிட்ட கொங்கில் இடம்பெறுகின்றது. (த-ரி)

# யங்கென்றிஸ், பிறைற் ஸ்ரார் வலிகாமம் லீக்கில் வெற்றி

யாழ்ப்பாணம். நவ. 22

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் 'ஏ' பிரிவு அணிகள் இடையிலான ஆளுநர் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் அரையிறுதியாட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மற்றும் பிறைற்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்று. இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

அரையிறுதி ஆட்டங்கள் நேற்று வெள்ளிக் கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிறைற் ஸ்ரார் விளை யாட்டுக்கழக அணி மோதி யது. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் பிறைற் ஸ்ரரர் வீரன் ஜோன் பற்றிக் அடித்த பந்து கோலாக மாறியது. பதிலடியை கல்வளை விநாயகர் உடனடியாகவே கொடுத்தது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் கண்ணன் பதில் கோல் அடித்தார். இடைவேளை வரை மேலதிக கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. எனினும் இரு அணியினரும் கோல் அடிப்பதாக இல்லை. ஆட்டம் சமநிலையில் முடியப்போகிறது என்ற எதிர்பார்ப்பு நிலவிய சமயத்தில், ஆட்டம் முடிவடைவதற்கு 3 நிமிடங்களே இருக்கையில் பிறைற் ஸ்ரார் அணி வீரன் சாள்ஸ் அன்ரனி தங்க கோலை அடித்தார். அவரது அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் கடுமையாக மோதிக் கொண்ட போதும் கோல் எதுவும் அடிக்காமலேயே முதல் பாதி ஆட்டம் முடிந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான



போது ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு இரு அணியினரும் மோதினர். யங்ஹென்றிஸ் அணி வீரன் லோஜா மீண்டும் ஆட்டம் ஆரம்பித்த 8ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த பந்தினை சரியான முறையில் கோலாக மாற்றினார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

இரண்டு அணியினரும் கோல் அடிக்க கடுமையாகப் போரடியபோதும் அது தோல்வியில் முடிந்தது. ஆட்ட நேர முடிவில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(உ- 23)

# சமநிலையில் முடிந்த போட்டி

பாகிஸ்தான்-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்றையதினம் டுபாயில் நிறைவுக்கு வந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்சில் சகல இலக்குகளையும் இழந்து 403 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில்நியூசிலாந்து சார்பாக அதிகபட்சமாக லாதம் 137, மக்கலம் 43, கிரேக்43ஓட்டங்களைப்பெற்றனர்.

பந்துவீச்சில் பாபர் 4 இலக்குகளையும் அடில், சாஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் றகற் அலி, அஸ்கர் அலி ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆரம்பித்த அலி மற்றும் யுனிஸ்கான் இணைப்பாட்டத்தினால் 113 ஓட்டங்களைப் பெற்றதுடன் பாகிஸ்தான்அணி சகல இலக்குகளையும் இழந்து 393 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் சார்பாக அதிகபட்சமாக அகமட் 112, அலி 75, யுனிஸ்கான் 72 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சௌத்தி 3 இலக்குகளையும் சொட்ஹி மற்றும் பௌல்ற் ஆகியோர் 2 இலக்குகளையும் கிறைக், நீஸ்ஹம், மக்கலம் ஆகியோர் தலா 1 இலக்குகளையும்கைப்பற்றினர்.

10 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணி 9 இலக்கிழப்பிற்கு 250 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக ரெய்லர் 104, மக்கலம் 45, கிரேக் 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக சாஜ் 5 இலக்குகளையும் பாபர் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 5 இலக்குகள் இழப்பிற்கு 196 ஓட்டங்களைப் பெற்று போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. அதிகபட்ச மாக யுனிஸ்கான் 44, சவிக் 41, மஸ்கூட் 40 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பௌல்ற், கிறைக் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சௌத்தி 1 இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ரெய்லர் தெரிவானார்.

(த-ரி)

# இந்திய அணியினர் தொடர்ந்து முதலிடம்

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.
புதிய தரவரிசைப்படி 117 புள்ளிகளுடன் இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறது.
தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி (115 புள்ளிகள்) 3ஆவது இடத்தில் இருந்து 2ஆவது இடத்துக்கு முன்னேறியது.
தென்னாபிரிக்க அணி (114 புள்ளிகள்) 2ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்துக்கு சரிந்தது. ஆஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவுக்கு எதிரான எஞ்சிய 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்றால் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தை பிடிக்கும். தென்னாபிரிக்க அணி எஞ்சிய 2 ஆட்டத்திலும் வெற்றி கண்டால், அந்த அணி ஆஸ்திரேலியாவைத் தாண்டி 2ஆவது இடத்தை பெறும். இந்திய அணி முதலிடத்தில் நீடிக்கும். துடுப்பாட்டக் காரர்களுக்கான தர வரிசையில் தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இந்திய வீரர் விராட் கோஹ்லி 2ஆவது இடத்திலும், இந்திய அணித் தலைவர் டோனி 7 ஆவது இடத்திலும் தொடருகின்றனர். (கு)





# விளையாடுவாரா கிளார்க்?

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தசைப் பிடிப்பால் பாதிக்கப்பட்டு வெளியேறினார்.
ஏற்கனவே முதுகுவலி பிரச்சனையால் பாதிக்கப்பட்டு இருந்த மைக்கல் கிளார்க் புதிய காயத்தால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளானார்.
இதனால் எதிர்வரும் நான்காம் திகதி பிரிஸ்பேனில் தொடங்கும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மைக்கல் கிளார்க் ஆடுவாரா? என்பதில் சந்தேகம் நிலவுகிறது.
இது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பிசியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கோன்டோரிஸ் கூறுகையில், கிளார்க் எப்போது உடல் தகுதி பெறுவார் என்பதை உறுதியாக சொல்ல முடியாது. அவர் இன்னும் ஓட கூட ஆரம்பிக்கவில்லை. அவரால் துடுப்பெடுத்தாட முடியாது. இந்த தருணத்தில் அவர் விளையாடத் தயாராக இல்லை. முதல் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் 2 வாரம் இருப்பதால் அவர் உடல் தகுதி பெற்று விடுவார் என்று நாங்கள் நம்புகிறோம். அவரது உடல் நிலை குறித்து அடுத்த வாரம் ஆய்வு செய்து அதற்கு தகுந்த படி முடிவு எடுக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார். (கு)

# தென்னாபிரிக்க வீரரை கேலி செய்த ரசிகர்கள்

கான்பராவில் நடைபெற்ற 3ஆவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய ரசிகர்கள் தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாஹிரை வரம்பு மீறிக் கேலி செய்துள்ளனர்.
இம்ரான் தாஹிர் பவுண்டரி அருகே களத்தடுப்பு செய்து கொண்டிருந்தார். இவருக்கு அடிக்கடி தனது தாடியைச் சொறியும் பழக்கம் இருந்து வந்துள்ளது.



இதனைக் கண்ட கான்பரா ரசிகர்கள், அவரைக் கடுமையாகக் கேலி செய்தனர். நிறவெறித்தனம் அதில் ஊடுருவியிருந்ததாக ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று கூறியுள்ளது.
அதாவது, அவர் தாடியைச் சொறிவது பற்றி ரசிகர்கள் கேலிக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தபோது திடீரென ஒரு ரசிகர், உன்னுடைய செல்லப் பிராணியான ஒட்டகத்துக்கு சொறிந்து விட வேண்டியது தானே? என்று கேலி பேசியுள்ளார். இதனால் கடுப்பாகிப் போன இம்ரான் தாஹிர் அந்த ரசிகர் பக்கம் திரும்பி முறைத்தார். ஆனால் நடுவர்களிடம் அதிகாரபூர்வப் புகார் எதனையும் அளிக்கவில்லை.
தொடர்ந்து பாகிஸ்தான் வம்சாவளி வீரர்கள் அல்லது பாகிஸ்தானிய வீரர்களை ஆஸ்திரேலிய ரசிகர்கள் நிறவெறி கேலிக்குட்படுத்தி வருவதும் கவலைக்குரிய அம்சம் என்றும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.
இந்தப் போட்டியில் இம்ரான் தாஹிர் 6 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 40 ஓட்டங்கள் கொடுத்தார். ஆனால் காயம் காரணமாக துடுப்பெடுத்தாட முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. (கு)



# கடுப்பானார் கோஹ்லி

'இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கோஹ்லி, நடிகை அனுஷ்காவை காதலிப்பதாகத் தெரிவித்துள்ளார். கோஹ்லியும், அனுஷ்காவும் பல இடங்களுக்கு ஒன்றாகச் சுற்றிவருகின்றனர். இதனால் இவர்களுக்கு இடையில் காதல் மலர்ந்ததாகச் செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. கோஹ்லியாவது அனுஷ்கா பற்றி ஏதாவது அவ்வப்போது தெரிவிப்பார். ஆனால் அனுஷ்கா இந்த விடயத்தை பற்றி வாய் திறந்ததே இல்லை.
இந்நிலையில் மும்பையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், நானும் நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலிக்கிறோம். தெரிந்து கொண்டே அதை பற்றி கேட்டால் என்ன அர்த்தம்.
நானும் அனுஷ்காவும் எதையும் மறைக்கவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் ஒரே விடயம் பற்றி கேட்டால், விவாதித்தால் அது சரியில்லை. இரண்டு பேரை சில இடங்களில் ஜோடியாகப் பார்த்துவிட்டு அதன் பிறகும் இது உறுதியா என்று கேட்கிறார்கள்? தெரிந்து கொண்டே அது பற்றி எதற்காக கேள்வி கேட்க வேண்டும். நாங்கள் எதுவும் தவறான விடயத்தை செய்யவில்லையே. இது பற்றி நாங்கள் பேச விரும்பவில்லை.
இது எங்களின் தனிப்பட்ட விடயம். அதை ஊடகங்கள் உட்பட அனைவரும் மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (கு)

# இலங்கையை கலங்கடிக்க காத்திருக்கிறது இங்கிலாந்து

உலகக்கிண்ணப் போட்டிகள் நெருங்கும் நேரத்தில் இங்கிலாந்து அணி, இலங்கையை நொருக்கித் தள்ளும் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் ஜோர்டான் கூறியுள்ளார்.
இங்கிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்த தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதற்கு முன்பாக 21 மற்றும் 23ஆம் திகதிகளில் இரு அணிகளும் பயிற்சிப் போட்டியில் மோதுகின்றன. இந்நிலையில் இலங்கையில் இங்கிலாந்து அணி தொடரை இழந்து விடாது என கிறிஸ் ஜோர்டான் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் கூறுகையில், எல்லோரும் உலகக்கிண்ணத்தைப் பற்றிப் பேசுகின்றனர். ஆனால் இப்போது இருக்கின்ற தருணத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் போதுமானது.
இலங்கைச் சுற்றுப் பயணத்தில் சிறப்பாகச் செயல்பட்டு உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு அடித்தளம் அமைப்போம் என்று கூறியுள்ளார்.
இந்த ஆண்டு இங்கிலாந்து அணிக்கு மோசமான தோல்விகளே மிஞ்சியது. ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 4-1 என்ற கணக்கில் தொடரை இழந்த இங்கிலாந்து, இலங்கைக்கு எதிராக 3-2 என்ற கணக்கிலும், இந்தியாவுக்கு எதிராக 3-1 என்ற கணக்கிலும் தோல்வியை தழுவியது. இதனையடுத்து உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு தயாராகும் வகையில் இலங்கைக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆயத்தமாகும். (கு)



## தொடர்ச்சிகள்

### ஐ.தே.கவுடன்

அழைப்பு விடுக்கின்றேன். இன்று மொத்தமாக 60 பேர் அரசுபக்கமிருந்து ஐ.தே.கவுடன் இணைய வுள்ளனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

### பஸ்ஸில்

மக்களும் அந்த இடத்தில் கூடிய மையால் சிப்பாய் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

### கட்டிவைத்து

போர்த்தினார்கள். இந்த நிகழ்வில் மீனவர்கள், பொதுமக்கள், அரசியல் கட்சியினர், பாடசாலை மாணவர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து ஊடகங்களுடன் பேசிய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினர் நெடுந்தீவுக்குக் கொண்டு சென்று எம்மைக் கைகளைக் கட்டி வைத்து அடித்தனர். இதன் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது தான் போதைப் பொருள் கடத்தியதாக வழக்கு பதிவு செய்ததாகத் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழ் மீனவர்கள் 3 பேரை அழைத்து வந்து எங்கள்ள-அடையாளம் காட்டியபோது அவர்கள் எங்களை யாரென்று தெரியாது எனக் கூறியும் நீதிமன்றம் அதனை கேட்க மறுத்துவிட்டது. கைது செய்யப்பட்ட நாள் முதல் சிறையில் கடுமையாகத் துன்பப்பட்டோம்-என்று தெரிவித்தனர். (த-14)

### பிரதமர்

எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று மாலை இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

தொலைபேசி ஊடாகப் பிரதமர் ஜயரத்னவைத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த, அரசின் தற்போதைய நெருக்கடியான நிலையில் செயற்திறன் மிக்க பிரதமர் ஒருவர் அவசியம் என்பதைக் கடும் வார்த்தைகளால் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்போது பிரதமர் ஜயரத்ன - ஜனாதிபதி மஹிந்த ஆகியோருக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பிரதமர் பதவியில் இருந்து விலகத் தற்போது ஜயரத்ன இணக்கம் தெரிவித்துள்ளதோடு, அதற்காக இரண்டொரு நாள்கள் அவகாசம் கேட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (த-5)

### சபையில்

டிக் கொண்டிருந்தனர். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சியினர் தரப்பிலும் நேற்றுக் காலை ஒரே பரபரப்பாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி வெளியில் சென்று ஒரு பரபரப்புடன் சபைக்குள் வந்தனர். அத்துடன், நேற்றுக்காலை சபைக்குள் வந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பரபரப்புடன் வந்ததை அவதானிக்க முடிந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சபைக்குள் வந்த வேகத்தில் அங்குமிங்கும் நோட்டமிட்டவாறு வெளியேறினார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சியுடன் இணையப்போகிறார் என்ற செய்தியால் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, நாடாளுமன்றில் பணியாற்றும் அதிகாரிகள், ஊழியர்கள் என அனைவரிடத்திலும் ஒருவித பரபரப்பு நிலையைக் காணக்கூடியதாக இருந்தது.

காலையில் சபைக்கு வந்து ஆளுந் தரப்பினருடன் உரையாடிக்கொண்டிருந்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மதியபோசன இடைவேளையின்போது சபையிலிருந்து வெளியேறினார்.

### யாழ்.

னர். உள்ளே வருமாறு கேட்டபோது, வெளிச்சம் உள்ள இடத்துக்கு அவர்கள் வரவில்லை. பின்னர் தாம் அவரது விரிவுரையாளர்கள் என்றும் மகனைக் கூப்பிடுமாறும் கூறினர். அந்த நேரம் மகன் வீட்டில் இல்லாததால் அவருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறினேன். பின்னர் அவர் நின்றிருந்த வீட்டுக்கு இனந்தெரியாத நபர்கள் சென்றனர். அதற்குள் மகன் வேறிடத்துக்குச் சென்றுவிட்டார். பின்னர் எமது வீட்டுக்கு வந்து சுமார் அரை மணி நேரமாக வாசலில் நின்றுவிட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் தம்மைப் பொலிஸார் என்று கூறினர். மகனை விசாரணை செய்யவுள்ளதாகத் தெரிவித்தனர். பின்னர் மகனை அல்ல வேறு நபர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கே வந்ததாகக் கூறிச் சென்றுள்ளனர் - என்று தெரிவித்தார். (த-4)

### போதனா

டிச்சாலைக்கு இவ்வாறு சுகாதார வசதி இல்லாத இடத்தில் உணவு தயாரித்து எடுத்துச் செல்வதை உடனடியாக நிறுத்தக் கோரி அரியாலை பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பி. கிஷோக்குமார் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். நீதிமன்ற நீதிவான் கடந்த வியாழக்கிழமை வழக்கை விசாரணைக்குக் எடுத்துக் கொண்டார்.

வைத்தியசாலை வளாகத்தில் உரிய முறையில் சிற்றுண்டிச்சாலைக்கு உணவு தயாரிக்கும் இடம் அமைக்கப்படாமலுள்ளமை குறித்தும், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாதமை குறித்தும் வைத்தியசாலை நிர்வாகம் மீது சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பாக அறிக்கை ஒன்றை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என நீதிமன்று பணித்துள்ளது. இந்த வழக்கு அடுத்தாண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-17)

## திரில் வெற்றியுடன் தொடரை கைப்பற்றியது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணி களுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் நான் காவது போட்டி நேற்றைய தினம் ஆஸ்திரே லியா வின் மெல்போர்ண் மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபி ரிக்காஅணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கொக் 17(38) ஓட்டங்களுடனும் மற்றும் அம்லா 18(20) ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் தொடர்ந்து வந்த வில்லியர்ஸ் மற்றும் மில்லர் தமக்குள் இணைப்பாட்டமாக 122 ஓட்டங்களைப் பகிர அந்த அணி ஓரளவு வலுவான நிலைக்குச் சென்றது. தொடர்ந்து வந்த வீரர்களும் ஓரளவு நிலைக்க 50 பந்துப் பரிமாற்றத்தின் இறுதி யில் தென்னா பிரிக்கா அணி 8 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற் றது. அதிக பட்சமாக வில்லியர்ஸ் 91(88), மில்லர் 45(61), பிளாசிஸ் 28(37) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கும்மின்ஸ் மற்றும் பல்க்னர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ஸ்ராக், நீல், மக்ஸ்வெல், ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

268 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக் கோடு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலி யாவின் ஆரம்ப வீரர்களான வோர்ணர் 4 (8) ஓட் டங்களுடனும் மற்றும் பின்ச் 22 (37) ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தனர். தொடர்ந்து வந்த முன்னிலை வீரர்களான வற்சன் 19 (25), பெய்லி 16 (29), மக்ஸ்வெல் 2 (5) என சொற்ப ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப 24.1 பந்துப் பரிமாற்றங்களில் ஆஸ்திரேலியா 98 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து சரிவு கண்டது. நிலைமையை உணர்ந்து பொறுப்புடன் ஆடிய சிமித் மற்றும் வேட் தமக்குள் இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பகிர ஆஸ்திரேலிய அணி படிப்படியாக வெற்றியை நோக்கி நடை போடத் தொடங்கியது. தொடர்ந்து வந்த பல்க்னர் நிதானத்தை கடைப்பிடிக்க அவ் அணி 49 பந்துப் பரிமற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அதிக பட்சமாக சிமித் 104(112), வேட் 52(59) ஓட்டங்களையும் பல்க்நெர் ஆட்டமிழக்காது 34(31) ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ஸ்ரெய்ன், பார்னல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் அபொற், மக்லறின், பீற்றர்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 5 போட்டிகளை கொண்ட தொடரை 3:1 என ஆஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது. ஆட்ட நாயகனாக சதத்தை நிறைவுசெய்த சிமித் தெரிவானார். இவ்விரு அணிகளுக்கிடையிலான ஐந்தாவது ஒருநாள் போட்டி நாளையதினம் சிட்னியில் இடம்பெறவுள்ளது. (த-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை கெஜரெத்தினம்



திருக்கோணமலை, நிலாவெளியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை கெஜரத்தினம் நேற்று (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் க. கெஜரெத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, முத்துராசா ஆகியோரின் சகோதரியும், இராசநாயகி, சித்திரவேலாயுதன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்-ஆங்கிலம்), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தவராசா (ஓய்வுபெற்ற வேலணை பிரதேச சபைச் செயலாளர், தற்போதைய நிறைவேற்று அலுவலர் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில்), தர்மகுலராசா (பதிவாளர்-மேல் நீதிமன்றம்-திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் குணரஞ்சிதமலர், தில்லைநாதன், சகுந்தலாதேவி, செல்லநாச்சியார் ஆகியோரின் பாசமிகு மாமியும், சுபத்ரா-இரட்ணராஜா (சுவிஸ்), சுமதி-குகதீசன் (கனடா), சுபாஜினி-பிரேமகாந்தன், சுரேந்திரன்- மேனகா, சுரேந்தி-சிவநாதன், கஜபதி-மதுராந்தகி, கஜராஜ், மயூரன், சுகிர்தா-முகுந்தன், பிரபாரூபன்- சாந்த ரூபி, சங்கீதா-சுகந்தன் (UK), வாசுகி-விதுர்ஷன், நாராயணி, ஏழிலினி, ஜெகரூபன்-தாரணி, கஜரூபன்-நித்தியா, சிவரூபன் ஆகியோரின் பேர்த்தி யும், வித்தகன், வித்தகி, வர்ணா, செழியன், கிரிதரன், பிருந்தா, பிரவீணா, பிரகாசினி, அருளினி, பிரணவி, தக்ஷாயணி, கேசவி, வித்தியன், விசாலினி, மாதுரி, கௌசிகன், நிலாசன், பிரகீசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமநாதன் கலட்டி,**
**கோண்டாவில் வீதி, கோப்பாய்.**
**(கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அருகில். பஸ்தரிப்பு நிலையம், இருபாலைச்சந்தி.)**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**கெ.தவராசா (மகன்)**

(41421)(10.6)

## மரண அறிவித்தல்



### துரைசிங்கம் நடராசலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்)

எழுதுமட்டுவாழ் தெற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் நடராசலிங்கம் அவர்கள் நேற்று (21.11.2014) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான காசிவிசுவநாதன் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், நர்மதா (உதவிக் கணக்காளர்), மதுசூதனன் (வைத்தியர்,யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயரூபனின் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆசை மாமனும் மேகஷியாமின் பற்றுமிக்க பேரனும் சிவயோகலிங்கம்(ஓய்வுபெற்ற தபாலதிபர்), சுபத்திராதேவி (அவுஸ்ரேலியா), சித்திவிநாயகலிங்கம் (பொறியியலாளர், அவுஸ்ரேலியா), கெங்காதேவி, திருக்குமாரலிங்கம்(ஓய்வுபெற்ற அரச முகாமைத்துவ உதவியாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்), கிருஷ்ணானந்தலிங்கம்(ஓய்வுபெற்ற உதவிப் பிரதம செயலாளர், வடமாகாணப் பொதுநிர்வாகம்), அருட்சோதிலிங்கம் (கனடா), நவமணிதேவி(உப தபாலதிபர், எழுதுமட்டுவாள்) ஆகியோரின் அன்புமிகு சகோதரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ராகினி, தங்கராசா, ராஜகுமாரி, ரஞ்ஜினிதேவி, சுமதி, சிவானந்தம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற தெய்வீகராணி மற்றும் கணேசமூர்த்தி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புமிக்க மைத்துனரும், வேல்முருகன், ராஜேஸ்வரன், புவனராணி, செல்வராணி ஆகியோரின் சகலனும் பாலகிருஷ்ணன் - இரத்தினேஸ்வரி தம்பதியினரின் அருமை சம்பந்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, கட்டை ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.
**021 222 0238**

(41419)
(12.6)

**தகவல்: மனைவி,**
**பிள்ளைகள், மருமகன்**
**பேரன்.**

# கல்முனை முஸ்லிம் காங்கிரஸின் கோட்டை ஆனால் மக்களுக்கு ஒருவித பயனும் இல்லை

*உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவிப்பு*

கல்முனை, நவ.22

கல்முனையில் முஸ்லிம் காங்கிரஸின் பாராளு மன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர், மாநகர சபை, அதன் உறுப்பினர்கள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் என ஒரு பட்டாளமே இருந்தும் சாய்ந்த மருது தோணா இன்னமும் திருத்தப்படாமை கண்டிக்கத் தக்கது மட்டுமின்றி மக்கள் நலன் பற்றிய அக்கறையின்மையை காட்டும் செயல் என உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பேரின கட்சிகளில் தங்கியிருந்தால் முஸ்லிம் சமூகத்துக் கான அடிப்படை உரிமைகளைப் பெற முடியாது என்பதற்கா கவே முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் காங்கிரஸ், அதாவுல்லா காங்கிரஸ் என்ற கட்சிகளுக்கு தொடர்ந்தும் வாக்களித்து வருகிறார்கள். அதிலும் கல்முனை என்பது இன்னமும் முஸ்லிம் காங்கிரஸின் துர்நாற்றம் வீசும் மிக மோசமான கோட்டையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்சி தமக்கு நல்ல வாழ்வை கொண்டு வரும் என இந்த மக்கள் தொடர்ந்தும் வாக்களித்து ஏமாற்றத்தையும் அவமானங்களையுமே சந்தித்து வருகின்றனர்.

அதிலும் சாய்ந்தமருது மக்களில் 98 வீதமானோர் கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸுக்கே வாக்களித்தனர். இருந் தும் சாய்ந் தமருதிலுள்ள தோணாவை சரியான முறையில் இன்னமும் திருத்த முடியாத செயலாற்றுத் திறன் அற்றவர்களாக உள்ளனர். குறித்த கட்சியினர் காலா காலமாக சாய்ந்த மருதை வெள்ளப் பெருக்கத்தில் இருந்து விடுவித்து வரும் சாய்ந் தமருது தோணா சுனா மியின் பின்ன ரும் அண்மையில் அம்பாறை மாவட்ட கரையோர பாது காப்புதிணைக் களத் தின் அனுசரணையுடன் சுத்தம் செய்யப்பட்டது. இறுதி நேரத்தில் அம்பாறை மாவட்ட கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் சுத்தம் செய்யப்பட்ட இந்தத் தோணா திட்டமிட்ட அடிப்படையில் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் அரசியல்வாதிகள் தோணாவுக்கான பணத்தை சூறையாடிவிட்டதாகவும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தும் அரசின் அனைத்து வளங்களையும் அனுபவிக்கும் அமைச்சர்களை தலைவர்களாகக் கொண்ட ஒரு கட்சியினால் ஒரு தோணாவைக்கூட சரியான முறையில் பூரணப்படுத்த முடியவில்லை என்றால் இந்தக் கட்சிக்கு சாய்ந்த மருது மக்கள் இன்னமும் வாக்களிக்கத்தான் வேண்டுமா? என்பதை அம்மக்கள் சிந்திக்க வேண்டும். மக்கள் விழிப்படையாத வரை சுயநல ஏமாற்று முஸ் லிம் கட்சிகளால் மக்கள் ஏமாறுவது தவிர்க்க முடியாததாகும் எனத் தெரிவித்தார். (ஓ-10)

---

**6ஆவது நினைவுடன் 32ஆவது பிறந்ததின வாழ்த்து**



தோற்றம் 22.11.1982

மறைவு 21.08.2008

அமரர் நடராசா மருஜன்

(முன்னாள் மாணவன் யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

கனவு போல் நடந்தது உன் சாவு
கார்த்திகையில் பூத்த பூவடா நீ
உன் பிரிவால் துயருற்றோமையா

ஆதிபாமலை, உடுப்பிட்டி.

உன் நினைவால் வாடும் குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



**திருமதி ஆனந்தவல்லி யோகரட்ணராஜா**

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தவல்லி யோகரட்ணராஜா லண்டனில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் வரதராஜா - சிவயோகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

**குறிப்பு:** நேற்றைய உதயனில் பிரசுரிக்கவழங்கப்பட்ட மரண அறிவித்தலில் வரதராஜா - சிவயோகரத்தினம் தம்பதியர் காலஞ்சென்றவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறாகும்.

17/23, சண்முகாபிரியா, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

---

# ஜனாதிபதிக்கு ஆதரவாக பட்டாசு கொழுத்தி ஆரவாரம்

காத்தான்குடி, நவ. 22

ஜனாதிபதி தேர்தல் நடத்துவது தொடர்பான உத்தி யோகபூர்வ பிர கடனத்தில் ஜனாதிபதி கையொப் பமிட்டதை அடுத்து மட்டக்களப்பு-கல்முனை காத்தான்குடி பிரதான வீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவானவர்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்தனர். காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் மற்றும் காத்தான்குடி நகர சபையின் ஏற்பாட்டில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சியாட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நகரசபை ஊழியர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி நகர சபை உறுப்பினர் எம்.எஸ்.எம். சியாட் உட்பட அதில் பங்கேற்ற நகர சபை ஊழியர்கள் மற்றும் இளைஞர் களால் எங்கள் ஆதரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே எனும் கோஷம் எழுப்பப்பட்டது. மட்டக்களப்பு-கல்முனை காத்தான்குடி பிரதான வீதியில் பட்டாசு கொளுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. (ஒ-10)

---

# மட்டக்களப்பில் ஓயாத கடும் மழை தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளம்

மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நகரில் தனியார் பஸ் நிலையம், பயனியர் வீதி, லேடி மெனிங் வீதி, சின்ன உப்போடை வீதிகளும் மற்றும் ஊறணி இருதயபுரம் போன்ற தாழ்நிலப் பிரதேசங் களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழை பெய்தால் தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் இடம் பெயர வேண்டிவரலாம் எனவும் அவர் களுக்கான நிவாரண உதவிக ளைச் செய்வதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ். இன்பராஜன் தெரிவித்தார்.

இதேவேளை, வாகனேரியில் 92.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் வாகரை கட்டமுறிவுக் குளத் தில் 64.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச் சியும் உன்னிச்சை யில் 74 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (ஓ-10)

---

**'O' Positive சிறுநீரகம் தேவை**

நோயாளி ஒருவருக்கு 'O' Positive சிறுநீரகம் உடனடியாகத் தேவைப் படுகின்றது. கருணையுள்ளம் கொண்டவர்கள் சிறுநீரகம் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

55 வயதுக்கு குறைவானவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0718 098076

---

**விஜய் TV புகழ்**

வாருங்கள் நேரில் சந்தியுங்கள்

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள ஜோதிட மாமணி

**மயிலை வீரா** 0766 240 632

உங்கள் எதிர்கால பலன்களைத் துல்லியமாக தெரிந்துகொள்ளுங்கள்.
கிரக தோஷங்களுக்கு முறையான பரிகாரம் சொல்லப்படும்.
பரிகாரம் செய்துத்தரப்படும்.

சந்திக்கும் நேரம்:
காலை 9.00 To 1.00 வரை
மாலை 4.00 To 8.00 வரை

21.11.2014 முதல் 28.11.2014 வரை

விலாசம்: ஈழத்து சபரிமலை, சபரீச ஐயப்பன் கோவில், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தொடர்பு: 021 222 7688, 077 711 0629

---

**ஞாயிறு -திங்கள் வைத்தியம்**

நாள்பட்ட தீராத அனைத்துவித வாதம், கழுத்துவலி, முள்ளந்தண்டு விலகல் L4 L5 நெஞ்சுச் சளி, இருமல், Asthma, Prostate வீக்கம், சிறுநீரக கற்கள், உடற்பருமன், கடும் உடல் மெலிவு, தலைமுடி கொட்டல், பலவீனம், களைப்பு, இயலாமை, விருப்பம் இன்மை, பயம், தளர்ச்சி, குழந்தைப் பேறு இன்மை, கருமுட்டை வளர்ச்சிக் குறைவு, உயிரணுக் குறைவு, கருப்பைக் கட்டி, தானே உருவாகும் கருச் சிதைவு, அதிஉயர் சிகிச்சை. துரித பலன்.

சித்த வைத்தியர்,

நல்லூர். Dr.R.Sivagurunathan. 0777 301 669

---

## மரண அறிவித்தல்

**இராஜேந்திரா இராஜரட்ணம்**



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சொய்சாபுரவை வசிப் பிடமாகவும் கொண்ட இராஜேந்திரா இராஜரட்ணம் நேற்று (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற றோஸ் ஜெயமலரின் அன்புக் கணவரும் றோய்(US Guest House), றொனி (கியூ மெடிக்கா நிறுவனம்), டொரின் (சர்வதேச பாடசாலை கொழும்பு) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், ஜெடி, தர்சினி, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், ரிறோஜ், இவாஞ்சலீன், இவானா, ருக்ஷிலா, டொட்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.11.2014) ஞாயிற்றுக் கிழமை "ஜெயரட்ண பாலன்" கல்கிசையில் ஆராதனைக்காக வைக்கப்பட்டு, பி.ப.3.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லாயன் வீதி, சில்லாலை.

தகவல்: றொனி (மகன்)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த எமது அன்புச் செல்வம் **நி.ரிஷிகேஷசர்மா** அவர்கள் எல்லாம் வல்ல எம் குலதெய்வங்களான இழுப்பைத்தாழ்வு வெல்வில் ஸ்ரீ முருகன் ஸ்ரீ மனோன்மணி அம்மன் திருவருளால் கல்வியுலகில் உயர்வு பெற்று சாதனைகள் படைக்க வேண்டுமென அன்புத் தாத்தா சிவப்பிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்த சிவாச்சாரியார் குருவருளை இறைஞ்சி உளம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

இழுப்பைத்தாழ்வு வெல்வில் ஸ்ரீ முருகன் ஆலயம், சிவானந்த பவனம், சங்கானை.

வாஞ்சையுடன் வாழ்த்தும் அன்புப் பாட்டி, அப்பா, அம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தை, மாமா மற்றும் சகோதரர்கள்.

---

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 100ஆவது பிறந்தநாள் நினைவுகூரலும்

**சின்னத்தம்பி பொன்னம்பலம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பிறப்பு 08.10.1915

இறப்பு 28.11.1989

ஆண்டுகள் 25 சென்றாலும் - தந்தையே!
ஆறவில்லை எம் துயரம்
வயதும் நூறு ஆனதையா தினமும்
உமை நினைந்து வருந்துகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **கந்தையா கிருஷ்ணபிள்ளை**

(அம்பிகா பல்பொருள் வாணிபம், நெல்லியடி.)



தோற்றம் 01★12★1947 மறைவு 23★10★2014

கடந்த 23.10.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் க. கிருஷ்ணபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.11.2014) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 6.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மூடக்காடு வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

உங்களுக்கு தேவையான அனைத்து விதமான
வாகனங்களும் ஜப்பானிலிருந்து நேரடியாக
குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்டு தரப்படும்




EV LANKA
Zero Emission

No. 64, Hill Street, Dehiwala.
Tel: 0114 385 885
Email: evlankasales@gmail.com
Website: www.evlanka.com

Hotlines: 0777 422 988

# கண்ணீர் அஞ்சலி



எனது அருமை மருமகன்

செல்வன்

## இராஜலிங்கம் வருண்ராஜ் (வருண்)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு சொல்லொணாத்துயர் அடைந்துள்ள நாம் அவரது பிரிவால் வேதனையில் வாடும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சோ.வர்ணகுலசிங்கம் (மாமா),
ஐங்கரன் மோட்டோர்ஸ்,
137, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(41416+41418) (12.6)

# மரண அறிவித்தல்



திருமதி.

## கணபதிப்பிள்ளை தெய்வானை

கரவெட்டி சித்திராங்கர் வீட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தெய்வானை 18.11.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளையின் மனைவியும், பொன்னையா- பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், சங்கரப்பிள்ளை-பத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும், புஸ்பராணி, நகுலேஸ்வரி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், இலச்சுமியின் சகோதரியும், சௌந்தரநாயகம், குலநாயகம், பிருந்தாதேவி ஆகியோரின் மாமியும், அமர்தகௌரி, காயத்திரி, விஜித்தா, அனித்தா, தாரணி, தர்சினி ஆகியோரின் பேர்த்தியும், கஜானி, ஹரிஷன், இளஞ்செல்வன், மீரா, ஹாசினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (Mount Lavania Mahinda Parlour) நடைபெற்று, தகனக்கிரியைகள் 5.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: மகன் க.இராஜேஸ்வரன்
தொ.பே.எண் : 077 9693616

காணி விற்பனைக்கு

இராசபாதை
கரந்தன் சந்தி
யில் இருந்து
மேற்குப் பக்கமா
கப்போகும்
றோட்டில்
இரண்டாவது
முடக்கில்
கோயிலுக்கு
வடக்கே 8பரப்பு
12.96 குழி காணி
விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:
077 978 3206
(41414) (45.8.2)

# சாயிபாபா பிறந்த நாள் வழிபாடு

தென்மராட்சி, நவ. 22

சத்தியசாயி பாபாவின் பிறந்த தின வழிபாடுகள், பஜனைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை வடக்கில் உள்ள சாயி நிலையத்தில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.22

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் 'சங்கமம்' நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தியும் கௌரவ விருந்தினராக புதிய உயர் கலைக் கல்லூரி நிர்வாகி திருமதி அருள்நங்கை சண்முகநாதனும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (த)

HP LAPTOP
மலிவு விற்பனை

சகலவிதமான மடிக்கணினிகள்
Dualcore/ i3/i5 Laptop மிக மிக மலிவு
விலையில். (கையிருப்பு உள்ளவரை மட்டுமே)
சகலவிதமான Laptop களுக்கும் உடனுக்குடன்
திருத்திக் கொடுக்கப்படும்.
சகல விதமான Laptop பற்றறிகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
02 வருட உத்தரவாதம்
ST.ANTONY'S
187, K.K.S. Road, JAFFNA TOWN.
021 222 4865, 075 069 8608
(16ஆவது வருட சேவையில்)

விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com
0215671111

# கண்ணீர் அஞ்சலி



எமது கூட்டுத்தாபன சக ஊழியர்
கனேக இராசகுமார் அவர்களின் அன்புத்
தந்தை

## கார்த்திகேசு கனேசு

அவர்கள் 21.11.2014 இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தொகைசாலை அதிகாரியும், ஊழியர்களும்.
பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேமனல் லிமிட்டெட்
காங்கேசன்துறை
(41420) (19.6)

# மரண அறிவித்தல்

## கணபதி வைரமுத்து

(மின்மானி வாசிப்பாளர்-கிராம சபை கொக்குவில்)



கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த கணபதி வைரமுத்து (19.11.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லர்-பார்வதி தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம் JP, (ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்), குணநாயகம் (கனடா), வேதநாயகம் (கனடா), காலஞ்சென்ற சுகுணாவதி மற்றும் புனிதநாயகம் (கனடா), மோகனதாஸ் (கனடா), நந்தினி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றஞ்சிதாதேவி (லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்), குகேஸ்வரி (கனடா), திலகேஸ்வரி (கனடா), வேலாயுதம், சசிகலா (கனடா), உமா (கனடா), சேகர் (கண்ணன்-UK) ஆகியோரின் அன்பு மாமனும், ரீபசேகரம் (லண்டன்), நிரஞ்சினி (யாழ். பல்கலைக்கழகம்-நுண்கலைப்பீடம்), துவாரகா (கனடா), கௌசிகன் (கனடா), திரியம்பதி (கனடா), சஞ்சீபன் (கனடா), றஜீவன் (கனடா), சுகிர்தினி, அயலக்ஸ்சன், லக்கியா (கனடா), இகலியா (கனடா), இனியாள் (கனடா), பிரணவி (கனடா), சகிலா (UK), மிலானி (UK), கௌசல்யா (UK) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்-வ.சந்திரசேகரம் JP
ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்.
வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு.
077 309 7306
(C/17787)(10.6)

# மரண அறிவித்தல்



## திருமதி தவமலர் பரமசாமி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், 155ஆம் கட்டை, கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் பரமசாமி 21.11.2014 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், பரமசாமியின் பாசமிகு மனைவியும், ரேணுகா (கால்நடை வைத்தியர் - கிளிநொச்சி), ரோகினி (ஆசிரியை, விவேகானந்த வித்தியாலயம், கிளிநொச்சி), ஆரணி (உதவிப் பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி, அபிவிருத்தி திணைக்களம் வலயம் - 6, வவுனியா), அகல்யா (உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரிதிலகன் (உதவிப்பணிப்பாளர், கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் - கிளிநொச்சி), ஜெகதீஸ்கரன் (ஆசிரியர், ரெடிக்கிளையர் மகாவித்தியாலயம், கொட்டகலை), தவபாலன் (பௌதீகவியல் ஆசிரியர், வவுனியா), லக்ஸ்மன் (பொறியியலாளர், டி.எம்.எஸ் எலக்ரோனிக்ஸ் பிறைவேற் லிமிட்டெட், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், அஹிம்ஷா, அருணிஷா, அட்ஷனா, அக்ஷயன், அனுஸ்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் 155ஆம் கட்டை, A9 வீதி, கிளிநொச்சியில் உள்ள கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்கள விடுதியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாரதிபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

155ஆம் கட்டை,
A9 வீதி, கிளிநொச்சி.
(47939) (12.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 779 9066, 077 739 6174

# தொடர்ச்சிகள்

## வெறும் 100

நிலையில் தானே பொது வேட்பாளர் என்ற அறிவிப்பை நேற்றுக் காலையில் தெரிவித்தார் அமைச்சர் மைத்திரிபால. மாலையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.
அவருடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் ராஜித சேனாரத்ன, கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்ததிஸ நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஜீவ விஜேசிங்க, புத்தசாசன மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.கே. டிஎஸ். குணரத்ன, நாடாளுமன் உறுப்பினர் வசந்த சேன நாயக்க ஆகியோரும் கூட இருந்தனர். மைத்திரிபால ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான தமது முழு ஆதரவையும் அவர்கள் அங்கு வெளிப்படுத்தினர்.
செய்தியாளர் சந்திப்பில் மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

மாற்றங்கள் தேவை
நான் அரசுடன் இருக்கும் போது அதுவும் ஒரு கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும்போது என்னைப் பொது வேட்பாளராக நியமிப்பார்கள் என்று நான் சிறிதளவும் நினைத்துப் பார்க்கவில்லை.
இந்த நாட்டில் பல மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. நாம் அனைவரும் ஒரு குடும்பமாக இணைந்து இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். இதற்காக நான் எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராகவுள்ளேன்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பேன்
1978ஆம் ஆண்டில் இருந்து சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி முறைமை மற்றும் 18 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வேன். நாட்டில் மக்கள் சுதந்திரமாக வாழ முடியாத நிலை இன்று காணப்படுகின்றது.
அபிவிருத்தி, நிவாரணங்கள் அதிகமாகஇருந்தாலும்,கொள்ளை, திருட்டு, போதைப் பொருள் பாவனை என்று நாசகார வேலைகள் அதிகரித்துள்ளன. இவற்றுக்கு முற்று புள்ளி வைக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நிறைவு செய்ய வேண்டும். உங்கள் வாக்குகளால் என்னை வெற்றி பெற செய்தால் 100 நாட்களுக்குள் இந்த ஆட்சிமுறைமையை இல்லாதொழிப்பேன்.

பிரதமராக ரணில்
நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் எனது ஆட்சியில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படுவார். உண்மையில் நான் பொதுவேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு எனது முழுமையான நன்றிகளை அவருக்கு தெரிவித்து கொள்கின்றேன்.

சர்வதிகார குடும்ப ஆட்சி
18 ஆவது திருத்தத்தின் மூலம் அரசு ஆட்சி செய்து நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இதில் எமக்கு விருப்பம் இல்லை. ஜனநாயக நாட்டில் அனைவரும் சுதந்திரமாக வாழ வேண்டும். ஆனால் குடும்ப ஆட்சியின் மூலம் நாடு சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றது.

எனக்கு அழுத்தங்கள் இருந்தன
நான் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அழுத்தங்களை எதிர்நோக்கியிருந்தேன். அமைச்சராக பதவி வகித்த எனக்கே இவ்வளவு அழுத்தங்கள் என்றால் சாதாரண நாட்டு மக்கள் எவ்வாறான அழுத்தங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கியிருப்பர் என்று எனது குடும்ப உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

சுதந்திரமற்ற பொலிஸ் சேவை
நாட்டில் முப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியன சுதந்திரமற்ற நிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக துஷ்பிரயோகங்களை செய்து கொண்டு அதிகாரத்தில் இருப்பவர்களைக் கண்டிக்க முடியாமல் உள்ளது. இதனை மாற்றியமைக்க வேண்டும். எனது ஆட்சியில் முப்படை மற்றும் பொலிஸ் சேவை ஆகியன சுதந்திரமாக செயற்பட இடமளிப்பேன் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

ஊழியர்கள் ஏமாற்றப்பட்டனர்
அரச ஊழியர்கள் கடந்த பல வருடங்களாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். குறிப்பாக இவர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படாது ஏமாற்றப்பட்டனர். இதேபோன்றே தனியார்துறை ஊழியர்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர். தற்போது வாழ்க்கையை கொண்டுச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த நிலைமையை எனது ஆட்சியில் மாற்றியமைத்து புது யுகத்தை ஏற்படுத்துவேன்.

அனைவருக்கும் நன்றி
எனது இந்தப் பயணத்திற்காக உதவிய சகோதர அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ரத்ன தேரர், சோபித தேரர் உட்பட அனைவருக்கும் கௌரவமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவையும் மறந்து விட முடியாது.
எதிர்வரும் தேர்தல் வெற்றிக்காக நாளுக்கு நாள் நாங்கள் அடியெடுத்து வைப்போம். மக்களின் பிரார்த்தனை நிறைவேற அர்ப்பணிப்போம். ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களின் கௌரவமான வாக்குகளில் நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் -என்று மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (உ-5)

## கொலை

இருப்பினும் 9 வருட மௌனத்தின் பின்னர் மீண்டும் அரசியலுக்கு நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது."- கண் கலங்கியவாறு இவ்வாறு கூறினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.
கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
"மீண்டும் எனது அரசியல் இல்லத்துக்கு வருவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் நீண்ட நாள்களாகக் கடமையாற்றி வந்துள்ளேன். கடந்த 9 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசியலுக்கு வந்ததை எண்ணி சந்தோஷமடைகின்றேன்."- என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.
"இவ்வளவு காலம் நிறைய விடயங்களை பொறுத்திருந்து சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்தேன். அதனையெல்லாம் சொல்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக் கருதுகிறேன். எனக்கு தற்போதைய ஜனாதிபதி பல கொடுமை செய்துள்ளார்.
இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் நிச்சயம் வெற்றிகொள்வோம். எமது ஆட்சியின் போது இந்த நாட்டின் சிறுபான்மையினத்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி ஆட்சி நடத்துவதோடு ,நிறைவேற்று அதிகாரத்தையும் இல்லாதொழிப்போம்.
மைத்திரிபால சிறிசேன மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். அவரின் தந்தை ஒரு விவசாயி என்பதால் அனைவரின் கஷ்டங்களையும் நன்கு அறிந்து செயலாற்றக் கூடியவர். தற்போது உள்ள பொலிஸாருக்கு அவர்களின் கடமையை முறையாக செய்ய முடியாத நிலையுள்ளது. நேர்மையாக கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் தண்டனை பெற வேண்டியுள்ளது. அதனால் அதிகாரிகள் தங்களின் கடமையை செய்ய தவறுகின்றனர். நாம் ஆட்சிக்கு வந்தால் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ந-5)

## பொன்சேகாவுக்கு

நங்க உள்ளவருக்கும் ஏற்படும் - இவ்வாறு எச்சரித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.
கொழும்பில் நேற்றுக் காலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான சுசில் பிரேமஜெயந்த, விமல் வீரவன்ஸ, பிரதியமைச்சர் பிரபா கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
அங்கு கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ஸ,
"ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரையும் தேடிக் கொண்டிருக்கின்றார். இவ்வாறே 2010 ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சரத்பொன்சேகாவுக்கு தோல்வியைப் பெற்றுக் கொடுத்து ஒன்றும் இல்லாமல் போனார். இந்த நிலையிலேயே தனது வலையில் சிக்க வைப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறார். அவ்வாறு அவருடைய வலையில் சிக்குபவருக்கு அடுத்த வருடம் மே மாதத்தில் தான் அதன் பிரதிபலன் தெரியும்.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டைப் பற்றியோ அல்லது நாட்டு மக்களைப் பற்றியோ அவர் சிந்திப்பதில்லை. மாறாக தனது மகனுக்கு ஒரு எதிர்காலத்தை பெற்றுக்கொடுப்பதிலேயே அவர் குறிக்கோளாக உள்ளார்"- என்று தெரிவித்தார்.
அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கூறுகையில்,
"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சிலரைப் பிரித்தெடுப்பதானது நாட்டின் ஸ்திரத்தன்மையை இழக்கச் செய்வதற்கான சதி முயற்சியே. இவ்வாறு 1959 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றது. கடந்த காலங்களில் கட்சி இவ்வா றான பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது.
பல கட்சித் தாவல்களை சந்தித்துள்ளது. இலங்கையில் நிறைவேற்று அதிகார முறை என்ற ஒன்று இருந்திருக்காவிட்டால் நாடு இன்னமும் மோசமான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும். எவர் எங்கு சென்றாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே தேர்தலில் வெற்றி பெறும். சென்றவர்கள் எல்லோரும் இங்கு திரும்பி வந்தாக வேண்டும்"- என்று தெரிவித்தார். (ந-5)

## சூடு பிடிக்கின்றது

ளது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து, அவரது அமைச்சரவையில் அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக களமிறங்குகின்றார். அதையடுத்து தேர்தல்களம் சூடுபிடித்துள்ளதுடன், கட்சித் தாவல்களும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து ஏற்கனவே அமைச்சர் சம்பிக்க ரணவக்க, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் வெளியேறியிருந்தனர். நேற்றுமுன்தினம் கம்பஹா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்காக கட்சி தாவியிருந்தார்.
இந்த நிலையில் நேற்றையதினம் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, துமிந்த திஸாநாயக்கா, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன ஆகியோர் கட்சி தாவியுள்ளனர். இவர்களுடன் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்கவும் கட்சி தாவியுள்ளார். அத்துடன் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பெருமாள் ராஜதுரையும் கட்சி தாவியுள்ளார்.
இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தாவியுள்ளார். தேர்தல் களம் இன்னமும் சூடுபிடிக்கத் தொடங்க கட்சித் தாவல்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## ஆளும்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி தாவியுள்ள நிலையில், இன்னும் சிலர் நாளை மறுதினம் 24 ஆம் திகதி கட்சி தாவவுள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
மத்திய மாகாண ஆளுனர் டிகிரி கொப்பேகடுவ, பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து சிறிபால கம்லத், குருநாகல் மாவட்டத்திலிருந்து எஸ்.பி. நாவின்ன, நில்வலா விஜேசிங்க, சாலிந்த திசாநாயக்க, நிரஞ்சன் விக்கிரமசிங்க, அம்பாறை மாவட்டத்திலிருந்து, பைசல் காசிம், எம்.எச்.எம். ஹரீஸ்
பதுளை மாவட்டத்திலிருந்து, ரோஹண புஷ்பகுமார, காலி மாவட்டத்திலிருந்து, பியசேன கமகே, ரமேஷ் பத்திரன, குணரத்தின வீரக்கோன், கம்பஹா மாவட்டத்திலிருந்து, சரத் குமார குணரத்ன, களுத்துறை மாவட்டத்திலிருந்து, ரெஜினோல்ட் குரே, விதுர விக்கிரமநாயக்க, ரத்னசிறி விக்கிரமநாயக்க மொனராகலை மாவட்டத்திலிருந்து, சுமேதா ஜயசேன, மாத்தளை மாவட்டத்திலிருந்து ஜனக பண்டார தென்னகோன், நுவரெலியா மாவட்டத்திலிருந்து, நவீன் திசாநாயக்க, சீ.பி.ரத்நாயக்க, இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து, சனீ ரோஹண, தேசியப்பட்டியலிலிருந்து, அசல சுரங்க ஜகொட ஆகியோர் கட்சி தாவவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் கள். தற்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோஷத்து டன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அதனடிப்படையிலேயே எதிரணி பொது வேட்பாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் கட்சி தாவியுள்ளனர்.
நாளை மறுதினம் திங்கட்கிழமை இவர்கள் அனைவரும் பொது எதிரணியில் இணைந்து கொள்வார்கள் என்று உறுதியாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## ஆரம்பமானது

கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"எனது எதிரிகளுக்கு நான் ஒருபோதும் துரோகம் நினைக்கமாட்டேன். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கும் எனது குடும்பத்துக்கும் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. நான் நாட்டுக்காக செயலாற்றவே அரசியலுக்கு வந்தேன். அதனைக் கருத்தில் கொண்டு நான் எனது பதவிகளை துறந்துள்ளேன்.
இந்த தீர்மானத்திற்காக சிலர் எங்கள் மீது சேறு பூச நினைப்பார்கள். நான் அதனை யெல்லாம் பொருட்படுத்தமாட்டேன். நான் எனது நாட்டு மக்களுக்காக வாழத் தயாராகவுள்ளேன். நான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.
இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சியின் நியமன உறுப்பினர் ரஜீவ விஜே சிங்க,
"அரசில் இருந்து வெளியேறுவோரின் வித்தியாசங்கள் ராஜபக்ஷவினருக்குத் தெரியாது. தற்போது ஜனாதிபதி செயலகத்திலிருந்து எனக்கு குறுஞ்செய்தி வந்தது. எனது வாகனத்தை ஒப்படைக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.
தம்மை போலவே மற்றவர்களும் இருப்பார்கள் என்று கணித்து ஏனையோரும் திருடர்கள், மோசடியாளர்கள் என்று நினைத்ததன் காரண மாக நாட்டை இன்று பெரும் இடருக்குள் கொண்டு வந்து விட்டுள்ளனர். அரசில் இருந்து வெளியேறும் அனைவரும் தமக்கு வழங்கப்பட்ட சகலவற்றையும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது"- என்று அவர் தெரிவித் தார். (ந-5)

## ஆராய்ந்தே

"ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என் பது போன்ற கருத்துக்களை வரவேற்கின்றோம். ஆனா லும் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு, எமது கட்சிகளுடன் ஆலோசனை நடத்தியே முடிவு எடுப்போம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.
"மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையும், தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அவரது செவ்வியையும் கேட்டேன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக அவர் கூறிய சில அம்சங்களை வரவேற்கின்றோம்.
இருப்பினும் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து கட்சியே ஆராய்ந்து முடிவெடுக்கும். இது தொடர்பில் அவசரப்பட்டு பதில் எதனையும் சொல்ல விரும்பவில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## உயிரைத்

ஒவ்வொரு நாளும் நீங்கள் வீட்டுக்கு வந்து படும் வேதனை நாங்கள்தான் அறிவோம். நாட்டு மக்கள் எந்த ளவுக்கு வேதனையை அனுபவிப்பார்கள். நீங்கள் நல்ல தீர்மானமொன்றை எடுங்[illegible] நாங்கள் உங்களுக்க[illegible] ரையும் கொடுக்க தயாராக இருக்கின்றோம்' என்று, எனது பிள்ளைகளே இவ்வாறு கூறும் போது நான் மக்களுக்கு சேவை செய்ய உயிரையும் துச்சமாக எண்ணுகின்றேன்."- இவ்வாறு கண்களில் கண்ணீருடன் கூறினார் எதிர்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறி சேன. (ந-5)

## மைத்திரிக்கு

இந்த நிலையில், அமைச்சரால் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெறும் பகுதிக்கு வெளியில் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். அமைச்சர் மைத்திரிபால சிறிசேன காரில் வந்திறங்கியதும், பொது மக்கள் வெடி கொளுத்தி பெரும் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர்.
அதே போன்று ஊடகவியலாளர் சந்திப்பு முடிவடைந்து வெளியேறும் போது கோஷங்கள் எழுப்பினர். அடுத்த ஜனாதிபதி வாழ்க என்று விண்ணதிர அவர்கள் கோஷமிட்டனர். (ந-5)

## குற்றங்களும் கைதுகளும்

கண்டி

### இனந்தெரியாத குழு தாக்கி மாணவன் காயம்



கண்டி, வத்துகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றின் வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் குழுவொன்று, மேற்கொண்ட தாக்குதலில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று வத்துகாமம் பொலிஸில் தெரிவித்தனர். அந்த பாடசாலை மாணவன் ஒருவனுக்கும் வெளியிலுள்ள இளைஞர் ஒருவருக்கும் பாடசாலை வளாகத்துக்கு வெளியில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக பாடசாலை வளாகத் துக்குள் புகுந்த குழு வொன்று அதிபர் உட்பட ஆசிரி யர்கள் மீது தாக்குதலை மேற் கொள்ள முயன்றுள்ளதுடன் மாண வன் ஒருவன் மீதும் தாக்குதலை மேற் கொண்டு சென்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

மதவாச்சி

### தம்பதியர் மீது திராவக வீச்சு

மதவாச்சி — உணகஸ்வெவ பிரதேசத்தில் தம்பதியர் திராவக வீச்சுக்கு இலக்காகியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் மதவாச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
இதேவேளை தனிப்பட்ட காரணங்களுக்காக திராவக வீச்சில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சந்தேகநபர் உணகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

கொழும்பு

### ஜனாதிபதி வருகையின்போது துப்பாக்கி ரவை வைத்திருந்தவர் கைது



கொழும்பு, நவ.22
ஜனாதிபதியின் வருகையின் போது துப்பாக்கி ரவைகளை தன்வசம் வைத்திருந்த மத்திய வங்கி பாதுகாப்பு அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.
மத்திய வங்கியின் ஏற்பாட்டில் பத்து ரூபா நாணயக் குற்றிகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்வு மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்தது. ஜனாதிபதியின் வருகைக்கு சற்று முன்னர் அவரது பாதுகாப்புப் பிரிவினர் மத்திய வங்கி ஊழி யர்கள் மற்றும் அவர்களின் உடைமைகளை பரிசோதனை செய்தனர். அதன்போது வங்கியின் பாதுகாப்பு அதிகாரி யொருவரின் பையில் இருந்து நான்கு துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர், அங்கிருந்து உடனடியாக அழைத்துச் செல்லப்பட்டார். குறித்த சந்தேக நபர் முன்னர் கடற்படையில் இணைந்து பணியாற்றிய ஒருவர் என்றும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# மட்டக்களப்பு சிவில் சமூகப்பிரதிநிதிகளை சந்தித்த அமெரி.இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள்

மட்டக்களப்பு, நவ.22
அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள், மட்டக்களப்பிலுள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகளையும் தமிழ் மற்றும் முஸ்லிம் முக் கியஸ்தர்களையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடி யுள்ளனர்.
மட்டக்களப்பு பிரஜைகள் சபையின் தலைவர் எஸ்.கமலதாஸ் தலைமையில் அதன் உறுப்பினர்களை கல்லடி அலுவலகத்தில் ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் சந்தித்தனர்.



மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் ஆரையம்பதி முக்கியஸ்தர்கள், சர்வமத முக்கியஸ்தர்கள், மதப் பிரமுகர்கள், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்கள்.
அதன்போது மட்டக்களப்பு மாவட்ட மக்களின் தற்போதைய நிலைமை, அபிவிருத்தி நடவடிக்கைகள், இன நல்லுறவு பற்றி அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் கேட்டறிந்தனர்.
இலங்கையின் அரசியல் விவகாரங்களில் அமெரிக்கா ஒருபோதும் தலையிடாது. அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான உறவு என்றும் நிலைத்திருக்கும். மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கும் என ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் கூறினர் என்று மட்டக்களப்பு பிரஜைகள் சபையின் தலைவர் எஸ்.கமலதாஸ் தெரிவித்தார்.
ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்க திணைக்கள அதிகாரிகளான பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் மாலைதீவுக்கான காரியாலயத்தின் பணிப்பாளர் திருமதி கிளீன்டன் எஸ்.ராட்பிறவுன் மற்றும் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான பிரதி தலைவர் சியோபான் ஓட் ஐட்ஜ் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.
இந்த சந்திப்பில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் எம்.ஐ.எம்.சுபைர், அதன் நல்லிணக்கக்குழு தலைவர் யு.எல்.எம்.என்.முபீன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமங்கராசா தலைமையிலான சிவில் சமூக அமைப்பின்பிரதிநிதிகளையும் தனித்தனியே அவர்கள் சந்தித்து கலந்துரையாடினர். (ற)

# 2014 இற்கான அறிவியலுக்கான உயரிய விருது இந்திய விஞ்ஞானிக்கு

வொஷிங்டன், நவ:22
அமெரிக்காவில் அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் சிறந்த பங்களிப்பை வழங்குவோருக்கு ஆண்டு தோறும் தேசிய அளவில் விருது வழங்கி கௌரவிக் கப்படுகிறது. அந்தவகையில் இந்த ஆண்டுக்கான அறிவியலுக்கான தேசிய விருது, அங்கு வசிக்கும் தோமஸ் கைலாத் என்ற இந்தியருக்கு வழங்கப்பட்டது.



தகவல் மற்றும் அமைப்பு அறிவியல் துறையில் ஆற்றிய சிறந்த பணிக்காக அவருக்கு உயரிய விருது வழங்கப்பட்டது.
அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜனாதிபதி ஒபாமா இந்த விருதை வழங்கினார்.
இந்தியாவில் இருந்து 22 வயதில் அமெரிக்கா வந்த தோமஸ் கைலாத், தகவல் கோட்பாடு மற்றும் புள்ளி விவர பிரிவில் சிறந்த பங்களிப்பை வழங்கியதுடன், 1100 இற்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கியதாக தெரிவித்தார். அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் தோமஸ் கைலாத் புரிந்த சாதனைகளுக்காக அவருக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

## சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ் .மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் நிறுவுநர் அமரர் சண்முகம் ஞானப் பிரகாசத்தின் 24ஆவது சிரார்த்த தின நிகழ்வு சமாசப் பணிமனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும். (வ)

## பெருவிழா


யாழ்ப்பாணம், நவ. 22
4 ஆவது சிவவேள்விப் பெருவிழாவும் திருமுறைப் பெருவிழாவும் சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோயிலில் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ-ரி)

# அரசியல் தீர்வு வெறுமனே மக்களுக்குரிய தீர்வாகாது

## ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு, நவ.22
அரசியல் தீர்வு வெறுமனே ஒரு பிரதேசத்துக்குரிய, மக்களுக்குரிய தீர்வாக இருக்க முடியாது என்று ஜனாதி பதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.
கிழக்கைப் போன்று வடக்கு, மலையகம், ஏனைய பிரதேசங்களிலும் வாழ்கின்ற தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு சரியான திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது தமிழர்கள் அனைவரின் கடமையாகும் என்றும் அவர் கூறினார்.
ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு நகரிலுள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,
தன் மூன்றாவதுமுறை மக்கள் ஆணைக்காக மக்கள் முன் செல்வதற்கு தயாராகவுள்ளார் என்ற விடயத்தை தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார். அதேபோல், தேர்தலுக்கான தினம் தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்படவுள்ளது. . இந்தக் காலத்தில் மக்கள் ஆணையை பெற வேண்டும். ஏனென்றால், கடந்த நான்கு வருடங்களில் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல கேள்விகள் எழுந்திருக் கின்றன. அதற்கெல்லாம் பதில் கூறும் வகையில் ஜனாதிபதி, மக்கள் முன் சென்று ஆணையை பெற வேண்டும் என்ற எண்ணத்தை முன்வைப்பது வரவேற்கத்தக்க விடயம்.
பலர் தங்களது கடைசி நாள் வரும்வரைக்கும் இருந்து விட்டு, அதற்குப் பின் முடிவெடுப்போம் என்ற நிலையில்லாமல், தனது 6 வருடங்களை பூர்த்திசெய்வதற்கு முன்னாலேயே மக்கள் ஆணையைப் பெறவேண்டும் என்று ஜனாதிபதி எடுத்த முடிவை நான் முழுமனதாக பாராட்டுகின்றேன்.
அரசு கடந்த நான்கு வருடங்களில் முன்னெடுத்த விடயம் உட்கட்டமைப்பை இந்த நாட்டில் உருவாக்கவேண்டும். வீதிகள், மின்சார வசதி, பாலங்கள் போன்றவை யெல்லாம் கட்டப்பட வேண்டும். அதன் ஊடாக இங்கு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும். முக்கியமாக தொழிற்சாலைகளை எமது நாட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட திட்டத்திலேயே, இன்று மக்களின் வாழ்வாதாரத்துக்கு சரியான தீர்வை காண வேண்டும் என்ற விதத்தில் ஜனாதிபதி மக்கள் மத்தியில் சென்று கடந்த நான்கு வருடங்களும் உட்கட்டுமானத்தில் அபிவிருத்தியைச் செய்திருக்கின்றார்-என்றார். (வ)

# கல்லடிக் கடற்கரையில் ஒதுங்கிய விசித்திர மீன்



மட்டக்களப்பு, நவ.22
மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் பாரியளவிலான விசித்திர மீன் ஒன்று நேற்றுமுன்தினம் கரை யொதுங்கியுள்ளது.
இவ்வாறாக இறந்த நிலையில் கரையொதுங்கிய மீனினமானது சுமார் நான்கு அடி நீள முடையதாக காணப்பட்டது. அண்மைக்காலமாக கடல் வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்ற நிலையில் இந்தச் சம்பவமும் நடந்துள்ளது.
இவ்வாறு கரையொதுங்கிய மீனை அதிகளவிலான பொது மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ற)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.22
இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 24 பேருக்கும் மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம், இராமேஸ்வரம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி 4 படகுகளுடன் 16 மீனவர்களும், படகு பாறையில் சிக்குண்டு கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட 4 மீனவர்களும், படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில் கடந்த மாதம் 7 ஆம் திகதி மீட்கப்பட்ட 4 மீனவர்களும் உட்பட 24 மீனவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான விளக்கமறியல் நேற்று முடிவடைந்தநிலையில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் மீனவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(கு-14-4-86)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# இலங்கையுடன் பேசும் வரை எல்லையைத் தாண்டாதீர்கள்

## இந்திய மீனவர்களைக் கேட்கிறார் சுஷ்மா



புதுடில்லி, நவ 22
மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் இலங்கையுடன் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக இந்தியா அறிவித்துள்ளது. அதுவரை இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்ட வேண்டாம் எனக் கேட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இந்தியா இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணும் வரை, சிறையில் இருக்கும் 24 மீனவர்களை விடுவிக்கும் வரை இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட வேண்டாமென அவர் கேட்டுள்ளார். தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே இதனை தெரிவித்த அவர், மீனவர்கள் கடல் எல்லையை கடப்பதன் மூலம் நிலைமையை மேலும் சிக்கலாக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

அரசு, மீனவர் அமைப்புகள் இடையிலான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கைது செய்யப்பட்டு இலங்கையில் தடுத்துவைக்கபட்டிருக்கும் மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் மீட்க முயற்சிகளை மேற்கொள்வோம். எனினும் மீனவர்கள் மீண்டும் இலங்கையின் எல்லைக்குள் மீன்பிடிக்கச் சென்று நிலைமையைச் சிக்கலாக்கலாம் என சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். அத்துடன் இவ்வாறான சம்பவம் நடக்காமல் பார்க்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.(கு)

## கார் விற்பனைக்கு

KExxxx தொடரிலக்கமுடைய Toyota Vios Light Color கார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:
077 3747825, 077 6152992
(41417) (10)

## வங்கியியல் கற்கைநெறி

CBF/IABF DBF/DABF
இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்.
❋ எமது வழமையான ஆசிரியர் குழாம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்:23.11.2014 (ஞாயிறு)
தொடர்பு: K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசான்)
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்
T.P.: 077 459 8430

## ALL OUT
Pest control service

கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்



தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5697, 021 499 3200

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

வவுனியா, நவ 22
வவுனியா, தவசிக்குளம் பகுதியில் பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு தனது மாட்டைத் தேடி வீட்டின் பின்புறமாகவுள்ள காட்டை நோக்கிச் சென்றபோது பன்றிக்கு வைத்த சட்டவிரோத மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டாரென உறவினர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் வவுனி யா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.மோகன் (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவர். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(கு)

# விபத்தில் மாணவி சாவு

கொழும்பு, நவ 22
கண்டி, மடவளை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஆரம்ப பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மடவளை, அல்முனவ்வரா ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி பயிலும் 9 வயதுடைய அப்ரின் சவாஹி என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவி, பாடசாலை செல்வதற்காக பாதை ஓரமாகச் சென்று கொண்டிருந்த போது ஆற்றுமணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனமொன்று இவர் மீது மோதியுள்ளது.

சிறுமி கண்டி வைத்திய சாலைக்கு கொண்டுச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் இராசையா



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் இராசையா 20.11.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, யோகசிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற துரையப்பா சரஸ்வதியின் மைத்துனியும், கமலாதேவி, காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் ஞானேஸ்வரி, கனகேஸ்வரி, பரராஜசிங்கம் (கனடா), தியாகராசா (கனடா), மகேஸ்வரி (கனடா), புவனேசராசா (கனடா), யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், மகேசலிங்கம், காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் யோகராசா, செல்வராசா, ஜெயந்தராணி (கனடா), அருள்சாந்தினி (கனடா), மனோகரசிங்கம் (கனடா), உதயமலர் (கனடா), செல்வரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், தர்சினி (ஆசிரியை சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)-சுதாகரன் (உ.கணக்காய்வு உத்தியோகத்தர் இ.போ.ச), திருபரன், அனித்தா (யாழ். பல்கலைக் கழகம்)-சசிகரன் (மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்), அனுஷியா (யாழ். பல்கலைக்கழகம்), ஜீவிதா (ஆசிரியை, ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை) தயாமோகன் (வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி) சகீதா (சாவகச்சேரி பிரதேச சபை)-பாஞ்சாலன் (சுவிஸ்) மற்றும் கனடாவைச் சேரந்தவர்களான கிஷானி, கிதூசன், நிருஷாணி, துவாரகன், சரணியா, ரோகணன்-மயூரி, சகுந்தன்-சிமோனா, பிரிந்தன்-துளசிகா, சுபதா-காண்டீபன், புவனியா, நூவனியா, அபிஷன், ஜேர்மனியைச் சேர்ந்த சுஜன், சுபியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யதிஷா, டிவாகன், ரஷ்மிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இராமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ். (C/1779) (10.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி பிரகாசம்



(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பிரகாசம் (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளராணியின் அன்புக் ï ð k AVANT ட் உத்தியோகத்தர்), ஜெசீலன் (ஆட்டோ சாரதி), ஜெயவதனன் (இலங்கை மின்சார சபை, குளப்பிட்டி), துர்க்காதரன் (குராசோ மாபிள் ஒப்பந்ததாரர்), கஜவர்ணன் (ஆட்டோ சாரதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிகரன் (வெளிமாவட்ட பேருந்து உரிமையாளர்), நந்தகுமாரி, கௌரி, தவரஞ்சினி, வரதராணி, பரிமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி, சுன்னாகம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பாவிலு சுவக்கின்பிள்ளை (சலமோன்)



4ஆம் கட்டை ஆனைக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு சுவக்கீன்பிள்ளை (சலமோன்) நேற்று (21.11.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாவிலு-ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சூசானம்மாவின் (புஸ்பம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆசீர்வாதம், பேதுரு, சூசைப்பிள்ளை மற்றும் செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பூமணி, றோஸ்மணி மற்றும் வசந்தன் (இத்தாலி), இர்ாக்கினி, ஜெறோம்,பாலதாஸ், வவா, ஜீவா (அமெரிக்கா) வதனா ரவி (பிரான்ஸ்) பாஸ்கரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், விஜயன், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்துரை, ஞானம், ராணி, இன்பராணி, குமார், ஜெனிற்றா தேவராசா, புனிதா, றெலி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (41425) (10.6)
தகவல்: மனைவி,
பிள்ளைகள்,
தொடர்பு: 072 2342411

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.